# திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள்



முனைவர்
க. குளத்தூரான்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

# திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள்

முனைவர் க. குளத்தூரான்
இணைப்பேராசிரியர்
தத்துவ மையம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-379-3

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 318
திருவள்ளுவராண்டு 2037, மார்கழி - திசம்பர் 2006

| | | |
|---|---|---|
| நூல் | : | திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள் |
| ஆசிரியர் | : | க. குளத்தூரான் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | :. | தத்துவம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2006 |
| பக்கம் | : | 8 + 130 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு. 70/- |
| படிகள் | : | 1000 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
# தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

## அணிந்துரை

வைணவத் தலங்களின் முதன்மையானது திருவரங்கம். பூலோக வைகுண்டம் என்றே இத்தலம் அடியார்களால் கொண்டாடப் பெறுகின்றது. ஆழ்வார்கள் பதின்மராலும் பாடப்பெற்ற பெருமையுடையது இத்திருத்தலம். பெரிய கோயில் என்பதும் இதற்குப் பெயர்.

சரு ஆளும் புள்ளாளன், மண்ணாளன், செருச்செயும்
நாந்தம் என்னும்
ஒரு வாளன், மறையாளன், ஓடாத படையாளன்
விழுக்கை யாளன்,
இரவு ஆளன், பகலாளன், எனையாளன், ஏழுஉலகப்
பெரும்பே ராளன்
திருவாளன், இனிதாகத் திருக் கண்கள் வளர்கின்ற
திருவரங்கமே."

என்று அரங்கநாதன் உறையும் திருவரங்கத்தின் பெருமையைப் பாடுவார் பெரியாழ்வார்.

இத்தகைய அருமையும் பெருமையும் மிக்க திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்களை ஆயவு செய்து நூலாக வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் க. குளத்தூரான் அவர்களின் முயற்சிகள் பெரிதும் பாராட்டிற்குரியனவாம்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | திருவிழக்காளின் காலமும் பண்புகளும் | 7 |
| 3. | உற்சவ மண்டபங்கள் | 33 |
| 4. | திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள் அமைப்பு முறை | 47 |
| 5. | திருவிழாக்களின் பொருளும் செய்தியும் | 89 |
| 6. | திருவிழாக்களும் சமுதாயமும் | 103 |
| 7 | முடிவுரை | 107 |

# 1. முன்னுரை

திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்களின் தத்துவ, சமய, சமூகப் பண்பாட்டு முக்கியத்துவத்தை இனங் காண்பதும் விளக்குவதும் இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களாகும்.

திருவரங்கம் அரங்கநாதர் ஆலயம் ஒரு தென்கலை வைணவர் கோயிலாகும். திருச்சி அருகே ஐந்துகல் தொலைவில் இக்கோயில் காவிரியால் சூழப்பட்ட தீவில் அமைந்துள்ளது. பெரும்பான்மையான ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்ட தலமாகும். வைணவ திவ்ய தேசங்களில் மிகவும் பெருமை பெற்றது. இராமானுசர் இத்தலத்தில் இருந்து பெருஞ் சமயத் தொண்டு செய்துள்ளார். திருவரங்கம் கோயிலொழுகுச் செய்திகள் இராமானுசர் இக்கோயிலை எவ்வாறு நிர்வாகம் செய்தார் என்பதை விளக்குகிறது.[1]

ஒரு வைணவத் தலத்தின் திருவிழாக்களை ஆய்வு செய்வதின் மூலம் தமிழக வைணவக் கோயில்களின் திருவிழாக் களின் பொதுப்பண்புகளை அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தின் திருவிழாக்களின் தனித் தன்மையையும் எடுத்துக் காட்டமுடியும். இவ்விழாக்களின் தத்துவ, சமய, சமூக, பண்பாட்டு முக்கியத்துவத்தையும் அவை மக்கள் மீது ஏற்படுத்துகின்ற பாதிப்புகளை வெளிக்கொணர் வதும் இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன. ஒரு முன்னாய்வு (Pilot study) என்ற நிலையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதனால் தொடர்ந்து வைணவத் தலங்களின் திருவிழாக்களின் பொதுத்தன்மையையும்,

தனித்தன்மையையும் ஆராய வழிகள் பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வைணவ பாஞ்சராத்ர மற்றும் வைகானச ஆகமங்கள் வைணவ ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்தும் முறைகளைப் பற்றி விவரிக்கின்றன. பாஞ்சராத்ர ஆகமத்தில் மூன்று வகையான திருவிழாக்கள் வைணவக் கோயில்களில் நடத்தப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.[2]

முதலாவதாக நித்ய உற்சவங்கள் பற்றிக் கூறப் பட்டுள்ளன. இவை தினந்தோறும் கோயிலில் நடத்தப்படுவது அல்லது மாதந்தோறும் நடத்தப்படும் முறையான உற்சவங்கள் ஆகும். இத்தகைய உற்சவங்களை இவ்வாய்வில் முக்கியத்துவப் படுத்த முனையவில்லை.

மேலும் இரண்டு முக்கிய உற்சவங்களாகக் கருதப் படுபவை நைமித்திக, காமிய உற்சவங்களாகும். வருடந்தோறும் முக்கிய நாள்களில் கொண்டாடப்படும் உற்சவங்கள் உள்ளன. தெய்வங்களின் பிறந்தநாள் விழா, திருக்கல்யாணம் அல்லது கோயிலின் முக்கிய உபயதாரர்களின் பிறந்தநாள் மற்றும் வசந்தகாலம் அல்லது கோடைகாலம் அல்லது அறுவடை காலத்தில் முக்கியமாக நடத்தப்படும் உற்சவங்கள் நைமித்திக உற்சவங்களாகக் கருதப்படுகின்றன. இவை இவ்வாய்வில் முக்கிய ஆய்வு மூலங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மேலும் சில முக்கிய காரணங்களுக்காக நடத்தப்படும் திருவிழாக்கள் உள்ளன. தெய்வ நம்பிக்கை மிகுந்தவர்கள் தங்கள் கர்ம பலன்களை நீக்கிக் கொள்வதற்காகவும், மக்கள் தாங்கள் செய்த தவறுகளுக்கு பரிகாரம் வேண்டி நடத்தும் திருவிழாக்களும், இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் நடத்தப்படும் உற்சவங்களும் உள்ளன. இவ்வுற்சவங்கள் காமிய உற்சவங்கள் என அழைக்கப்படுகின்றன. இத்தகைய உற்சவங்கள் தனியாக இக்கோயிலில் நடத்தப்படவில்லை என்பது இங்கு அறியத்தக்கது.

பொதுவாக நைமித்திக, காமிய உற்சவங்களில் ஏராளமான மக்கள் கூட்டத்தினர் பங்கு கொள்கின்றனர். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் கூடுகின்றனர்.

ஆதலால் இவ்வுற்சவங்கள் மக்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் நடத்தப்படுகின்றன. இவ்வுற்சவங்களே இங்கு ஆய்வுக்கு மூலங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் மீது அவை ஏற்படுத்தும் பாதிப்பை எடுத்துக்காட்டுவதும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூக வாழ்க்கையின் முக்கிய மையங்களாக கோயில் களும் அங்கு நடைபெறும் உற்சவங்களும் விளங்குகின்றன. இறையுணர்வும், அறமும், சமூக நீதியும், ஒற்றுமையும் திருவிழாக் காலங்களில் மக்களுக்கு திருவிழா என்ற வடிவம் மூலமாக பரப்பப்படுகின்றன. இவ்விழாக்கள் செய்தித் தொடர்பின் ஒரு சாதனமாக விளங்கி மக்களுக்கு நற்கருத்துக்களைப் போதிக் கின்றன; மகிழ்ச்சியூட்டுகின்றன. இவ்வுற்சவங்கள் மக்களை ஒருங்கிணைப்பதற்காகவும் பண்பாட்டுக் கூறுகளையும் நம்பிக்கைகளையும் பரிமாற்றம் செய்வதற்காகவும் நடத்தப் படுகின்றன. பொதுவாக, பல கோயில்களில் உற்சவங்கள் சரியான முறையில் நடைபெறுவதில்லை. சில கோயில்களில் சில வேளைகளில் சில உற்சவங்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றன. இந்நிலைமைக்கு சமூக, பொருளாதார காரணங்கள் கூறப்படு கின்றன. இத்திரு விழாக்களின் தத்துவ சமயப் பின்னணியையும் இவ்விழாக்களின் உட்பொருளாக, குறியீடாக எவ்வாறு தத்துவச் சிந்தனைகள் பின்னிப் பிணைந்துள்ளன என்பதும் இங்கு சிந்திக்கற்பாலது.

விழாக்களின் பல்வேறு கூறுகளும் பகுப்பாய்வு முறையில் ஆராயப்பட்டு ஒவ்வொரு விழாவின் தனித்தன்மைகளும் எடுத்துக் காட்டப்படும். கீழ்க்கண்ட அமைப்பில் விழாக்களின் கூறுகள் பகுப்பாய்வு முறையில் ஆராயப்பட்டுள்ளன.

1. உற்சவ மூர்த்திகள்
2. வாகனங்கள்
3. சடங்குகள், பூசைகள், மந்திரங்கள்
4. திருவிழாக்களில் காலக் கணக்கீடு
5 திருவிழாக்களுடன் தொடர்புடைய புராணங்கள், இலக்கியங்கள்
6. திருவிழாக்களின் உட்பொருள், நோக்கம்
7. திருவிழாக்களின் குணவேறுபாடுகள் மற்றும் முறைமை

8. திருவிழாக்கள் பாதிக்கப்படுவதின் காரணங்கள்
9. சமய, சமூக, பண்பாட்டு முக்கியத்துவம்
10. உற்சவ மண்டபங்கள்

ஒரு விழாவின் மேற்கண்ட கூறுகள் வைணவ ஆலயமான திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் நடைபெறும்

கோடை உற்சவம்,
வசந்த உற்சவம்
ரத உற்சவம்
தெப்ப உற்சவம்
பவித்ர உற்சவம்
ஊஞ்சல் உற்சவம்
மகோத்சவம் (வைகுண்ட ஏகாதசி)
பிரம்மோத்சவம்

மற்றும் இதர உற்சவங்களில் அமைந்துள்ள நிலையானது பகுப்பு ஆய்வுமுறையில் எடுத்துக்காட்டப்படும். உற்சவங்களும் அவை மக்களுக்கு ஏற்படுத்துகின்ற பாதிப்புகளும் சமூகப் பின்னணியிலும் செய்தித் தொடர்பு முறையிலும் ஆராயப்பட வுள்ளது.

இவ்வாய்விற்கான தகவல்கள் திருவரங்கத்தில் ஓர் ஆண்டில் (1996 ஏப்ரல் முதல் 1997 மார்ச் முடிய) நடைபெற்ற அனைத்து திருவிழாக்களும் பார்வையிடப்பட்டு களப்பணி மேற்கொள்ளப்பட்டு சேகரிக்கப்பட்டன. பட்டர், அரையர், வைணவ ஆய்வு நிறுவனங்கள், நிர்வாகத்தினர் மற்றும் பொது மக்கள் ஆகியோருடன் கலந்துரையாடி செய்திகள் சேகரிக்கப் பட்டன. திருவிழாக்களை பல வருடங்களாக தொடர்ந்து பார்வையிட வரும் வைணவ பக்தர்கள், சத்திரத் தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு விழாப்பற்றிய நிகழ்வுகளையும் செய்தி களையும் விளக்கிக் கூறியுள்ளனர். விழாக்களை நேரில் கண்டு களித்தும் பக்தர்களுடன் உரையாடியும் தகவல்கள் பல சேகரிக்கப்பட்டன. தேவையான நிழற்படங்கள் அனுமதிக்கப் பட்ட இடங்களில் எடுக்கப் பெற்றுள்ளன. திருவரங்கம் ஆலயத்தில் பிற வைணவத் தலங்களைக் காட்டிலும் மிகுதியான உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. முறையாக ஆண்டுதோறும் நடத்தப்படும் உற்சவங்கள் அவ்வக் காலங்களில் சிறப்பாக

எந்தவித மாற்றமும் இல்லாமல் நடத்தப்படுகின்றன. பலகாலமாக இவை ஒழுங்காகத் தங்கு தடையின்றி நடத்தப்படுகின்றன. நிர்வாக ஒழுங்கும் செல்வச் சிறப்பும் மிக்க இக்கோயிலில் உற்சவங்கள் ஒழுங்காகவே நடத்தப்படுகின்றன.

திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தின் திருவிழாக்கள் பற்றிய செய்திகள் இவ்வாய்வுமூலம் மக்களுக்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. மிகப்பெரிய அளவில் நடைபெறும் திருவிழாக்கள் மக்களிடையே எவ்வாறு சமூகச் செய்தித் தொடர்பை ஏற்படுத்துகின்றன என்பதும் சமூக ஒற்றுமையை எவ்வாறு நிலை நாட்டுகின்றன என்பதும் விளக்கப்பெறும். இதனால் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு 'திருவிழா' என்ற சமயச் செய்தித் தொடர்புச் சாதனம் எவ்வாறு பயன்படுத்தப் படலாம்; வளர்க்கப்படலாம் என்பதைப் பற்றிய தெளிவு பிறக்கும். சமய மற்றும் தத்துவ, பண்பாட்டு மதிப்புக்கள் மக்களிடையே எவ்வகையில் திருவிழாக்கள் மூலமாக பரிமாற்றமடைகின்றன என்பதும் தெரியவரும். திருவிழாக்கள் ஏதோ மகிழ்ச்சியூட்டுவதற்காக என்றில்லாமல் அவை சமூக, சமய தத்துவ மதிப்புக்களையும் கருத்துக்களையும் மக்களிடையே போதிக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதும் இவ்வாய்வின் முக்கியத்துவங்களாகும்.

இந்திய நாட்டின் பண்பாட்டுச் சிறப்பை, பாரம் பரியத்தை வெளியுலக மக்களுக்கும் யாத்ரிகர்களுக்கும் எடுத்துக் காட்டுவது இன்றியமையாத தேவையாகும். ஏராளமான மக்கள் தொகுதியினர் இவ்விழாக்களில் பங்குகொள்கின்றனர்; பல்வேறு சமயத்தினரும் பங்கு கொள்கின்றனர். சமய ஒற்றுமை; நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை ஆகியவற்றை மக்களிடையே வளர்க்க விழாக்கள் பெரிதும் பயனுடையன. ஆதலால் விழாக்களின் இத்தன்மைகளை தெளிவாக எடுத்துக்காட்டுவதும் மக்களுக்கு இவ்விழாக்களின் இயல்புகளை எடுத்துக் கூறுவதும் முக்கியப் பணியாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. பார்க்க மலையாண்டி, ஆ., *1996*, பக். *35 - 60*
2. Daniel Smith, H, 1982, P.27

## 2. திருவிழாக்களின் காலமும் பண்புகளும்

ஒரு செய்தித் தொடர்பு முறைமையில் (Communication Process) செய்தி அறிவிப்பாளர், செய்தி, சாதனம் மற்றும் செய்தி பெறுபவர் ஆகிய உறுப்புக்கள் உள்ளன. இம்முறைமையில் யார், எதை, எந்தவழி மூலமாக, யாருக்கு, என்ன விளைவுகளுடன் (Who says, what, in which channel, to whom , with what effect) சொல்கிறார் என்பது முக்கியமான கூறுகளாகும்.[1] செய்தித் தொடர்பினை மக்களுக்கு ஏற்படுத்த விரும்புகின்ற ஒரு நிறுவனம் அல்லது கோயில் போன்ற சமய நிறுவனங்கள் மக்களிடம் ஒன்றைச் சொல்ல வேண்டும்; அது அவர்களிடம் நல்விளைவு களை ஏற்படுத்த வேண்டும் என்று கருதியே செயல்படுகின்றன. இவ்விளைவினை ஏற்படுத்த அக்கோயில் நிறுவனம் சில வழிமுறை களைக் கடைப்பிடிக்கின்றன. விளைவுகள் ஏற்படுத்த வேண்டும் என்று கூறும்போது மக்களின் மனதில், பண்பாட்டில் புதிய மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்பதைக் கருதி செயற்படுவதாகும். கோயில் போன்ற சமய நிறுவனங்கள் மக்களிடம் நற்கருத்துக்கள் பரவவேண்டும் என்றே கருதுகின்றன.

திருவிழா போன்ற செய்தித் தொடர்பு சாதனங்கள் பல நூற்றாண்டுகளாகவே கோயில்களில் பயன்படுத்தப்படுகின்றன. பாரம்பரிய செய்தித் தொடர்புச் சாதனங்களாகிய திருவிழாக்கள், நேரடியாகவும், சக்தியுடனும், ஒரே சீராகவும் சமூகத்தில் வாழும் மக்களிடம் நல்ல பாதிப்புகளை ஏற்படுத்த வல்லவை என சமய அறிஞர்களால் நம்பப்பட்டது. இவ்விழாக்கள் மூலம் ஒரே கருத்தானது திரும்பத் திரும்ப எவ்வித மாற்றமும் இல்லாமல் கூறப்படுகின்றது. காலந்தோறும் அவற்றில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. தாங்கள் சொல்ல நினைத்து வரையறுத்தத் தத்துவ முடிவுகள் அன்று முதல் இன்று வரை

மக்களிடம் சொல்லப்பட்டே வருகின்றன. புதிய கருத்துக்களோ சிந்தனைகளோ இங்கு இடம்பெற முடியாது. ஏனென்றால் இவற்றை ஆகமங்கள் ஒரு சட்டம்போல் வரையறுத்துள்ளன. இச்செய்தித் தொடர்பானது ஒரே நேர்கோட்டில் ஒருவழிப் பாதையில் (One way), மேலிருந்து கீழாக (Top-down) செல்கின்றன. ஒரு சக்தி வாய்ந்த அறிவிப்பாளரிடமிருந்து செய்தியானது எதையும் எதிர்ப்பின்றிப் பெற்றுக்கொள்ளும் ஒரு பார்வையாளரைச் சேருகிறது அல்லது மக்களைச் சென்றடைகிறது.

இத்தகைய திருவிழாக்கள் மக்களின் பார்வையிலும் நடத்தையிலும் பெரிய விளைவுகளை ஏற்படுத்துகிறதா என்பதைப் பற்றி சமய நிறுவனங்களாகிய கோயில்கள் அறிய முற்படவில்லை. தற்கால மக்கள் சமூகத்தில் தனிமனித வேறுபாடுகள் மிகுந்து காணப்படுவதின் காரணமாக திருவிழாக்கள் விளைவு ஏற்படுத்துவதில் சில வேறுபாடுகள் உள்ளனவா என்று கண்டறிய வேண்டும். மக்களில் சில பிரிவினர் சில விழாக்களில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. சில பிரிவினர் அனைத்து விழாக்களிலும் கலந்து கொள்கின்றனர். ஆதலால் மக்கள் விழாக்களை பார்வையிடுவதற்கும் தேர்ந்தெடுப்ப தற்கும் சில காரணங்கள் உள்ளன.

ஒரு விழாவில் நாம் சில காட்சிகளை மட்டுமே விரும்புகிறோம். சில காட்சிகளை விரும்புவதில்லை. நமது விருப்பு, வெறுப்பு, தேவை, மதிப்புகள், கருத்துக்கள் அடிப்படையில் இவற்றைத் தேர்ந்தெடுத்துப் பார்க்கிறோம்; கேட்கிறோம் (Selective exposure)[2].

அடுத்து ஒரு நிகழ்ச்சியை இரு பார்வையாளர் நோக்கும் விதம் வேறுபடுகிறது. ஒருவர் அணுகுவதைப் போன்று பிறிதொருவர் அணுகுவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் கொள்கைகள், தேவைகள் மதிப்புகளின் அடிப்படையில் ஒன்றை நோக்குகின்றனர் (Selective perception).[3]

திருவிழாக்களின் அனைத்து நிகழ்ச்சிகளும் செய்திகளும் நமது மனதில் நிலைப்பதில்லை. நமது எண்ணங்கள், விருப்பு

வெறுப்புகள், தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்றார்போல் அவை மனதில் நிலைத்த இடத்தைப் பெறுகின்றன; அல்லது தற்காலிக மான இடத்தைப் பெறுகின்றன; அல்லது இடம் பிடிப்பதில்லை (Selective retention).[4]

மேற்கூறிய மக்களின் ஆர்வங்களைப் பற்றி திருவிழாக்கள் நடத்தும் கோயில் சமய நிறுவனங்கள் ஆராய்வதில்லை. ஒருவழிப் பாதையிலேயே திருவிழாக்கள் மூலம் சில சமய தத்துவச் சிந்தனைகளை மக்களுக்கு கோயில் நிறுவனம் அறிவுறுத்த முற்படுகிறது.

திருவிழாக்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும்; என்னென்ன விழாக்கள் நடத்தப்பட வேண்டும் என்று கோயில் நிர்வாகம் தீர்மானிக்கின்றது; அல்லது சமய நிறுவனம் தீர்மானிக் கின்றது. இக்கோயில் நிர்வாகம் அல்லது ஒரு சமய நிறுவனம் இவ்விழாக்களை மக்களுக்கு நடத்த விரும்புகிறது. ஆனால் அவர்கள் விருப்பம்போல் திருவிழாக்களை அமைத்துக்கொள்ள முடியாது. காலம் காலமாக விழாக்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும், எம்மாதத்தில், எந்நாட்களில், எந்நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆகமங்கள் வரையறுத்துள்ளன. ஒரு வருடத்தில் எந்த விதமான விழாக்கள் வரிசைக் கிரமத்தில் எவ்வெவ் மாதங்களில் நடத்தப்பட வேண்டும் என்பதை அவை வரையறுத்துள்ளன. இத்தகைய ஆகமங்களை கோயில் அதிகாரிளும் கோயில் குருக்களும் அல்லது பட்டர்களும் எடுத்துக் காட்டுகின்றனர். இவற்றில் கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே இவை நடத்தப்படுகின்றன என்று கூறுவர்.

வைணவ ஆலயங்களில் பாஞ்சராத்ர ஆகமங்களின் அடிப்படையிலேயே திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. பாஞ்சராத்ர ஆகமங்கள் திருவிழாக்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று விவரிக்கின்றன. பாஞ்சராத்ர ஆகமங்கள் நூற்றெட்டு எனக் கூறுகின்றனர். கூடுதலாகவும் இவை இருக்கக் கூடும் என்று பலர் கூறுகின்றனர். பல நூல்கள் இதுவரை பதிப்பிக்கப்பட்டுள்ளன. பல நூல்கள் இன்னும் பதிப்பிக்கப்பட வில்லை. இந்நூல்களிலும் சில நூற்களே திருவிழாக்கள் பற்றி விவரிக்கின்றன.[5] இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஆகமங்களில் திருவிழாக்கள் பற்றிக்கூறும் ஆகமங்கள் பின்வருமாறு : அகஸ்திய

சம்ஹிதா, அனிருத்த சம்ஹிதா, பிருஹத் பிரம்ம சம்ஹிதா, ஹயங்ரீரீ சம்ஹிதா, ஈஸ்வர சம்ஹிதா, ஜெயாக்ய சம்ஹிதா, கபிஞ்சால சம்ஹிதா, மார்க்கண்டேய சம்ஹிதா, நாரதீய சம்ஹிதா, பத்ம - சம்ஹிதா, பரம சம்ஹிதா, பௌஷ்கர சம்ஹிதா, பரமேஸ்வர சம்ஹிதா, பரமபிருத சம்ஹிதா, பராசர சம்ஹிதா, புருஷோத்தம சம்ஹிதா, சாத்வத சம்ஹிதா, சேஷ சம்ஹிதா, சாண்டில்ய சம்ஹிதா, சனத்குமார சம்ஹிதா, ஸ்ரீபிரசன்ன சம்ஹிதா, விஷ்வக்சேன சம்ஹிதா, விஷ்ணு சம்ஹிதா, விஷ்ணு திலக சம்ஹிதா, விஷ்வாமித்ர சம்ஹிதா ஆகியவையாகும்.

'உற்சவா' (Utsava) என்பது தமிழில் 'திருவிழா' என்று கூறப்படுகிறது. உற்சவம் என்பது 'துன்பங்களை களைவதற்கான' ஒரு செயல் என்றும் 'தடைகளை நீக்குவதற்கான' ஒரு செயல் என்றும் 'சம்சாரத்திலிருந்து விலகிச் செல்வதற்கான' ஒரு செயல் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.[6] இவ்விழாக்களை பயபக்தியுடன் செய்வோமென்றால் நமது மனநிலையில் அவை ஒரு நல்ல விளைவை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. ஆதலால் நம்பிக்கையுடன் ஒருவர் ஒரு விஷ்ணு கோயிலில் ஒரு விழாவை நடத்த முயன்றால் அது அத்திருவிழாவை நடத்த உதவியாய் இருந்தவருக்கும் மக்களுக்கும் நன்மைகள் உண்டு பண்ணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாஞ்சராத்ர ஆகமங்கள் மூன்று வகையான உற்சவங்களைப் பற்றி விவரிக்கின்றன. முதலாவதாக நித்ய உற்சவங்கள் (nitya - utsavas). இவ்விழாக்கள் அல்லது பூசைகள் தினந்தோறும் அல்லது மாதந்தோறும் கோயில்களில் நடத்தப் படுகின்றன. இவை பல இடங்களில் பூசை அல்லது அர்ச்சனை என்று கூறப்படுகின்றன. இத்தகைய நித்ய பூசைகளுடன் சில வேளைகளில் ஏகாதசி, துவாதசி நாள்களிலும் பௌர்ணமி நாள்களிலும் நடைபெறும் திருவிழாக்களும் அல்லது சில முக்கிய நட்சத்திரங்களில் நடத்தப்படும் விழாக்களும் உண்டு. அவையாவன : 'மாதோத்சவ' அல்லது 'அமாவாசயோத்சவா' எனப்படும். இவ்வாறான உற்சவங்களைப் பற்றி பாஞ்சராத்ர ஆகமங்கள் ஏராளமாக விவரிக்கின்றன. இவ்வாறான நித்ய உற்சவங்களைப் பற்றி நாம் இங்கு ஆராய முற்படவில்லை. நாம்

இங்கு கருதவிருக்கின்ற விழாக்கள் மக்கள் மத்தியில் பொதுவாகக் கருதப்படும் பெரிய 'திருவிழாக்கள்' ஆகும். இவ்விழாக்கள் மிகவும் விமரிசையாக, பெரிய கொண்டாட்டமாக பெரும் பான்மையான மக்களை உளப்படுத்தி கோயில்களில் நடைபெறுவனவாகும்.

மேலும் இரண்டு உற்சவங்களை பாஞ்சராத்ர ஆகமங்கள் பாகுபாடு செய்கின்றன. 'நைமித்திக' மற்றும் 'காமிய' உற்சவங்கள் என்று அவை கூறப்படுகின்றன. தெய்வத்தின் திருக்கல்யாணம் அல்லது திருமணநாள், அல்லது கோயிலை ஆதரித்தவர்களின் பிறந்தநாள் அல்லது திருமணநாள் அல்லது வசந்த காலத்தில் நடைபெறும் (Spring season) திருவிழா அல்லது கோடை காலத்தில் நடைபெறும் திருவிழா, அறுவடை காலத்தில் நடைபெறும் விழா போன்றவை 'நைமித்திக' உற்சவங்கள் என்றழைக்கப்படுகின்றன. காமிய உற்சவங்கள் என்பன சில முக்கிய காரணங்களுக்காக நடத்தப்படுகின்றன. பக்தர்கள் தங்களது பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காகவும் வழிபாட்டில் தாங்கள் செய்த தவறுகளுக்குப் பரிகாரம் தேடிக் கொள்ளும் விதத்திலும், தங்களுக்கு இறைவன் செய்த உதவிக்கு நன்றி செலுத்தும் வகையிலும் நடத்தப்பெறும் விழாக்கள் காமிய உற்சவங்கள் என்றழைக்கப்படும்.

மேற்கூறிய இரண்டுவகை உற்சவங்களிலும் விரிவான ஏற்பாடுகளும் சில முறையான நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்படு கின்றன. இத்திருவிழாக்கள் நடத்துவதற்கென்று திறமை வாய்ந்த குருக்கள் அல்லது பட்டர்களும் மற்றும் அதிகாரிகளும் பணியாட் களும் நியமிக்கப்பட்டுள்ளனர். திருவரங்கம் கோயிலொழுகு முந்திய காலங்களில் திருவிழாக்களின் நிகழ்ச்சிகளில் பணி செய்யும் ஒவ்வொரு பணியாளர்களின் செய்பாடுகளை விவரிக் கின்றது. இராமானுசர், கோயில் சடங்குகளைச் செய்வதற்கான பணியாட்களின் ஒவ்வொரு கடமையையும் வரையறுத்துள்ளார். அவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியங்கள் பற்றியும் கோயிலொழுகில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பல்வேறு வகையான பிராமண குடும்பங்களும், பிற சாதியினரும், பரம்பரை பரம்பரையாக இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். நித்ய உற்சவங்களும் மாத

உற்சவங்களும் ஒழுங்காக நடைபெறும். பெரிய விழாக்கள் அவ்வக்காலங்களில் நடைபெற்று வந்தபோதிலும் தினப்பூசைகளும் மாதோத்சவங்களும் முறையாக நடந்து கொண்டே இருக்க வேண்டும். ஆதலால் ஒரு கோயிலில் இரண்டு உற்சவங்களும் நடைபெறும் நாள்களில் பல நிகழ்ச்சிகள் அக்கோயிலில் நடைபெற்றுக்கொண்டே இருக்கும்; சுறுசுறுப்பாக கோயில் இயங்கிக் கொண்டிருக்கும். எத்தகைய பெரிய விழாக்கள் நடைபெற்றுவந்தபோதிலும் தினந்தோறும் நடைபெறும் விழாக்கள் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும்; நடைபெற வேண்டும். பெரிய விழாக்கள் நடைபெறும் நாள்களில் ஏராளமான அதிகாரிகளும் பணியாட்களும் சிறப்பு அதிகாரிகளும் அவர்களது உதவியாளர்களும் சில மண்டபங்களையும் கட்டடங்களையும் புதுப்பித்தலையும், கோயிலை சுத்தப்படுத்துவதையும் பல நிகழ்ச்சிகளை அமைப்பதிலும் தீவிரமாக ஈடுபடுவதைக் காணலாம். பெரிய திருவிழாக்களில் முதல்நாளில் ஏற்றுவதற்காக கொடியை தயாரிப்பதும் (dhvaja), கொடிக்கம்பத்தில் ஏற்றுவதும் (dhvajarohana), திக்பாலர்களுக்கு சிறப்பான படையல்களை அளிப்பதும் (balidhana); விதைகளை முளைய வைப்பதும் (ankurirpana) சில ஆவாகனங்கள் (avahana) செய்வதும், அக்னிக்குப் படையல்களை அளிப்பதும் (homas); கோயில் மூலவருக்கும் உற்சவருக்கும் சிறப்பு (snana) செய்வதையும் காணலாம். இது திருவிழாவின் முதற்கட்டமாக நடைபெறும். இறுதி நாள்களில் விழாவில் பங்குகொண்ட பிராமணர்களுக்கு ஊதியமளிப்பதும்; விருந்து படைப்பதும்; கோயில் உற்சவர்களை ஆற்றில் குளிப்பாட்டுவதும் நடைபெறுகின்றன. இவ்வாறான நிகழ்ச்சி நிரல்களை பாஞ்சராத்ர ஆகமங்கள் கிரமமாக விளங்குகின்றன. பாஞ்சராத்ர ஆகமங்களைப் பின்பற்றி திருவிழாக்கள் நடத்தப்படும் திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் இவ்வாறான நிகழ்ச்சிகளைக் காணலாம். பரமேஸ்வர சம்ஹிதை (குறிப்பாக) என்ற பாஞ்சராத்ர ஆகமமே இங்கு பின்பற்றப்படுவதாக அறியப்படுகிறது.

சில பாஞ்சராத்ர நூல்கள் எத்தகைய உற்சவங்களைப் பற்றி கூறாவிட்டாலும் மூன்று முக்கிய உற்சவங்களைப் பற்றிச் சொல்லத் தவறவில்லை. முதலாவதாக வருடந்தோறும் நடை

பெறும் பெரிய திருவிழாவான 'மகோத்சவம்' ஆகும். பல பாஞ்சராத்ர நூல்கள் மிகவும் விரிவாக இவற்றை விளக்குகின்றன. இந்த மகோத்சவங்கள் ஒன்பது அல்லது பத்து நாள்கள் நடைபெறும். பத்து நாள்களிலும் நடைபெற வேண்டிய முக்கியமான நிகழ்ச்சிகளை இவை விவரிக்கின்றன. உண்மையில் இவ்விழாவான மகோத்சவமானது அல்லது பிரம்மோத்சவமானது அல்லது ஸ்ரத்தோற்சவமானது கூடுதல் நாட்களிலோ குறைவான நாட்களிலோ நடைபெறலாம். பொதுவாக ஒன்று முதல் மூன்று நாட்கள் அல்லது ஐந்து நாட்கள் அல்லது ஏழு நாட்கள் அல்லது பன்னிரண்டு நாட்கள் அல்லது பதினைந்து நாட்கள் அல்லது முப்பது நாட்கள் வரை நடைபெறும்.

வழக்கமாக இந்த மகோத்சவமானது கோயிலின் மூல தெய்வத்தின் பிறந்த நட்சத்திரத்தில் நடைபெறும் அல்லது அக்கோயில் கட்டி முடிக்கப்பட்ட நாளினை நினைவுகூறும் வகையில் நடைபெறலாம். சில மகோத்சவங்கள் இயற்கையின் சீற்றங்களை போக்குவதற்காக நடைபெறலாம். அல்லது கோயில் புதுப்பிக்கப்பட்டதை கொண்டாட நடைபெறலாம். பொதுவாக மகோத்சவம் கோயிலின் எஜமானனை நினைவு கூறும் வகையில் நடைபெறுவதில்லை. அதேபோன்று அவ்விடத்து துறவி ஒருவரின் ஞாபகர்த்தமாக நடைபெறுவ தில்லை. சில ஸ்ரீ வைஷ்ணவக் கோயில்களில் ஒன்றிற்கும் மேற்பட்ட திருவிழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன. உதாரணமாக திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் மூன்று முக்கிய பெரிய திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இத்திருவிழாக்கள் ஆண்டின் வெவ்வேறு காலங்களில் நடத்தப்படுகின்றன. அதற்கான குறிப்பிட்ட நாள்கள் எதுவும் வரையறுக்கப்படவில்லை.

மகோத்சவத்தில் முக்கியமாக தினசரி புறப்பாடானது நிகழும். அப்போது உற்சவ மூர்த்திகள் அவ்வக்கோயில் தெருக்களில் வெவ்வேறு வாகனங்களில் வெவ்வேறு நாள்களில் வெளியே குறிப்பிட்ட வழியிடங்கள் வழியாக கொண்டு வரப்படுகின்றன. மகோத்சவ நாள்களில் ஒன்றிரண்டு நாள்கள் மிகவும் முக்கியமான நாள்களாகக் கருதப்படுகின்றன. இம்முக்கியமான நாள்களில் மிகப்பெரிய ஊர்வல நாளாக 'ரதோத்சவ' நாள் கருதப்படுகிறது. 'தேர்த்திருவிழா' முக்கியமான உற்சவ நாளாகும். இந்நாளில் பல நிகழ்ச்சிகள் நடைபெறு

கின்றன அல்லது இணைக்கப்படுகின்றன. இதுபோன்று மற்றுமொரு சிறந்த நாளாக மகோத்சவத்தில் கூறப்படுவது மூலவரின் உற்சவ படிமம் அருகாமையிலுள்ள ஆற்றில் குளத்தில் குளிப்பாட்டப்படும் நிகழ்ச்சியாகும். எண்ணெய், வாசனைப் பொருள்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி அதனை தூய்மை செய்து குளிப்பாட்டுவர். இந்நிகழ்ச்சி கோயிலிலிருந்து தொடங்கி ஆறு வரை பெரிய ஊர்வலமாகச் செல்லும். இறைவனோடு அதே வேளையில் ஆற்றில் குளிப்பவர்களுக்கு பாவங்களும் நீங்கிவிடும் என்றும் மோட்சம் கிடைக்குமென்றும் பாஞ்சராத்ர ஆகமங்கள் கூறுகின்றன. இவ்வாறான குளியல் நாளானது அவபிர்தோத்சவா / தீர்த்தோத்சவ / தீர்த்தயாத்ரா / தீர்த்த யாத்ரோத்சவா என்று அழைக்கப்படுகிறது. பொது நிலையில் இவ்வருடாந்திர மகோத்சவம் நாட்டின் பல பகுதி களிலிருந்தும் வருகின்ற பக்தர்களை கவர்கின்றது. மகோத்சவ நிகழ்ச்சிகள் பொதுவாக விரிவாகவும், பிரம்மாண்டமாகவும், கலகலப்பானதாகவும் காணப்படும்.

இரண்டாவது பெரிய விழாவாக நடத்தப்படுவது கோயில் மூலவரின் பிறந்தநாள் விழாவாகும். இது பாஞ்சராத்ர ஆகமத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பாஞ்சராத்ர நூல்களில் இவ்விழாவானது மிகவும் முக்கியமானது என்றும் சதுர் மாதத்தில் இவ்விழா நடைபெறும் எனவும், பிற கோயில் செயற்பாடுகள் அனைத்தும் இதற்காக தள்ளிவைக்கப்படும் எனவும் கூறப்படுகிறது. இதனாலேயே கிருஷ்ண ஜெயந்தி பல வைணவக் கோயில்களில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா 1-3, 5, 7, 9, 15 அல்லது 30 நாள்கள் நடைபெறலாம். இப்பிறந்தநாள் விழாவானது மூலவருக்கு அல்லது அவரது மனைவிக்கு அல்லது பிற தெய்வங்களுக்கு மற்றும் ரிஷிகள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள் ஆகியோருக்கும் நடைபெறலாம். கேசவர், நாராயணன், வாமனர், திருவிக்ரமர், நரசிம்மர், ஹனுமான், லட்சுமி முதலியோருக்கும் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட வேண்டிய முறைகளை பாஞ்சராத்ரம் விளக்குகிறது. கிருஷ்ணனுக்கு மிகவும் பரந்த சடங்குமுறைகள் பிற தெய்வங் களைக் காட்டிலும் விரிவாக பாஞ்சராத்ர ஆகமங்களில் விளக்கப் பட்டுள்ளன.

மூன்றாவதாக மிகவும் முக்கியமாகக் கருதப்படும் விழாவானது ‘பவித்ரோர்பனா’ அல்லது ‘பிவித்ரோகனா’ என்பதாகும். இதனை பவித்ர உற்சவம் என்பர். இவ்வுற்சவம் ஒன்று முதல் மூன்று அல்லது ஐந்து அல்லது ஒன்பது அல்லது பதினொன்று அல்லது முப்பது நாள்கள் நடைபெறலாம் என்று பாஞ்சராத்ரம் கூறுகிறது. இந்த உற்சவத்தை நடத்துவதின் மூலம் பல விழாக்களில் சடங்குகளை நடத்தத் தவறியதால் ஏற்பட விருக்கும் விளைவுகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். பவித்ரம் அல்லது நூற்கட்டை இறைவனுக்கு அளிப்பதின் மூலம் முன்பு செய்யத் தவறிய வழிபாட்டின் பயன்களையும், ஒருவர் இழைத்தத் தவறுகளையும் நிவர்த்தி செய்து கொள்ளலாம் அல்லது பரிகாரம் தேடிக் கொள்ளலாம். இந்த ஓர் உற்சவத்தில் பங்கு பெறுவதும் இறைவனை வழிபடுவதும் அவ்வாண்டில் நடைபெறும் அனைத்து உற்சவங்களிலும் இறைவனை வணங்கு வதற்குச் சமமாகும். வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் செய்த தவறுகளுக்கும் பாவங்களுக்கும் இங்கு மன்னிப்பு கிடைக்கிறது. விருப்பமில்லாமல் செய்த தவறுகளுக்கும் பிராயசித்தமாக இந்த விழாவில் பங்கு பெறுவதால் பயனுண்டாகும். சில பாஞ்சராத்ர நூல்கள் இவ்விழா இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கான விழா எனக் கூறுகின்றன. தட்சிணாயன காலத்தில் இப்பவித்ரோத்சவம் நடைபெற வேண்டும் எனக் கூறப்படுகிறது. மேலும் சதுர் மாதத்தில் இது நடைபெற வேண்டும் என வலியுறுத்தப் படுகிறது. ஏனென்றால், பிற உற்சவங்கள் சதுர் மாதத்தில் நடைபெறுவதில்லை அல்லது தவிர்க்கப்படுகிறது. ஆதலால் இவ்விழாவானது பாஞ்சராத்ர ஆகமத்தில் மிகவும் முக்கியமான தாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வுற்சவம் பிற உற்சவங்களைக் காட்டிலும் மிகவும் ஆழமாக ஆராயப்பட வேண்டியது. ஏனென்றால், பிற உற்சவங்கள் நடைபெறுவதற்கும் இது தகுதி அளிப்பதாக இருக்கிறது. மேலும் இது வழிபடும் பக்தனுக்கு ஒரு தூய்மையை வழங்குகிறது. இவ்வுற்சவத்தின் இறுதியில் பக்தனுக்கு இறைவனின் பவித்ரத்தில் ஒரு சிறுபகுதி வழங்கப் படுகிறது.

மேற்கூறிய மூன்று உற்சவங்களிலும் மகோத்சவமும் ஜெயந்தி உற்சவமும் கோயிலின் மூல தெய்வத்திற்காக நடத்தப்படுவதாகும். ஆனால் பவித்ரோத்சவம் அத்தெய்வ வழிபாட்டில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்காக

நடத்தப்படுவதாகும். மேற்கூறிய மூன்று உற்சவங்களை மட்டுமே பாஞ்சராத்ர ஆகம நூல்கள் மிகவும் முக்கியத்துவம் அளித்து விரிவாய்ப் பேசுகின்றன. மேலும் கோயில்களிலும் பிற விழாக்களைக் காட்டிலும் இவற்றிற்கே அதிக காலம் அளிக்கப்படுவதையும் அறியலாம். முதல் இரண்டு விழாக்களும் நைமித்திக விழாக்களாகும். அதே வேளையில் பவித்ரோத்சவம் காமிய விழாவாகும்.

பாஞ்சராத்ரத்தில் கூறப்பட்ட வழிமுறைகளுக்கும் தற்போது கோயிலில் நடைமுறையில் காணப்படும் உற்சவங் களுக்கும் உற்சவங்களின் பொருளுக்குமுள்ள உறவுகளையும் அவ்வக்கோயில்களின் அர்ச்சகர்கள் பிற மதத் தலைவர்கள் ஆகியோரைக் கண்டு விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும். கோயிலுக்கு கோயில் நடைமுறைகளில் வேறுபாடுகள் காணப்படுவதில் விளக்கங்களை அறிந்து கொள்ள வேண்டும்; ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இம்மூன்று விழாக்களையும் தவிர பிற திருவிழாக்கள் பற்றியும் பாஞ்சராத்ர ஆகமங்கள் கூறுகின்றன. ஐம்பதுக்கும் மேற்பட்ட உற்சவ பெயர்கள் அவற்றில் கூறப்பட்டுள்ளன. அவற்றில் பாதி அல்லது சில உற்சவங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி சுருக்கமான முறையில் எடுத்துரைக்கின்றன. அவ்வாறான உற்சவங்களையும் இங்கு கருதவில்லை. பல உற்சவங்களைப் பற்றி பல ஆகமங்கள் விரிவாக விளக்கியுள்ளன. அவற்றை இங்கு விளக்கலாம்.

பாஞ்சராத்ர திருவிழா ஆண்டின் (Liturgical year) தொடக்கம் பற்றி சில கருத்துக்கள் நிலவுகின்றன. சந்திர பஞ்சாங்கப்படி (Lunar Calendar) திருவிழாக்கள் எப்போதிருந்து தொடங்கப்பட வேண்டும் என்பது பற்றி ஒரு தெளிவான குறிப்பு இல்லை. சில ஆகமங்கள் திருவிழாக்களின் தொடக்கம் சித்திரை மாதம் என்று கூறுகிறது. பல ஆகமங்கள் அவ்வாறுதான் கருதுகின்றன என்பதுபோல் தோன்றுகிறது. பொதுவாக உற்சவங்கள் பற்றி ஆகமங்கள் விளக்கும்போது உற்சவம் எப்போதிருந்து தொடங்க வேண்டும் என்பது பற்றி எத்தகைய ஒருமைப்பாடும் உடையதாகத் தெரியவில்லை. விஷ்ணுவின்

யோகநித்ரை விழிப்பிலிருந்து இது தொடங்க வேண்டும் என்று கருதப்படுகிறது. மத்திய சூலை முதல் மத்திய நவம்பர் மாதம் வரை (சதுர்மாசம்) யோகநித்ரை காலமாகும். இக்காலங்களில் பெரும்பான்மையும் பெரிய திருவிழாக்கள் நடத்தப்பட மாட்டாது. ஆனால் பவித்ரோத்சவமும் ஜெயந்தி உற்சவமும் இக்காலங்களில் நடத்தப்படுகின்றன. அத்துடன் நித்ய உற்சவங் களும் இக்காலத்தில் நடைபெறுகின்றன. பொதுநிலையில் சதுர் மாதத்தில் உற்சவங்கள் நடத்தக்கூடாது என்றுதான் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாஞ்சராத்ர திருவிழாக்களுக்கு ஏதாவது பொருள் இருக்குமானால் அது 'இறைவன் விழிப்பதிலிருந்து' திருவிழாக்கள் (Wake up) தொடங்குவதில்தான் இருக்கிறது. ஆதலால் 'உத்தபனோத்சவம்' மிகவும் சிறப்பாகக் கோயில்களில் கொண்டாடப்படுகிறது. இந்நாள்தான் பாஞ்சராத்ர திருவிழாக் களின் தொடக்க காலமாக அனேகமாக இருக்க நியாயமுண்டு.. நவம்பர் மாதத்தில் (கார்த்திகை) உத்தபனோத்சவம் தொடங்கு கிறது. ஓர் ஆகமம் திருவிழாக்கள் சித்திரையில் தொடங்க வேண்டும் என்று கூறுகிறது. சதுர் மாதத்தில் இறைவன் ஓய்வு எடுத்து முடித்தவுடன் விழிக்கும்போது உற்சவங்களும் தொடங்கு கின்றன என்று பொதுவாகக் கருதலாம்.

ஆகமங்களில் முக்கியமாகக் கருதப்பட்ட உற்சவங் களைத் தொகுத்துப் பார்த்து அவற்றின் பொருள், நோக்கம் ஆகியவற்றைக் கருதும்போது நாம் ஒரு தொடர்ச்சியினையும் ஒழுங்கையும் காணமுடிகிறது. இறைவனின் ஓய்வுக்குப் பின்னர் அவர் விழித்து எழுவதிலிருந்து நடைபெறும் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தினால் பொருள் புரியவரும்.[7]

1. நான்குமாத ஓய்விற்குப் பின்னர் இவ்வுலகத்தை காப்பதற்காக இறைவன் விழித்து எழுகிறார். கார்த்திகை வளர் பிறையின் பதினோராவது நாள் ஒரு விருந்திற்குப் பின் கோயில் மூலவரின் உற்சவப் படிமம் நன்கு குளிப்பாட்டப்பட்டு ஆடை அலங்காரங்கள் செய்யப்பட்டு 12-வது நாளில் உற்சவர் வீதிஉலா வருகிறார். தெருக்கள் வழியே உலா செல்கிறது. இந்நாளில் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு ஒளியேற்றப்படுகின்றன. இது ஒரு சிறப்பான நாளாகக் கொண்டாடப்படுகிறது. இறைவன் வீதி வழியே வருவதால் அங்கு பஞ்சம், நோய்கள், இறப்பு,

அத்தனையும் அழிந்து ஒழியும். வீதிஉலா முடிந்து திரும்பவும் கோயிலுக்குள் இறைவன் கொண்டுவரப்படும்போது நின்று போயிருந்த அனைத்து கோயில் செயற்பாடுகளும் புத்துணர்ச்சி யுடன் வேலை செய்ய ஆரம்பிக்கின்றன. இறைவனை விழித்து எழச்செய்தல் (பள்ளியெழுச்சி) என்ற உற்சவமானது உத்ரபனோத்சவம், பிரபோதோட்சவம், போதனோத்சவம், பிரிவர்த்தனம் என்று அழைக்கப்படுகிறது.

2. நான்கு மாத ஓய்விற்குப் பின், இறைவன் விழித்து எழுந்த பின்பு கோயிற் பணிகள் விமரிசையாக செயற்படத் தொடங்கிய பின்பு ஒரு தீப விழா விமரிசையாக நடத்தப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாளில் இது நடைபெற வேண்டும். இவ்விழா, பொதுவாக 'கிருத்திகோத்சவா', 'தீபோத்சவா', 'தீபரோபனா', 'கார்த்திகை தீபோத்சவம்' என்று அழைக்கப்படுகிறது. கார்த்திகையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கோயிலை இக்காலத்தில் புதுப்பிக்க வேண்டும். கிராமம் நன்கு அலங்கரிக்கப்படவேண்டும். இறைவனின் படிமத்திற்கு ஸ்நானம் செய்யப்பட வேண்டும். விளக்குகள் ஏராளமாக ஏற்றப்பட்டு ஒளிமயமாக்கப்பட வேண்டும். இவ்வாறு விளக்கேற்றுவது பதினைந்து நாட்கள் வரை செய்யப்பட வேண்டும். சில ஆகமங்கள் இவ்வுற்சவத்தின்போது இறைவனின் உற்சவ படிமம் ஒரு ரதத்தில் தெருவழியே கொண்டு செல்லப்பட வேண்டும்; அந்த ரதம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட வேண்டும்; கோயிலும் அதன் விமானமும் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. சில ஆகமங்கள் இது மாபலியை விஷ்ணு அழித்த திருவிக்ரம அவதாரத்தையும் நாளையும் நினைவு கூறுவதாக அமைய வேண்டும் என்று கூறுகிறது. அதற்காக ஒரு சிறிய ஓலைக் குடிசையை ஒரு கம்பத்தைச் சுற்றி அடைத்து அதன் உச்சியில் தீபத்தை ஏற்றி வைக்க வேண்டும் என்று கூறுகிறது. கோயிலின் முன்பு இவ்வோலைக் கூடாரம் அமைக்கப்பட வேண்டும். இவ்விழாவின் முடிவில் அவ்வோலைக் கூடாரம் தீக்கிரையாக்கப் படும். இது பல விஷ்ணு கோயில்களில் 'சொக்கப்பனை' என்று அழைக்கப்படுகிறது.

3. தனு மாதத்தில் ஒரு மாதம் அல்லது (டிசம்பர் - ஜனவரி) இருபது நாட்கள் விழா கொண்டாடப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் இறைவனை மகிழ்ச்சியூட்டுவதற்காகவே. இந்த நாள்களில் மாலையில் அத்யாயமோத்சவ என்ற நிகழ்ச்சி நடைபெறும். தினந்தோறும் வேதங்களும் பிற நூல்களும் பாடப்படுகின்றன அல்லது ஓதப்படுகின்றன. இந்நிகழ்ச்சி பௌர்ணமி முதல்நாள் தொடங்குகிறது. இந்த விழாவின் பதினோராவது நாளில் 'மோத்சோத்சவ' விழா கொண்டாடப் படுகிறது. இதில் அர்த்தமண்டபத்தின் வெளியே ஒரு முக்கிய கதவு திறக்கப்படுகிறது. அதன் வழியாக இறைவனும் பக்தர்களும் நுழைந்து செல்வர். வைகுந்த ஏகாதசியில் சொர்க்கவாசல் திறப்பது போல் அல்லாமல் இது வேறுவிதமாகக் கொண்டாடப் படுகிறது. பக்தர்கள் தங்களுக்கு விமோசனம் கிடைத்ததாகக் கருதிக் கொள்கின்றனர்; தங்களுக்கு மோட்சம் கிடைத்துள்ள தாகப் பாவித்துக் கொள்கின்றனர்.

4. மற்றொரு விழாவில் இறைவனின் படிமம் காட்டிற்குள் குதிரையின் மீது எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்விழா 'மிருகயோத்சவம்' அல்லது 'மிருகயாத்ரா' என்று கூறப்படுகிறது. இறைவனின் படிமம் ஒரு மரத்தின் நிழலில் வைக்கப்படுகிறது. முக்கிய குருக்கள் அல்லது பட்டர் இறைவனின் வில்லை எடுத்து அம்புகளை அனைத்துத் திசைகளிலும் செலுத்துகிறார். இதைத் தொடர்ந்து முக்கிய பூசையொன்று நடத்தப்படுகிறது. பூசையில் கிடைக்கப்பெற்ற பிரசாதமானது வனப்பிரஸ்தர்களுக்கு வழங்கப்படுகிறது. பாஞ்சராத்ர ஆகமங்கள் வெவ்வேறு விதமாக இவ்விழாவை விவரிக்கின்றன. சிலர் இது ஜனவரி - பெப்ருவரி மாதத்தில் அல்லது அக்டோபர் - நவம்பர் மாதத்தில் கொண்டாடப்பட வேண்டும் எனக் கூறுகிறார்கள். சில ஆகமங்கள் மகோத்சவத்தின் எட்டாவது நாளில் இவ்விழா கொண்டாடப்பட வேண்டும் என்று கூறுகிறது. சில ஆகமங்கள் இது விஜயதசமி உற்சவத்தின் பத்தாவது நாள் முடிவில் கொண்டாடப்பட வேண்டும் என்று கூறுகிறது (அக்டோபர் - நவம்பர்). எவ்வாறாயினும் இது வேட்டையாடுதல் என்ற ஒரு விழாவாகவே காட்சியளிக்கிறது.

5. பாஞ்சராத்ர ஆகமங்களில் ஊஞ்சல்விழா (டோலோத்சவா) என்ற ஒரு விழா நடத்தப்பட வேண்டும் என்று

கூறப்படுகிறது. இவ்விழாவும் வசந்த காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. இவ்விழா தீய சக்திகளை நீக்குவதற்காக 3,5,7 அல்லது ஒன்பது நாட்கள் தனி உற்சவமாக வைணவக் கோயில்களில் கொண்டாடப்படுகிறது அல்லது மகோத்சவ விழாவின் எட்டாவது நாள் அல்லது கிருஷ்ண ஜெயந்தி விழாவில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாக்களில் ஓர் ஊஞ்சல் தயாரிக்கப்படுகிறது. அவ்வூஞ்சலில் இறைவனின் படிமம் அவரது மனைவியுடன் இணைத்து வைக்கப்படுகிறது. இவ்வூஞ்சல் ஒரு விசேடமான மண்டபத்தில் தொங்கவிடப்படுகிறது. இவ்விழாவானது ஹோமங்களும், ஸ்நானங்களும், கேளிக்கைகளும் நிறைந்ததாகக் காணப்படும். இவ்விழாவினைக் கண்டு களிப்பவர்கள் நல்ல பயன்களைப் பெறுகின்றனர். இவ்விழாவின் முடிவில் இறைவனும் இறைவியும் ஒரு வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவார்கள்.

6. வசந்த காலத்தில் பல உற்சவங்கள் நடத்தப்படுவதை பாஞ்சராத்ர ஆகமங்கள் விவரிக்கின்றன. மகம (ஜனவரி - பெப்ருவரி) மாதத்தில் அல்லது வைசாக (ஏப்ரல் - மே) மாதத்தில் இறைவனுக்கு மலர்கள், வாசனை இலைகள், பழங்கள் அளித்து மகிழ்வித்தல் என்பது இவ்விழாவின் நோக்கமாகும். பல வசந்த உற்சவங்களை ஆகமங்கள் விவரிக்கின்றன. இதில் இறைவனின் படிமம் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு ஒரு தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு அவர் ஓய்வு எடுத்துக் கொள்கிறார். பூக்கள் தொடுக்கப்பட்டு அவருக்கு அளிக்கப் படுகிறது. இத்துடன் கேளிக்கைகளும் உணவும் இறைவனுக்கு அளிக்கப்படுகின்றன. இவ்வசந்த உற்சவங்களை கண்டு களிப்பவர்கள் வாழ்த்தப் பெறுகின்றனர்; நற்பயனை அடைகின்றனர். பிறிதொரு வசந்த உற்சவத்தை ஆகமங்கள் 'தமனோத்சவா' அல்லது 'தமனி கோத்சவா' அல்லது 'தமனரோப்னா' என்று அழைக்கின்றன. இறைவனின் படிமத்தை நன்கு குளிப்பாட்டி வாசனை இலைகளை இறைவனுக்கு அளிப்பர். பிறிதொரு வசந்த உற்சவத்தினை 'கல்கரோத்சவா' என்று அழைப்பர். இவ்விழாவில் மலர் மாலைகளும் வாசனைப் பொருள்களும் இறைவனுக்கு வழங்கப்படுகின்றன. இது மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இவ்விழா சீரழிவுகளைத் தடுப்பதற்காக நடத்தப்படுகிறது அல்லது

தவறுகளுக்கு மன்னிப்பு கேட்பதாக அமைகிறது. ஒரு ஆகமம் இவ்விழா பஞ்சத்தைப் போக்குவதற்காக நடத்தப்படுகிறது என்று கூறுகிறது அல்லது எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் அல்லது பிற கடினமான சூழ்நிலை களிலிருந்து காத்துக் கொள்ளவும் நிகழ்த்தப்படுகிறது எனக் கூறுகிறது. இவ்விழாவை நடத்தியவர்கள் மறுபிறப்பையும் இப்பிறப்பையும் கடக்கின்றனர். பிறிதொரு ஆகமத்தில் வைகாசி மாதத்தில் (ஏப்ரல் - மே) வைசாக நட்சத்திரம் தோன்றியவுடன் வைசாச உற்சவம் நடத்தப்படவேண்டும் என்று கூறுகிறது. இந்த உற்சவத்தில் பருவ மலர்கள் இறைவனுக்கு வழங்கப்படுகின்றன. அத்துடன் சடங்குகளும் அபிஷேகங்களும் நடைபெறுகின்றன.

7. வசந்த காலம் (Spring season) முடிந்தவுடன் கோடை காலம் ஆரம்பிக்கிறது. பருவ காலமும் பூ என்ற நிலையிலிருந்து மாறி பழுத்த பழம் என்ற நிலைக்கு வருகிறது. விவசாயமும் விதைவிதைத்தல் என்ற நிலையிலிருந்து அறுவடையாதல் என்ற நிலைக்கு வருகிறது. காலம் உத்தராயனத்திலிருந்து தட்சணா யனத்திற்கு மாறிச் செல்கிறது. திருவிழாக்களில் மலர்களுக்குப் பதிலாக உணவு வகைகள் படைக்கப்படுகின்றன. பழவகைகள் இறைவனுக்கு வழங்கப்படுகின்றன. இது அறுவடை காலத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இவ்வகை கோடை அல்லது இலையுதிர்கால உற்சவமானது பாலோத்சவம் என்று அழைக்கப்படுகிறது. இது மே - ஜுன் மாதத்தில் (ஜேய்ஷ்ட்டா) அல்லது சூலை - ஆகஸ்ட் (ஸ்வரண) மாதங்களில் நடத்தப்படுகிறது. இவ்விழாவில் பழ வகைகள் இறைவனுக்கு அளிப்பதும் அலங்கார வகைகளும் மிகுதியாகக் காணப்படுகிறது. இவ்வகை அறுவடை விழாக்கள் ‘அக்ரயனோத்சவா’ அல்லது ‘அக்ரனோத்சவா’ என்று அழைக்கப் படுகின்றன. இவ்விழாவானது தட்சணாயன காலத்தில் நடைபெறு கிறது. இது ஆண்டின் சூன் - சூலை (ஆசாதா) அல்லது பாச (டிசம்பர் - ஜனவரி) மாதங்களில் நடத்தப்படுகின்றன. இவ்விழாவில் ஹனுமான் அல்லது விஷ்வக்சேனர் அல்லது கருடர் ஊர்வலமாக வயல்வெளிக்கு கொண்டுவரப்படுகிறார். பட்டர் வயல் நெற்கதிரை சிறிது கோவிலுக்கு எடுத்து வருகிறார். அதை பொடியாக்கி

இறைவனுக்கு உணவாகப் படைக்கிறார். பின்பு அதை பக்தர்களுக்கு வழங்குகிறார். எதிர்காலத்தில் விளைச்சல் பெருகுவதை மனதில் கொண்டு அல்லது முக்கிய நோக்கமாகக் கொண்டு இவ்விழா நடத்தப்படுகிறது.

8. கோடைகால உற்சவங்களில் கலகோத்சவா / பிரணய கலகோத்சவா / மதுனோத்சவ என்ற உற்சவங்கள் நடத்தப்படு கின்றன என பாஞ்சராத்ர ஆகமங்கள் விவரிக்கின்றன. இவ்விழாவில் இறைவனுக்கும் இறைவிக்கும் ஊடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்தக் கலக உற்சவத்தில் பட்டர்களில் சிலர் கோயில் வாசலில் இரு குழுவாகப் பிரிந்து நின்று ஒருகுழு இறைவனுக்குச் சார்பாகவும் பிறிதொரு குழு இறைவிக்குச் சார்பாகவும் நின்றுகொண்டு எதிர்த்து உரையாடுவார்கள். இந்நிகழ்ச்சியில் சிலவேளை பூப்பந்துகள், நீர், பொடிகள் ஆகியவை மாறிமாறி தூக்கி எறியப்படும். இதில் இறைவி இறைவனை கோயிலுள்ளே மூன்று தடவை அனுமதிக்க மாட்டாள். நான்காவது தடவை அவரை தன் சன்னதிக்குள்ளே அனுமதிப்பாள். இவ்வுற்சவம் மிகவும் விமரிசையாகவும் சிறப்பாகவும் நடைபெறுகிறது.

9. கோடை மற்றும் இலையுதிர் காலத்தினை அடுத்து முக்கியமாக ஒரு விழா நடைபெறும். அது 'தெப்ப உற்சவம்' அல்லது 'பிளவோத்சவம்' என்று கூறப்படுகிறது. இது சதுர் மாசம் தொடங்கப்படுவதற்கு முன்பே நடத்தப்பட வேண்டும். இது காட்சிக்கு மிகவும் சிறப்பான விழாவாகும். இவ்விழாவில் இறைவன் இறைவியின் படிமங்கள் ஒரு பெரிய தெப்பத்தில் வைத்து கோயிலுக்குரிய தெப்பக் குளத்தில் இடப்பட்டு பலரால் இழுக்கப்பட்டு தெப்பக்குளத்தின் மத்தியிலுள்ள ஒரு மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பீப்பாய்களும் மூங்கில் களும் பலகைகளும் இணைத்து இத்தெப்பம் செய்யப்படுகிறது. தெப்பத்தின் மத்தியில் மேடை அமைக்கப்பட்டு அதில் இறைவன் இறைவியின் படிமங்கள் வைக்கப்படுகின்றன. இந்த தெப்பம் விளக்குகளால் ஒளியேற்றப்படும்; மலர்மாலைகளால் அலங்கரிக்கப்படும். தற்காலத்தில் மின்விளக்குகள் இத்தெப்பத்தை மிகவும் அலங்கரிக்கின்றன. இந்த தெப்பத்தில் இறைவன் - இறைவி படிமங்கள் மட்டுமல்லாமல் பிற குழுக்களும் அதிகாரிகளும்

அந்தணர்களும் அமர்ந்துச் செல்வர். தெப்ப முடிவில் உற்சவர் ஊர்வலமாக கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுவார். இவ்வுற்சவம் ஒருநாள் முழுவதும் நடைபெறும். இவ்வுற்சவம் தனியாகவோ அல்லது மகோத்சவத்தின் ஒரு பகுதியாகவோ நடத்தப்படும். ஏராளமான மக்கள் இவ்விழாவில் பங்குபெறுகின்றனர். மகிழ்ச்சி வெள்ளம் எங்கும் பெருக்கெடுத்து ஓடுகிறது. வான வேடிக்கைகளும் இவ்விழாவில் நடத்தப்படுகிறது.

10. பாஞ்சராத்ர உற்சவ ஆண்டின் இறுதியாக 'சயன உற்சவம்' அல்லது 'சுவாயோத்சவ' விழா நடைபெறுகிறது.. தட்சணாயன காலம் மிகவும் மோசமான காலமாகும். ஆதலால் இது துவங்குமுன்பே இவ்விழா நடத்தப்படுகிறது. இவ்விழாவினைத் தொடர்ந்து நான்கு மாதங்கள் இறைவன் ஓய்வு எடுத்துக் கொள்வதால் பெரிய விழாக்கள் (நைமித்திக, காமிக) எதுவும் நடைபெறுவதில்லை (சூன் - சூலை அசதா-அக்டோ-நவம். கார்த்திகா). சில கோயில்களில் (காஞ்சிபுரம்) பவித்ரோத் சவம் இக்காலங்களில் நடத்தப்படுகிறது. ஆனால் நித்ய பூசைகள் நடைபெறுவதில் எத்தகைய மாற்றமும் இல்லை. இவ்விழாவின் போது பக்தர்கள் தங்களுக்கென்று தனி விரதங்களை மேற்கொள் கிறார்கள். சயன உற்சவம் நடைபெறுவதற்கு முன்னால் இறைவனின் படிமத்தைக் குளிப்பாட்டி ஆடை அணிகலன்களைக் களைந்து ஓய்வுக்குத் தயார்படுத்துவர். இதனை 'ஜேஷ்டாபிஷேகம்' என்பர். வெவ்வேறு கோயில்களில் சூலை மாதத்தில் வெவ்வேறு நாட்களில் இதனை நடத்துவர். இந்நான்கு மாதங்கள் இடைவெளியில் இரண்டாவது மாதம் முடிந்த பின்பு ஒரு சிறிய விழா நடத்தப்படுகிறது. நான்கு மாதங்கள் முடிந்த பின்பு மீண்டும் திருவிழாச் சுற்று (Cycle of festivals) தொடங்குகிறது.

தினந்தோறும் நடைபெறும் நித்ய உற்சவத்தில் பள்ளியறை திறப்பதிலிருந்து சயனாலய பூசைவரை பல நிகழ்ச்சிகள் சடங்குகள் இடையில் நிகழ்த்தப்படுகின்றன. இதில் இறைவன் தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல்,அருளல், மறைத்தல் என்பன எடுத்துக்காட்டப்படுகிறது. தினந்தோறும் இந்நிகழ்ச்சிகள் காட்டப்படுவதால் பெரிய திருவிழாக்கள் இதனை கிரமமாகக் காட்ட வேண்டும் என்பதில்லை. ஆனால் ஓர் ஆண்டில் நடைபெறும் விழாக்களும்

வரிசைக் கிரமத்தில் இறைவனின் தொழில்களை எடுத்துக்காட்டுவனவாக அமைக்கப்பட்டிருக்கலாம். தினந்தோறும் இது காட்டப்படுவதால் உறக்கத்திலிருந்து விழித்தெழல் என்ற உற்சவத்திலிருந்து ஆண்டு திருவிழா தொடங்க வேண்டும் என்பது சில கோயில்களில் நியதியாக வைத்துக்கொள்ளாமல் இருக்க வாய்ப்பு உள்ளது.

மேற்கூறிய திருவிழாக்கள் பாஞ்சராத்ர ஆகமத்தை அடியொற்றியவை. திருவரங்கம் கோயில் திருவிழாக்கள் பாஞ்சராத்ர ஆகமத்தில் பரமேஸ்வர சம்ஹிதையை பின்பற்றியவை. இருப்பினும் நடைமுறையில் கோயில்களில் சில வேறுபாடுகள் உண்டு. அதற்கான காரணங்களும் உண்டு. வைகானச ஆகமத்தை அடியொற்றிய கோயில்கள் வேறுவிதமான திருவிழா முறைகளை உடையனவாக இருக்கலாம். பாஞ்சராத்ர ஆகமத்தை அடியொற்றிய நிபந்தங்கள் பல அர்ச்சகர்களால் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் சில வேறுபாடுகள் காணப்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

சித்திரை மாதத்திலிருந்து விழாக்கள் உண்மையிலேயே தொடங்குகின்றனவா அல்லது இறைவன் விழித்து எழுகின்ற நிலையிலிருந்து தொடங்குகின்றனவா என்பது கேள்வியாகும். திருவரங்கத்தில் சித்திரை மாதம் கோடை உற்சவ விழாவிலிருந்து தொடங்குகிறது. சில ஆகமங்கள் இதை விவரித்துள்ளது. சித்திரை மாதத்தில் தொடங்குவதாக இருந்தால் நாம் ஒரு சரியான முறையைக் காணமுடியாது. கல்யாண உற்சவம் என்பது தனியாக பாஞ்சராத்திர ஆகமங்களில் கூறப்படவில்லை. அதுபோல் திருவரங்கத்திலும் தனியாகக் கல்யாண உற்சவம் நடைபெறுவதில்லை. சில ஆகமங்கள் தனியான கல்யாண உற்சவத்தை விளக்க முற்பட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறான ஆகமங்கள் கிடைக்கவில்லை அல்லது பதிப்பிக்கப்படவில்லை. (இறைவன் தினந்தோறும்) விழித்தெழுவதும் (பள்ளியெழுச்சி) பள்ளியறை செல்வதும் தினந்தோறும் வாடிக்கையான நிகழ்ச்சி என்பதால் பெரிய திருவிழாக்கள் சித்திரை மாதத்திலிருந்து ...ப்பட லாம்; சதுர்மாதம் முடிந்தபின் தொடங்கவேண்டும் ... அவசியமில்லை எனக் கருதியிருக்கலாம்.

மேற்கண்ட ஆகமங்களில் கூறப்பட்ட செய்திகளை அடியொற்றி கோயில் திருவிழாக்கள் வைணவக் கோயில்களில் நடத்தப்படுகின்றன. இவ்வாறு கோயில் அதிகாரிகள், சமயிகள் விழாக்களின் தொடக்கம், முடிவு, நிகழ்ச்சி நிரல்கள் முதலிய வற்றை அமைக்கின்றனர். அடுத்து நேரம், நிகழ்ச்சி நிரல்கள் முதலியவற்றை அமைக்கின்றனர். தொடர்ந்து நேரம், காலம், முதலியவை எவ்வாறு நிச்சயிக்கப்படுகின்றன என்பதைக் காணலாம்.

## திருவிழா பஞ்சாங்கம் (Festival Calendar)

### 1. சந்திர மாதம் (Lunar Month)

பஞ்சாங்கங்களில் திருவிழாக்கள் தொடங்கும் நேரம், காலம் ஆகியவை கிரக நிலைகளின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இதனை ஒழுங்காகப் பின்பற்றுவதே இந்து கோயில்களின் மரபு. எத்தகைய நிகழ்ச்சியாக இருந்தபோதிலும் நாள், கிழமை, நேரம் கிரகங்களின் நிலை ஆகியவற்றை அடியொற்றியே நடத்தப்படுகின்றன. இது இந்து சமய வாழ்க்கையில் இரண்டற கலந்துவிட்ட ஒன்று. வாழ்க்கை யிலிருந்து அதை பிரிக்க முடியாது. திருவிழா நாட்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன, சடங்குகள் எவ்வாறு ஒழுங்கான அமைப்பில் நிகழ்த்தப்படுகின்றன என்பதைக் காணலாம்.

பொதுவாக இந்து கோயில்களில் திருவிழாக்கள் சந்திர மாதத்தின் அடிப்படையில் நாள்கள் குறிக்கப்படுகின்றன.[8] பிரகாசமான பதினான்கு நாள்கள் (சுக்ல பக்ஷம்) என்பது அமாவாசை தொடங்கி பௌர்ணமி வரை இடைப்பட்ட பதினைந்து நாட்களாகும். பௌர்ணமி தொடங்கி அமாவாசை முடிய பதினைந்து நாள்கள் 'கிருஷ்ணபக்ஷம்' என்று (இருட்டான பதினான்கு நாட்கள்) அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு பதினான்கு நாட்களும் பதினைந்து திதிகளை யுடையது அல்லது சந்திர நிலைகளையுடையது. ஒரு திதி என்பது சந்திரன் பூமியைச் சுற்றிவரும் (12) நிலையில் எடுத்துக் கொள்ளும் கால அளவாகக் கூறப்படுகிறது. ஆதலால் ஒரு சந்திர மாதம் என்பது முப்பது திதிகளையுடையது. ஒன்று முதல் பதினைந்து வரை அமாவாசை வரையிலும் மற்றும் ஒன்று முதல் பதினைந்து

வரை பௌர்ணமி வரையிலும் கணக்கிடப்படுகிறது. வளர்பிறையில் பதினைந்தாவது திதி அன்று பௌர்ணமியாகும் (full moon). முப்பதாவது திதியானது அமாவாசையாகும் (new moon). திருவிழா நாட்களானது எத்தனையாவது திதியில், எந்த மாதத்தில், எந்த பக்ஷத்தில் நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. உதாரணமாக சயனோத்சவம் (விஷ்ணு தூங்கச் செல்லும் உற்சவம்), ஆசாதா மாதத்தில் (ஆடி) சுக்ல பக்ஷசத்தில் ஏகாதசியில் (11-வது திதி) நடைபெற வேண்டும் என்று குறிக்கப்படுகிறது. பௌர்ணமியில் அல்லது அமாவாசையில் நடைபெறுவதாக இருந்தால் அந்த நாள் மட்டுமே அறிவிக்கப்படுகிறது. ஆதலால் கார்த்திகை தீபம் திருவிழா கார்த்திகை பௌர்ணமியில் நடைபெறுகிறது என அறிவிக்கப்படுகிறது.

ஒரு சந்திர மாதம் இரண்டு அமாவாசைக்கு நடுவில் அல்லது பௌர்ணமிக்கு நடுவில் அமையும். தென்னிந்தியாவில் அமாவாசைக்கு இடையிலான மாதத்தையே கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். இதை ஆமாந்த (amanta) மாதம் என்பார்கள். பௌர்ணமிக்கு இடைப்பட்ட மாதத்தை 'பூர்ணிமாந்த' என்று அழைப்பார்கள். வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமாக காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதனால் வெவ்வேறு பகுதிகளில் ஒரு திருவிழா வெவ்வேறு காலங்களில் தொடங்கவோ முடியவோ செய்கிறது.

## சூரிய வருடம் (Solar Year)

சூரிய வருடம் என்பது பூமியானது ஒரு தடவை சூரியனைச் சுற்றி வருகின்ற கால அளவை இங்கு குறிக்கிறது. இது சில நட்சத்திரங்கள் அமைந்திருக்கும் நிலையை அடிப்படை யாகக் கொண்டு குறிக்கப்படுகிறது. இது 365 நாட்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு 12 சந்திர மாதங்களை உள்ளடக்கியது. இப்பன்னிரண்டு மாதங்களும் ராசிகளின் அடிப்படையில் அமைவது. ஒவ்வொரு ராசியும் 30 சுற்றுப்பாதை அளவு உடையது.

சூரியன் ஒரு ராசியிலிருந்து அடுத்த ராசிக்குச் செல்வதை 'சங்கிராந்தி' என்று அழைப்பர். சந்திர மாதம் சங்கிராந்தி

யிலிருந்து தொடங்குகிறது. மேஷ சங்கிராந்தி மேஷ ராசியில் சூரியன் இருப்பதைக் குறிக்கும்.

பூமத்திய ரேகையிலிருந்து நட்சத்திரங்கள் கடந்து செல்வதால் பருவ காலங்கள் நடைபெறுகின்றன (Tropical Year) இவ்வாறு கடந்து செல்வதின் காலம் சூரிய காலத்தை விடவும் குறைவானதாகும். பொதுவாகத் தோன்றும் பருவ காலங்களின் தொடக்கம் முடிவு ஆகியவை விழாக்களின் காலத்தை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

### சந்திர - சூரிய வருடம் (Luni - Solar Year)

சந்திர மாதத்தை கணக்கிட்டுத் தோன்றும் ஆண்டு சூரிய ஆண்டைக்காட்டிலும் கூடுதலான நாட்களையுடையது. சந்திர வருடம் 354 நாட்களை உடையது. சூரிய ஆண்டு 365 - 366 நாட்களையுடையது. மீன ராசியில் சூரியன் நிற்பதை கணக்கிட்டு சித்திரை மாதம் தொடங்குகிறது என்று ஒரு பஞ்சாங்கம் கூறுகிறது. மேச ராசியில் சூரியன் நிறகும்போது சந்திர வருடம் முடிகிறது என்று பிறிதொரு பஞ்சாங்கம் கூறுகிறது. இதிலிருந்து சித்திரை மாதம் தொடங்குகிறது.

சூரிய ஆண்டு மேஷ சங்கிராந்தியிலிருந்து தொடங்குகிறது. சந்திர் சூரிய வருடம் (Luni - Solar Year) சித்திரை மாதம் அமாவாசையிலிருந்து தொடங்குகிறது. ஆதலால் சந்திர மாத ஆண்டும் சூரிய மாத ஆண்டும் ஒத்ததாகவே இருக்கிறது. ஆமாந்த, பூர்ணிமாந்த அமைப்பு முறைகளிலும் இவ்வாறே காணப்படுகின்றன.

ஒரு சூரியநாள் என்பது சூரியன் உதித்ததிலிருந்து அடைவது வரையிலாகும். இது திதியைக் காட்டிலும் கூடுதலாகும். திதி 21.5 மணிக்கூர் உடையது. திதி வழக்கமாக சூரியநாளில் தொடங்கி அடுத்த சூரியநாளில் முடியும். திதி இரண்டு சூரிய உதயத்திற்கு இடைப்பட்டு வருமானால் அது நீக்கப்படுகிறது. இரண்டு சூரிய உதயத்தில் அடங்கி வருமானால் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வழக்கமாக திதியானது சூரிய நாளை கணக்கிட்டே கொள்ளப்படுகிறது. சில சடங்குகளில்

சந்திர திதி குறிப்பாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. சூரிய. நாளில் ஒன்றிற்கும் மேற்பட்ட திதி வருமானால் அது மோசமானதாகக் கருதப்படுகிறது.

## சூரிய உதயமும் மறைவும் (Solar Reckoning)

மேற்கூறிய 'சந்திர - சூரிய ஆண்டு' பஞ்சாங்கங்கள் பொதுவாக இந்தியாவில் பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் சமயச் சடங்குகளில் சூரிய நாள்களும், ராசி மற்றும் சௌர மாத சூரிய நாள்களும் பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு, ஒரிஸ்ஸா மாநிலங்களில் சில இடங்களில் சூரிய மாதங்களை சந்திர மாதங்களில் பெயரில் கணக்கிடுகின்றன. இது பௌர்ணமியும் நட்சத்திரங்கள் அமையும் நிலையைப் பொறுத்து கணக்கிடப்படுகிறது. கேரளாவில் ராசியின் பெயர்கள் சூரிய மாதங்களைக் குறிக்கின்றது.

வெவ்வேறு பஞ்சாங்கங்களை ஒவ்வொரு இடத்திலும் திருவிழாக்கள் நடத்த பயன்படுத்துவதினால் ஒன்றிரண்டு நாள்கள் முந்தியோ, பிந்தியோ திருவிழாக்கள் தொடங்கப்படுகின்றன. ஆனால் அடிப்படையாக திருவிழாக்களின் கால தத்துவம் இந்து திருவிழாக்களில் ஒன்றுபோலவே இருக்கிறது. பொதுவாக சூரிய உதயம் மறைவு ஆகியவற்றைப் பின்பற்றித் தொடங்கும் திருவிழாக்கள் சந்திர நிலைகளையும் பின்பற்றியே சிலவேளை களில் நடத்தப்படுகின்றன. அனைத்திந்திய திருவிழாக்கள் சந்திர - சூரிய (Luni-Solar) பஞ்சாங்கங்களைப் பின்பற்றியே நடத்தப் படுகின்றன. இருப்பினும் சந்திர - சூரிய பஞ்சாங்கங்களைப் பின்பற்றி நடத்தப்படும் திருவிழாக்களை சூரிய மாதத்தில் நடத்துவதில் சில குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன.

ஒரு சூரிய ஆண்டானது கடவுளின் ஒரு நாளாகக் கருதப்படுகிறது. ஒரு சந்திர மாதம் இறந்த முன்னோர்களின் ஒரு நாளாகக் கருதப்படுகிறது. சந்திரன் ஒருதடவை பூமியைச் சுற்றி வரும் காலம் ஓர் ஆண்டு பலிக்குச் சமமாகும். ஒரு சடங்கிற்கு ஒத்ததான சூரியநாள், ஆண்டு, சந்திரமாதம் ஆகியவை குருக்கள் நிச்சயிப்பதாக இருந்தாலும் அவற்றின் தனித்தன்மையை

அவற்றின் பண்புகளின் சில ஒத்ததன்மைகளை அடிப்படையாகக் கொண்டு அறியலாம். நாள், பௌர்ணமி, அமாவாசைகள், உத்தராயனம், தட்சிணாயன காலங்கள் (Northward going, South ward going of the Sun from the equator) ஆகியவற்றைக் கணக்கிட்டே திருவிழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன.

ஒவ்வொரு கால அலகுகளின் தன்மையைப் பொறுத்து சடங்குகளின் எண்ணிக்கை கூடுதலாகவோ குறைவாகவோ அமையும். சுக்ல பக்சத்தில் ஏராளமான திருவிழாக்கள் நடத்தப் படுகின்றன. கிருஷ்ண பக்சத்தில் குறைவான திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. தேய்பிறையில் சடங்குகள் நடத்தப்படுவது விரும்பத்தகாத ஒன்றாகும், ஆபத்தானதாகும். சக்திகளுக்கு சடங்குகள் செய்யும் காலம் ஒவ்வொரு வளர்பிறை தேய்பிறையிலும் எட்டு திதிகளே சிறப்பானதாகக் கருதப்படுகிறது. எட்டாவது கிருஷ்ண பக்சமும் காளிக்கு உகந்ததாகக் கூறப்படுகிது. இவ்வாறு சில திதிகள் சில தேவதைகளுக்கு உகந்ததாகக் கணக்கிட்டு சடங்கு நடத்தப்படுகிறது.

சூரியநாள் (Solar Day), சூரிய ஆண்டு (Solar Year) சந்திர மாதம் (Lunar Month) ஆகிய இந்தச் சடங்குகளின் கால அலகுகளில் முக்கியமானவையாக இருக்கின்றன. வளர்பிறை தேய்பிறை ஆகியவற்றின் சங்கமம் ஆகியவை சில சடங்குகளின் காலத்தை நிர்ணயிக்கின்றன. ஒன்றுக்கொன்று முரணான கால அலகுகள் இவற்றில் காணப்படுகின்றன.

இடைப்பட்ட காலங்கள் (transitional time) சில முக்கிய சடங்குகள் நடத்த நிர்ணயிக்கப்படுகிறது. பிரதோச காலம் என்பது சூரியன் மறைவதற்கு 1 ½ மணிக்கூர் முந்தியதும் பிந்தியதுமாகக் கருதப்படுகிறது. வளர்பிறை தேய்பிறையில் 14-வது திதியும் இவ்வாறே கருதப்படுகிறது. பிரதோசம் என்பது 'தூய்மையற்ற' (Corrupt) , 'கொடூரமான' (wicked) என்று பொருள்படும். 'மோசமானது' என்றும் பொருள்படும். மகாபிரதோசம் அல்லது 'சிவராத்திரி' என்பது வருடந்தோறும் இறுதிக்கு முந்தைய அமாவாசையில் சூரியன் பூமத்திய

ரேகையை கடந்து செல்கையில் நடைபெறுகிறது. பிரதோசத்தை தொடர்நது 'விஜயம்' சடங்கு (வெற்றிச் சடங்கு) நடத்தப் படுகிறது. இதில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன. எந்தச் சடங்குகளும் நடத்துவதற்கு உகந்த காலமாக இது கருதப்படுகிறது. 'விஜய' நவராத்திரியில் அல்லது துர்க்கா பூசை இறுதியில் நடத்தப்படுகிறது.

ஒளி / இருட்டு, பகல்/இரவு, வளர்பிறை / தேய்பிறை,
சூரியன் வடக்கு நகரல் / சூரியன் தெற்கு நகரல்
(உத்தராயனம்) (தட்சணாயனம்) - இவை ஒன்று சேரும் சமயங்கள் சடங்குகளின் காலத்தை நிர்ணயிக்கின்றன. சில நல்ல முடிவுகளை எதிர்பார்த்து சடங்குகள் நடத்தப் படுவதால் இந்த கால அலகுகள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. காலத்திற்கும் சடங்கிற்கும் மிகவும் நெருங்கிய உறவு இருப்பதாகக் கருதுவதால் இவை ஒழுங்காகப் பின்பற்றப்படுகின்றன. பிரபஞ்ச இயக்கத்திற்கும் வாழ்வியல் நடைமுறைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவே கருதப்படுகிறது.

மேற்கூறியவற்றிலிருந்து எந்தவித திருவிழாக்கள் எவ்வடிப் படையில், எந்நோக்கத்திற்காக, எந்நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதை கோயில் அதிகாரிகள், குருக்கள் அல்லது பட்டர்கள் முடிவுசெய்து திருவிழாவை நடத்துகின்றனர்.

ஒருகோயில் திருவிழா நடைபெறுவதும் நடை பெறாததும் அந்தந்தக் கோயில் வசதிகளைப் பொறுத்தது. செல்வச் செழிப்புமிக்க திருவரங்கம் கோயில் விழாக்கள் வருடந்தோறும் சிறப்பாக முறையாகவே நடத்தப்படுகின்றன. உபயதாரர்கள், பொதுமக்கள் உதவியும் இதில் முக்கியமானதாகும்.

## அடிக்குறிப்புகள்

1 See Srinivas, R. Melkote, 1997, P.45
2. Srinivas R. Melkote, op.cit, p.46
3. Loc. cit.
4. Loc. cit
5. Daniel Smith. H,op. cit. pp.42 - 49
6. Daniel Smith. H, op.cit.p.27
7. See. Daniel Smith. H, op. cit. pp.33-38
8. See. Karen. L. Merry, 1982, pp,. 2-5.

# 3. உற்சவ மண்டபங்கள்

பல்லவர் காலம் முதல் விஜயநகர, நாயக்கர் காலம் வரை ஏராளமான மண்டபங்கள் கோயில்களில் உற்சவங்கள் நடத்துவதற்காகக் கட்டப்பட்டுள்ளன. சோழர் காலத்திலும் விஜயநகர, நாயக்கர் காலத்திலும் உற்சவங்களின் பெருக்கம் காரணமாக பலவகையான மண்டபங்கள் கட்டப்பட்டன. நான்கு கால்களையுடைய மண்டபங்கள் முதலாக ஆயிரம் கால்களையுடைய மண்டபங்கள் வரை பல மண்டபங்கள் கோயில்களில் கட்டப்பட்டன.[1] பெரும்பான்மையான மக்களை உட்படுத்துவது உற்சவங்களாகும். மக்களுக்குச் சில செய்திகளைச் சொல்லவேண்டும் என்பதற்காகவே உற்சவங்கள் நடைபெறுகின்றன. ஆதலால் மக்கள் பார்வைக்கு இறைவனை வைப்பதும், மக்கள் வந்து இருப்பதற்கு வசதியாகவும் மண்டபங்கள் கோயிலில் கட்டப்பட்டுள்ளன. திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் ஏராளமான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களுக்குரிய மண்டபங்கள் இங்கு விளக்கப்படுகின்றன. மண்டபங்கள் பல கட்டப்பட்டுள்ளன.[2] குறிப்பாக விஜயநகர, நாயக்கர் காலத்திலேயே ஏராளமான மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன என்பதை அம்மண்டப கலைப் பாணிகளை வைத்து அறியமுடிகின்றது. பொதுவாக விஜயநகர, நாயக்கர் காலம் 'மண்டபங்களின் காலம்' என்றே கூறப்படுகிறது.[3] ஒவ்வொரு திருச்சுற்றிலும் அமைந்திருக்கும் உற்சவ மண்டபங்கள் கோயிலினுள்ளே நடைபெறும் விழாக்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் வெளியேயும் உற்சவ காலங்களில் உலாவரும் இறைவன் தங்கிச் செல்வதற்கான பல மண்டபங்கள் தற்காலத்தில் பல சமூகப் பிரிவுகளால் தனியாகக் கட்டப்பட்டுள்ளன.

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் ஏழு திருச்சுற்றுகள் உள்ளன. ஏழு திருச்சுற்றுகளையுடைய கோயில்களை மிகவும் அரிதாகவே காணமுடிகின்றது. ஒவ்வொரு திருச்சுற்றிலும் கோபுரங்கள் எழுப்பப் பெற்றுள்ளன. ஏராளமான கோபுரங்களை திருவரங்கத்தில் காணலாம். இவை உள்ளே செல்லச் செல்ல உயரம் குறைந்துகொண்டே செல்வதைக் காணலாம். ஆதலால், வெளியே செல்லச் செல்ல கோபுரங்களின் உயரம் கூடிக்கொண்டே செல்லும். ஏழாவது திருச்சுற்றின் தெற்கில் அமையும் இராஜகோபுரம் மிகவும் பிரம்மாண்டமான தாகும். ஆசியாவிலேயே மிகவும் உயரமான கோபுரம் என்று அறியப்படுகிறது.

முதல் திருச்சுற்றில் அதாவது மூலவர் கர்ப்பகிரகம், காயத்ரி மண்டபம், சந்தன மண்டபம் இவற்றைச் சுற்றியிருக்கும் மண்டபங்களை இங்கு குறிப்பிடுகிறோம். மூலஸ்தானத்தை ஒட்டியிருப்பது காயத்ரி மண்டபமாகும். அதன் முன்பு உற்சவங்கள் பெரும்பான்மை தொடங்கும் இடமான சந்தன மண்டபம் உள்ளது. இம்மண்டபம் விஜயநகர காலத்தில் கட்டப் பட்டது. சதுரப்பட்டை அமைப்புடையத் தூண்கள் ஒரு உயரமான மேடையில் அல்லது அதிட்டானத்தில் உள்ளன. அங்கு மேலே ஏறிச் செல்வதற்கான படிக்கட்டுகள் கிழக்கில் உள்ளன. முக்கியமாக இம்மண்டபத்தில் உற்சவரை கொண்டு வைப்பதற்கான நான்கு கால்களையுடைய ஒரு சிறிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நான்கு தூண்களும் ஆணியொட்டிக் கால் வகையைச் சார்ந்தது. இச்சிறிய மண்டபத்தின் கூரை மரத்தால் அமைக்கப்பட்டுள்ளது. அது ஒரு கும்மட்டம் போன்று அல்லது வீட்டின் கூரைபோன்று அமைக்கப்பட்டுள்ளது.

எப்போதுமே சந்தன மண்டபத்திலிருந்துதான் முதலில் உற்சவர் எடுத்து வரப்படுவார். இறுதியாக பல திருவிழாக்களில் அவர் வந்து சேருவதும் இம்மண்டபத்தில்தான். முதல் சுற்றின் வடமேற்கில் யாகசாலை இருக்கிறது. கண்ணாடி அறை சந்தன மண்டபத்தினருகே உள்ளது. யாகசாலையில் பிரம்மோத்சவ காலங்களில் அரங்கனுக்கு முதல்நாள் இங்கு திருமஞ்சனம் நடைபெறும். இரண்டாவது திருச்சுற்றில் விஷ்வக்சேனர் கோயிலருகே அர்ச்சுன மண்டபம் கிழக்கே காணப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசி மகோத்சவத்தின் திருமொழித் திருநாள் என்று அழைக்கப்படும் பகல்பத்து உற்சவம் இம்மண்டபத்தில் தான் நடைபெறுகிறது. ராமநவமியிலும் கைசிக ஏகாதசியிலும் இம்மண்டபத்தில் பெருமாளை தரிசிக்கலாம். அர்ச்சுன மண்டபத்தின் முன்னாலும் பின்னாலும் ஒரு மேடை அமைக்கப்பட்டுள்ளது. இம்மேடையில் நான்கு கால்களையுடைய சிறிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கூரை சமதளமுடையது. சோழர் காலத்தில் அர்ச்சுன மண்டபம் கட்டப்பட்டிருக்க வேண்டும். நான்கு கால்களை யுடைய சிறிய மண்டபத் தூண்கள் எண்பட்டையாகவோ வட்ட மானதாகவோ உள்ளன. பொதுவாக அர்ச்சுன மண்டபத்தின் தூண்கள் கோபுரஸ்தம்பங்களாகவும் பதினாறுபட்டை அமைப்புடைய தூண்களுடன் சதுரத் தூண்கள் இணைந்த தாகவும் காணப்படும். இந்திரகாந்தத் தூண்கள் என்றழைக்கப் படும் பதினாறுபட்டைத் தூண்கள் சோழர்கால பாணியாகும். அர்ச்சுன மண்டபத்தோடு இணைந்து கிளி மண்டபம் தெற்கில் உள்ளது. கிளிமண்டபம் வட்டமான உயரமான ருத்ரகாந்த தூண்களால் கட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் திருச்சுற்றின் மேற்கில் நான்கு கால்களையுடைய மண்டபங்கள் இரண்டு காணப்படுகின்றன. இவை திருமஞ்சன காப்பு மண்டபம் என அழைக்கப்படுகின்றன. இம்மண்டபத் தூண்கள் கருமையான பளிங்குக் கற்களால் கட்டப் பட்டுள்ளன. இவற்றின் கூரை மரத்தாலானது. இவை மதுரை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டவையாகும். அதேபோன்று கிழக்குத் திருச்சுற்றில் இரண்டு நான்குகால் மண்டபங்கள் உள்ளன. இவற்றின் தூண்கள் சது'ரம் மற்றும் பதினாறு பட்டைத் தூண்களாகும். பிறிதொன்று வட்டமான தூண்களை யுடையது. உற்சவர் இம்மண்டபங்களில் சிறிதுநேரம் தங்குவார்.

மூன்றாவது சுற்றில் கொடியேற்ற மண்டபம் உள்ளது. அதன் இரு பக்கங்களில் கிழக்கே டோலோத்சவ அல்லது ஊஞ்சல் மண்டபமும் அதனெதிரே மேற்கே பவித்ரோத்சவ மண்டபமும் உள்ளது. மூன்றாவது திருச்சுற்று தொடங்கும் இடத்தில் பவித்தோற்சவ மண்டபத்தின் அருகே நான்கு கால்களையுடைய மண்டபம் உள்ளது. இம்மண்ட பம் சமதள கூரையுடையது.

இத்தூண்கள் பதினாறு பட்டைகளையுடைய சோழர்கால இந்திரகாந்த தூண்களாகும். தூணின் இதழ் கலசம் ஆகியவை அழகானவை. இம்மண்டபம் வழியாக மூன்றாவது திருச்சுற்றை சுற்றிவரும்போது மேற்கிலும் வடக்கிலும் அமைந்திருப்பது துறைப்பிரகார மண்டபம் ஆகும். இது விஜயநகர காலத்தில் கட்டப்பட்டது. இதன் வழியாகச் சென்றால் வடக்கில் இத்திருச் சுற்றில் அமையும் பரமபதவாசலை அடையலாம். துறைப்பிரகார மண்டபத்தின் அடியில் பல நதிகள் செல்வதாக ஐதீகம். இந்நதிகளில் குளித்த பின்பே பெருமாள் மகோத்சவ காலத்தில் பரமபதவாசல் வழியாகச் செல்வார். துறைப்பிரகார மண்டபத்தின் மத்தியில் ஒரு நவரங்க மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு கால்களையுடைய ஒரு மண்டபம் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபம் சதுரமும் பட்டையுமாய் அமைந்த நான்கு தூண்களையுடையது. இச்சிறிய மண்டபத்தின் கூரை மரத்தாலானது. இந்நான்குகால் மண்டபம் ஓர் உயரமான அதிட்டானத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வதிட்டானம் அழகிய சிற்ப வேலைபாடுகளையும் அழகிய உறுப்புகளையும் உடையது. இம்மண்டபத்திற்கு ஏறிச் செல்வதற்கு யாளி, துதிக்கை அமைப்புடையப் படிக்கட்டு உள்ளது (hasti hasta staircase). இம்மண்டபம் இத்திருச்சுற்றின் வடக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் சந்திக்கும் இடத்தில் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. வடக்கிலும் மேற்கிலும் உயரமான திருச்சுற்று மண்டபம் அதனையொட்டி அமைந்துள்ளது. மேற்கில் பதினாறுபட்டைத் தூண்களும் சதுரத் தூண்களும் இணைந்த தூண்கள் மிகவும் உயரமான அளவில் கட்டப்பட்டுள்ளன. அதன்மேல் சமதளகூரை உள்ளது. இம்மண்டபத்தில் ஏராளமான தூண்கள் வட்டமான உயரமான தூண்கள் ஆகும். தசவதார சிற்பங்கள் சில வடக்கு துறைப்பிராகர மண்டபத் தூண்களில் இணைக்கப்பட்டுள்ளன. அடுத்து இதனைத் தொடர்ந்து கிழக்கில் இத்திருச்சுற்றில் பிறிதொரு சமதள கூரையுடைய நான்குகால் மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. கிழக்குத் திருச்சுற்று வழியாக வந்து டோலோத்சவ மண்டபத்தை அடையலாம். அடைந்தவுடன் நாம் காண்பது துலாபார மண்டபம் ஆகும். இங்கு பக்தர்கள் தங்கள் எடைக்கு எடை தானியங்களை பெருமாளுக்கு வழங்கி வேண்டுகின்றனர்.

மூன்றாவது திருச்சுற்றில் காணப்படும் ஊஞ்சல் மண்டபம் அழகானது. இது விஜயநகர காலத்திய கட்டடக் கலைக் கூறுகளையுடைய மண்டபம் ஆகும். இம்மண்டபத்தின் தூண்கள் விஜயநகர அரசர்களால் கட்டப்பட்ட காஞ்சிபுர கோயில்களின் மண்டபத் தூண்களை ஒத்ததாகவே உள்ளது. ஊஞ்சல் மண்டபத்தின் வாயிலில் இருயானைகள் நிறுத்தப் பட்டுள்ளன. இது ஹொய்சாள மரபாகும். விஜயநகர கலைமரபு பல தென்னிந்திய கலைக்கூறுகளின் சங்கமமாகும்.[4] ஊஞ்சல் மண்டபத்தில் உயரமான உபபீடம் எழுப்பப்பட்டுள்ளது. மத்திய நான்கு தூண்களைச் சுற்றி இரண்டு வரிசைத் தூண்கள் சுற்றிலுமாக அமைக்கப்பட்டுள்ளன. நவரங்க மண்டபங்களை விஜயநகரத்திலும் ஹொய்சாள சாளுக்கிய கலைமரபிலும் காணலாம்.[5] இவ்வூஞ்சல் மண்டபத்தில் பலவகையான தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. சதுரமும் பட்டைகளுமான தூண்களுடன் யாளி இணைக்கப்பட்ட தூண்களும், பதினாறு பட்டைத் தூண்களும், சதுரத்தூண்கள் இணைந்தும் காணப்படுகின்றன. அழகிய புடைப்புச் சிற்பங்களும், கொடிக்கருக்கு பூ வேலைப் பாடுகளும் மிகுந்த தூண்களாக காணப்படுகின்றன. மத்தியில் காணப்படும் நான்கு தூண்களின் மேல்விதானத்தில் ஊஞ்சல் கட்டுவதற்கான அமைப்புகள் உள்ளன. பொதுமக்கள் கீழிருந்து பார்ப்பதற்கு ஏதுவாக இம்மண்டபத்தின் உபபீடமும் அதிட்டானமும் மிகவும் உயரமாக எடுப்பாக உள்ளது.

ஊஞ்சல் மண்டபத்திற்கு எதிரே பவித்ரோத்சவ மண்டபம் உள்ளது. இரண்டு மண்டபங்களுக்கும் இடையில் நான்கு கால்களையுடைய ஒரு மண்டபம் காணப்படுகிறது. இத்தூண்கள் பளபளப்பான கருங்கற்களால் அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் கூரை மரத்தால் செய்யப்பட்டது. மரத்தால் செய்யப்பட்ட கூரை அமைப்புடைய மண்டபங்கள் பொதுவாக மதுரை நாயக்கர்களால் மதுரை, திருநெல்வேலி பகுதிகளிலுள்ள கோயில்களில் ஏராளமாகக் கட்டப்பட்டுள்ளன.

ஊஞ்சல் மண்டபத்தின் எதிரே காணப்படும் பவித்ரோத்சவ மண்டபம் விஜயநகர கலைப் படைப்பாகும். இதனுடைய உபபீடமும் அதிட்டானமும் உயரமானது. இதற்கு

வாயில்கள் கிழக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் வடக்குப் பகுதியில் நான்கு கால்களையுடைய ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. வட்டமான தூண்களாலான இந்நான்குகால் மண்டபத்தின் கூரை மரத்தாலானது. பவித்ரோத்சவ மண்டபத்தில் ஆறுவரிசைத் தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. சதுரப்பட்டை அமைப்புடைய தூண்களுடன் சதுரத் தூண்கள் இணைந்து காணப்படுகின்றன. இத்தூண்களின் போதிகையின்கீழ் முஷ்டிபந்தம், சிங்கம், ஆளாங்கு, கொடுங்கால் அமைப்புகள் உள்ளன.

நான்காவது திருச்சுற்று ஆரியப்படாள் வாசலைத் தாண்டி வெளியே காணப்படுவதாகும். இத்திருச்சுற்றில் தெற்குப் பகுதியில் ஆறு நான்குகால் மண்டபங்கள் உள்ளன. இவை விஜயநகர, நாயக்கர் கால படைப்புகளாகும். ஆரியப்படாள் வாசல் எதிரேமிகவும் ஒய்யாரமான கருடமண்டபம் உள்ளது. இது மதுரை நாயக்கர்களால் கட்டப்பட்டது. இதனருகே மேற்குப் பகுதியில் அழகான ஒரு நான்குகால் மண்டபம் சமதள கூரையுடன் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக மரத்தால் செய்யப்பட்ட கூரையுடைய மண்டபங்கள் யாவும் குடிசை போல் கூரை வேயப்பட்டுள்ளது. நான்காவது திருச்சுற்றின் வடக்கே ஆதிநாராயணன் சன்னதியருகே ஒரு சமதள கூரையுடைய நாலுகால் மண்டபம் விஜயநகர பாணியில் கட்டப்பட்டுள்ளது. அடுத்து பரமபதவாசலருகே இச்சுற்றில் பதினாறு கால்களைக்கொண்ட சமதள கூரையுடைய ஒரு மண்டபம் காணப்படுகிறது. அதன்முன்பு ஒரு நாலுகால் மண்டபமும், கிழக்குப் பக்கத்தில் திருச்சுற்றில் ஐந்து நான்குகால் மண்டபங்களும் வரிசையாகக் காணப்படுகின்றன. இவை யாவும் விஜயநகர காலத்திலேயே கட்டப்பட்டனவாகத் தெரிகின்றன.

பரமபதவாசலின் நேர் வடக்கே தாயார் சன்னதிக்குச் செல்லும் வழி உள்ளது. தாயார் சன்னதியிலும் திருச்சுற்றிலும் பல மண்டபங்கள் உள்ளன. தாயார் சன்னதிக்கு முன்பு கம்பராமாயண அரங்கேற்ற மண்டபம், கருத்துரை மண்டபம் ஆகியவை வெளியே உள்ளன. தாயார் சன்னதி

மகாமண்டபத்தின் கிழக்கே நவராத்திரி மண்டபம் ஒரு மேடையின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. நவராத்திரிகொலு வைப்பதற்கு ஒரு அல்பவிமானத்தையுடைய சிறிய நான்குகால் மண்டபம் வட்டமான தூண்களால் கட்டப்பட்டுள்ளது. தாயார் சன்னதியின் மேற்கில் திருச்சுற்றில் ஒரு நாலுகால் மண்டபமும் ஒரு நவரங்க மண்டபமும் கட்டப்பட்டுள்ளன. மேலும் மேற்குத் திருச்சுற்றில் இரண்டு நான்குகால் மண்டபங்களும் உள்ளன. தாயார் சன்னதியில் உள் திருச்சுற்றில் பல மண்டபங்கள் உள்ளன. தாயார் சன்னதியின் முன்பு கொலு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலின் இருமருங்கிலும் யானைகள் படிக்கட்டுகளில் உள்ளன. யாளித் தூண்கள் மண்டபத்தின் முன்பு வரிசையாக உள்ளன. இம்மண்டபத்தின் தூண்கள் அழகானவை. போதிகை, முஷ்டிபந்தம், சிங்கம், ஆளாங்கு, கொடுங்கால், பலகை இழ்களுடைய தூண்களாக இவை அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் வடக்குப் பகுதியில் நான்கு கால்களையுடைய அழகான சிறிய மண்டபம் உள்ளது. இதன் கூரை விமானத் தளங்கள் போல் அமைக்கப்பட்டுள்ளன. பொன்முலாம் பூசப் பட்ட செப்புத் தகடுகளால் கூரை வேயப்பட்டுள்ளது. கொலு மண்டபத் தூண்கள் பல சதுரப்பட்டம் மற்றும் சதுரத் தூண்களின் இணைவாக உள்ளன.

தாயார் சன்னதி முதல் திருச்சுற்றின் மேற்கில் இரண்டு நான்குகால் மண்டபங்கள் உள்ளன. இத்திருச்சுற்றின் மேற்கிலும் வடக்குப் பகுதியிலும் இணைந்த பங்குனி உத்திர மண்டபம் மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுகளுடைய மண்டபம் ஆகும். பங்குனி உத்திரத்தில் கலக உற்சவம் இம்மண்டபத்தில் வைத்து நடைபெறுகிறது. இத்திருச்சுற்று மண்டபம் மேற்குத் திருச்சுற்றுப் பாதையையும் வடக்கு, தெற்குத் திருச்சுற்றுப் பாதையையும் இணைத்தே கட்டப்பட்டுள்ளது. மதுரை நாயக்கர் காலத்தில் இது கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இம்மண்டப சமதள கூரைகளில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் இருவரிசைத் தூண்கள் இருபது இருபதாக மிகவும் உயரமானதாக நிறுத்தப்பட்டுள்ளன. இத்தூண்கள் எண்பட்டை மற்றும் சதுரத் தூண்களின் இணைவாக உள்ளன. பங்குனி உத்திர மண்டபத்தின் வடமேற்கு மூலையிலும் வடகிழக்கு

மூலையிலும் உயரமான உபபீடமும் அதிட்டானமும் உடைய மண்டபங்கள் உள்ளன. நான்கு கால்களையுடைய சிறிய மண்டபம் வடமேற்கு மூலையில் உள்ளது. இதன் தூண்கள் வட்டமானவை. கூரை மரத்தாலானது. இம்மண்டபத்தின்கீழ் அமைந்துள்ள மேடையின் உபபீடமும் அதிட்டானமும் மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுகளுடையவை. அதிட்டானத்தில் திரிபட்ட குமுதம், பத்மம் ஆகியவையும் கடகவிருத்த குமுதமும் மிகவும் அழகானவை. பலசிற்ப வரிசைகளும் இம்மேடையில் உள்ளன. அதிட்டானமும் உபபீடமும் மதுரை நாயக்கர்களின் கைவண்ணத்தை எடுத்துக்காட்டுகின்றன. நாயக்கமன்னர்களின் முழு உருவ (portrait) சிற்பங்கள் தூண்களில் இணைக்கப் பட்டுள்ளன. தாயார் சன்னதியைச் சுற்றியுள்ள மண்டபங்கள் யாவும் மதுரை நாயக்கர்களின் படைப்பாகும். அழகிய உயரமான சிற்பங்கள் தூண்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பங்குனி உத்திர மண்டபத்தின் வடக்கே தாயார் வசந்த உற்சவ மண்டபம் உட்பகுதியில் உள்ளது. இவ்வுற்சவ மண்டபத்தில் நான்கு தூண்களையுடைய ஒரு சமதளகூரையுடைய சிறிய மண்டபம் உள்ளது. அதைச் சுற்றி தோட்டம் காணப்படுகிறது.

நான்காவது திருச்சுற்றின் கிழக்கில் பல மண்டபங்கள் உள்ளன. வேடுபறி, குதிரை வையாளி நிகழ்ச்சிகள் இப்பகுதியில் தான் நடைபெறுகின்றன. இத்திருச்சுற்றுப் பகுதி மிகவும் விசாலமான இடத்தை உடையதாகும். இப்பகுதியில் ஐந்து நாலுகால் மண்டபங்களும் ஒரு பன்னிரண்டு கால் மண்டபமும் உள்ளது. இப்பன்னிரண்டு கால் மண்டபம் ஒரு சோழர்கால படைப்பாகும். அதையடுத்து காணப்படும் ஒரு நாலுகால் மண்டபம் அணியொட்டிக்கால் வகையைச் சார்ந்த தூண்களை யுடையது, அதில் அழகிய பெரிய சிற்பங்கள் தூண்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பெண் தெய்வங்களும், அழகிகளும் இத்தூண்களில் பெரிய வடிவில் உள்ளன. இது மதுரை நாயக்கர் படைப்பாகும். பன்னிரண்டு கால் மண்டபத்தில் பதினாறு பட்டை இந்திரகாந்த தூண்களுடன் சதுரத் தூண்கள் இணைந்து காணப்படுகின்றன. பொதுவாக பதினாறுபட்டை இந்திரகாந்த தூண்கள் சோழர் காலத்தவையாகும்.

வேடுபறி நிகழ்ச்சியில் பெருமாளும் தாயாரும் தங்குவதற்கான இரண்டு நான்கு கால்களையுடைய மண்டபங்கள் உள்ளன. அதிலுள்ள தூண்கள் ஆணியொட்டிக் கால் வகையைச் சார்ந்தது. பெரிய அளவிலான சிற்பங்கள் (portrait) இத் தூண்களில் இணைக்கப்பட்டுள்ளன. இதுவும் மதுரை நாயக்கர்காலப் படைப்பாகும். பொதுநிலையில் மதுரை நாயக்கர்களின் நான்குகால் மண்டபங்கள் மிகவும் அழகான சிற்ப வேலைப்பாடுகள் உடையதாகவும் கொடிக்கருக்கு, பூ வேலைப் பாடுகள் மிகுந்ததாகவும் காணப்படுகின்றன.

நான்காவது திருச்சுற்றில் காணப்படும் கருட மண்டபம் மிகவும் ஒய்யாரமானதும் பிரம்மாண்டமானதுமாகும். இது மதுரை நாயக்கர்களால் கட்டப்பட்ட மண்டபம் ஆகும். ஒன்பது வரிசைகளில், வரிசைக்கு பதினாறு பெரிய தூண்கள் நிறுத்தப் பட்ட சமதளகூரை அமைப்புடைய மண்டபமாகும். தூண்களில் போதிகை, சிங்கம், ஆளாங்கு, கொடுங்கால் போன்ற அமைப்புகள் உள்ளன. தூண்கள் பதினாறு பட்டைகளுடன் சதுரத் தூண்கள் இணைந்து காணப்படுகின்றன. தூண்களில் உயரமான நாயக்கர்கள் மற்றும் உபயதாரர்கள், பெண்கள், படைத்தலைவர்கள் சிற்பங்கள் (portrait) அஞ்சலி முத்திரையுடன் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் கருடன் சன்னதி முன்னால் உயரமான வட்டமான பளிங்கு கருங்கற்களாலான சமதள கூரையுடைய ஒரு நாலுகால் மண்டபமும் உள்ளது.

கருட மண்டபத்தைக் கடந்து வெளியே வரும்போது ஐந்தாவது திருச்சுற்று அமைகின்றது. இங்கு வாயில் எதிரே ரெங்கவிலாச மண்டபம் உள்ளது. இது மதுரை நாயக்கர்களின் படைப்பாகும். ரெங்கவிலாச மண்டபத்தின் மேற்கில் வாகன மண்டபம் உள்ளது. வாகன மண்டபத்தின் மேற்கில் ஒரு மேடை அமைக்கப்பட்டுள்ளது. நான்கு வரிசைத் தூண்கள் எட்டு எட்டாக அமைக்கப்பட்டுள்ளது. இத்தூண்களின் போதிகையைத் தொடர்ந்து சிங்கம், ஆளாங்கு, கொடுங்கால், பலகை, இதழ், கலசம் முதலியவை உள்ளன. அதனடியில் பதினாறுபட்டை மற்றும் சதுரத்தூண் இணைந்த தூண்கள் உள்ளன. நாகபந்தம் சதுரப்பகுதியின் மூலையில் உள்ளது. கொடிக்கருக்கு மற்றும் பூ வேலைப்பாடுகள் இத்தூண்களில் உள்ளன.

அடுத்து சக்கரத்தாழ்வார் சன்னதியருகே ஐந்தாவது திருச்சுற்றின் மேற்கில் பெருமாள் வசந்த உற்சவ மண்டபம் உள்ளது. அவ்வசந்த உற்சவ மண்டபம் செல்லும் திருச்சுற்றில் நான்கு நாலுகால் மண்டபங்கள் சமதள கூரையுடன் உள்ளன. வசந்த உற்சவ மண்டபத்தின் நடுவில் ஒரு நான்குகால் மண்டபமும் அதைச்சுற்றி ஒரு சிறிய நீரகழியும் அதற்கப்பால் ஒரு திருச்சுற்று மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. நடுவிலிருக்கும் நான்குகால் மண்டபம் ஒரு சமதள கூரை அமைப்புடையது. கிழக்குத் திருச்சுற்றில் ஐந்து நாலுகால் மண்டபங்கள் உள்ளன. சேஷராயர் மண்டபத்தின் எதிரே ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. இது தஞ்சை நாயக்கர்களால் கட்டப்பட்டதாக சிலர் கருதுகின்றனர். இவ்வாயிரங்கால் மண்டபத்தில் மகோத்சவத்தின் போது பெருமாளை வைப்பதற்கு ஒரு மேடையும் பின்னால் கனுமாதத்தில் நடைபெறும் கனு திருவிழாவுக்கான ஒரு மேடையும் உள்ளது. பலவகையான தூண்களும் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த தூண்களும் இம்மண்டபத்தில் உள்ளன. சமதள கூரையுடைய இம்மண்டபத்தின் முன்னால் யாளித் தூண்கள் உள்ளன. மகோத்சவத்தின்போது இம்மண்டபத்தில் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கும். வைகுண்ட ஏகாதசி மகோத்சவத்தில் பெருமாளும் ஆழ்வார்கள் ஆச்சாரியார்களும் ஒன்பது நாட்கள் இங்கு வருகை தருவர். பொதுஜன சேவை இங்கு நடைபெறும்.

இத்திருச்சுற்றில் அமைந்துள்ள சேஷராயர் மண்டபம் உலகப் பிரசித்திப் பெற்றதாகும். இது மதுரை நாயக்கர்களின் அழகிய கலைப் படைப்பாகும். இம்மண்டபத்தின் முன் வீரர்களுடைய எட்டு குதிரைத் தூண்களும் அவற்றினடியில் இருக்கும் புலி, வீரர்கள், பெண்கள் சிற்பங்களும் பிற வேலைப் பாடுகளும் மதுரை நாயக்கர்களின் தனித்தன்மையை எடுத்துக் காட்டுவன. இம்மண்டபத்தின் மத்தியில் நான்கு பெரிய மத்திய தூண்களும் அவற்றுடன் இணைந்த நாயக்கர் மன்னர்களின் சிற்பங்களும் (portrait) சிறப்பானவை. ஏழு வரிசைத் தூண்கள் இம்மண்டபத்தில் உள்ளன. ஒவ்வொரு வரிசையிலும் ஏழு தூண்கள் உள்ளன. மத்திய நான்கு தூண்களைவிட அளவில் இவை சிறியவை. அவற்றில் புடைப்புச் சிற்பங்கள் ஏராளமாக வடிக்கப்பட்டுள்ளன. பதினாறு பட்டை இந்திரகாந்த

தூண்களும் சதுரப்பட்டைத் தூண்களும் மிகுதி. ஒவ்வொரு இந்திரகாந்த தூண்களுடன் இணைந்த சதுரத்தூண்களில் நாயக்கர் உருவங்கள் பெரிய அளவில் (portrait) வடிக்கப்பட்டுள்ளன. இம்மண்டப தூண்களின் போதிகையை அடுத்து சிங்கமும், ஆளாங்கும், கொடுங்கால் போன்ற உறுப்புகளும் உள்ளன. இம்மண்டபத்தின் எட்டு குதிரைகளையுடைய தூண்களின் சிற்ப வேலைப்பாடுகள் மிகவும் பிரசித்திப் பெற்றவை. உலகக் கலைஞர்களால் பாராட்டப்படுபவை. மதுரை நாயக்கர்களின் தனித்தன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்குதிரைத் தூண்களின் பாணியைப் பின்பற்றி பிற்காலத்தில் பல தூண்கள் தஞ்சை நாயக்கர்களின் கோயில்களிலும் பிற்கால ஆவுடையார் கோயில் மண்டபங்களிலும் மதுரை புது மண்டபததிலும் பிற மதுரை நாயக்கர் கோயில்களிலும் ஏராளமாக வடிக்கப் பட்டுள்ளன. ஆவுடையார் கோயிலில் காணப்படும் குதிரைகள் வெவ்வேறு அலங்கார வேலைப்பாடுகளுடன் மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகளுடனும் வடிக்கப்பட்டுள்ளன. இவை மதுரை நாயக்கர்களின் அற்புதமான கலைத்திறமையை எடுத்துக்காட்டுவனவாகும்.

ஐந்தாவது திருச்சுற்றின் தெற்கில் காணப்படும் ரெங்க விலாச மண்டபம் மிகவும் நேர்த்தியானது; உயரமானது. இம்மண்டபத்தின் வடக்கில் ஒரு நாலுகால் மண்டபம் காணப்படுகிறது. அம்மண்டபத் தூண்கள் ஆணிமே ரட்டிக்கால் வகையைச் சார்ந்ததாகும். மேலும் இம்மண்டபத்தில் நான்கு வரிசைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வரிசையிலும் பன்னிரண்டு தூண்கள் உள்ளன. தூண்களின் மத்தியில் பதினாறுபட்டையும் அதன் இருமருங்கிலும் சதுரத் தூண்களும் இணைந்து காணப்படுகின்றன. மிகவும் விசாலமான தூண்களாக அமைந்துள்ளன. போதிகை, சிங்கம், ஆளாங்கு, கொடுங்கால், கலசம் போன்ற உறுப்புக்களின் கீழ் இத்தகைய தூண் கால்கள் அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் முன் வரிசையில் நான்கு யாளித் தூண்கள் உள்ளன. யாளியின் துதிக்கை அதன்கீழே இருக்கும் யானையின் துதிக்கையுடன் (Probocis) இணைந்து காணப்படுகிறது. சமதள கூரையின் மேலுள்ள கொடுங்கையில் இருமடிப்புகள் (Double flexure) உள்ளன. வைகுண்டநாதன், அரங்கநாதர், இராமர், இலஷ்மி வராகம் முதலிய சுதை சிற்பங்கள் உள்ளன.

ரெங்கவிலாச மண்டபத்தின் தென்மேற்கில் உயரமான ஒரு மேடையின் மேல யானை மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்தில் நான்கு தூண்கள் முன்வரிசையிலும் நான்கு தூண்கள் பின் வரிசையாகவும் உள்ளன. இம்மண்டபம் பாண்டியர் கலைப்பாணியை (style) உடையது. இம்மண்டபத்தின் சுபோதத்தின் மேல் நிற்கும் யாளி வரிசைகள் உள்ளன.

அடுத்து ரெங்கவிலாச மண்டபத்தின் முன்னால் அமையும் ஒரு நாலுகால் மண்டபம் மிகவும் அழகான கலைப்படைப் பாகும். இதுவும் மதுரை நாயக்கர் பாணியில் அமைந்ததாகும் (style). இம்மண்டபத்தின் சமதளகூரை விதானத்தில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சுதையாலான கருடன் சிற்பங்கள் கூரையின் மேல் உள்ளன. சதுரப்பட்டைத் தூண்களில் எண்பட்டையாலான மூன்று தூண்கள் இணைந்து காணப்படு கின்றன. இத்தூண்களில் முழுஉருவ நாயக்கர் சிற்பங்கள் (portrait) உள்ளன. தூண்களின் அதிட்டானத்திலும் அழகிய சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் யாளிகளும் இணைக்கப்பட்டுள்ளன. யாளியின் துதிக்கை யானையின் துதிக்கையுடன் இணைந்துள்ளது.

ஆறாவது திருச்சுற்றின் வடக்கில் தேர்மண்டபம் உள்ளது.

ஏழாவது திருச்சுற்றின் வடக்கில் கோயிலின் வாயிலின் நேரெதிரே உறியடி உற்சவ நான்குகால் மண்டபம் உள்ளது. இத்தூண்கள் இந்திரகாந்த தூண்களாகும். சோழர்கால தூண்களின் பாணியில் படைக்கப்பட்டுள்ளன. உறிகள் கட்டுவதற்கான ஒரு பலகை இம்மண்டபத்தின் இரு தூண்களுக் கிடையே காணப்படுகிறது.

இம்மண்டபத்தின் முன்னால் சிறிது தூரத்தில் ராஜகோபுரத்தின் முன்னால் ஒரு நாலுகால் மண்டபம் காணப்படுகிறது. இராஜகோபுரத்திற்கு வெளியே ஒரு பதினாறுகால் மண்டபம் உள்ளது. அதன் முன்பு தெருவில் ஒரு நாலுகால் மண்டபமும் உள்ளது.

கோயிலைச் சுற்றி பெருமாள் உலாவரும் வீதிகளிலும் ஆங்காங்கு பல மண்டபங்கள் அவர் தங்குவதற்காகவே கட்டப்

பட்டுள்ளன. காவேரிக் கரையில் அம்மா மண்டபமும் பிற உற்சவ மண்டபங்களும் உள்ளன. வெவ்வேறு சமூகப் பிரிவுகள் தங்களுக்கென சில ஆஸ்தான மண்டபங்களை தற்காலத்தில் கட்டியுள்ளனர். இம்மண்டபங்களில் உற்சவர் தங்கிச் செல்வார். எங்கெல்லாம் மண்டபங்கள் உள்ளதோ அங்கெல்லாம் பெருமாள் உற்சவத்தின்போது ஓய்வு எடுத்துக்கொள்வார்; அல்லது தங்குவார். உற்சவ காலங்களில் இம்மண்டபங்கள் அழகிய மலர்களால் அலங்கரிக்கப்படுகின்றன.

### அடிக்குறிப்புகள்

1. See Kulathuran, G., 1989
2. *பார்க்க, பதிப்பாசிரியர், 1996*
3. Jovenue Dubriel, G., 1987, p.5
4. Saletore. R.N., 1982, p.50
5. Kulathuran, G., 1989. p.3.

# 4. திருவரங்கம் அரங்கநாதர் கோயில் திருவிழாக்கள் அமைப்பு முறை

திருவரங்கத்தில் அமைந்திருக்கும் அரங்கநாதர் கோயில் ஒரு தென்கலை வைணவக் கோயிலாகும். இக்கோயில் மூலவர் அரங்கநாதர் ஆதிசேஷன் மீது பள்ளிக் கொண்டிருக்கிறார். அவரது துணைவி ரங்கநாயகிக்கும் தனி சன்னதி இக்கோயிலில் வடக்குப் பகுதியில் காணப்படுகிறது. மூலவராகிய அரங்கநாதருக்கும் அரங்கநாயகிக்கும் தனித்தனியே உற்சவங்கள் நடத்தப்படுகின்றன.

அரங்கநாதர் ஆலயத்தில் சித்திரை முதல் பங்குனி வரை ஒரு வருடத்தில் பல திருவிழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன. சித்திரை மாதத்திலிருந்து விழாக்கள் தொடங்குகின்றன. சதுர்மாதம் முடிந்தவுடன் விழாத் தொடக்கம் என்பது திருவரங்கத்தில் காணப்படவில்லை. இவ்விழாக்கள் ஒருநாள் முதல் இருபது நாள்கள் வரையிலும் நடத்தப்படுகின்றன. பதினைந்து வருடாந்திர திருவிழாக்கள் இரண்டு நாள் முதல் பதினொரு நாள்கள் வரையிலும் நடைபெறுகின்றன. பதினாறு ஒரு நாள் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. வைகுண்ட ஏகாதசி என்ற மகோத்சவமானது இருபது நாள்கள் வரையிலும் நடைபெறுகிறது.

## அரங்கநாதர் திருவிழாக்கள் (1997 - 1993)[1]
## (பசலி 1406 - 1407)

| வ. எண் | உற்சவத்தின் பெயர் | மாதம் | நாள்கள் (ஆங்கில தேதி) | மொத்த நாள்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீநம்பெருமாள் கோடைத் திருநாள் (பூச்சாற்று உற்சவம்) (வெளிக்கோடை) | சித்திரை | 12.4.97 - 16.4.97 | 5 நாள்கள் |
| 2. | ஸ்ரீ ராம நவமி | சித்திரை | 16.4.97 | 1 நாள் |
| 3. | உள்கோடை | சித்திரை | 17.4.97 21.4.97 | 5 நாள்கள் |
| 4. | நம்பெருமாள் சித்ராபௌர்ணமி கஜேந்திரமோட்சம் | சித்திரை | 22.4.97 | 1 நாள் |
| 5. | சித்திரைத்தேர் திருவிழா | சித்திரை | 27.4.97 7.5.97 | 11 நாள்கள் |
| 6. | ஸ்ரீநமபெருமாள் வசந்த உற்சவம் | சித்திரை வைகாசி | 14.5.97 22.5.97 | 9 நாள்கள் |
| 7. | ஸ்ரீநம்பெருமாள் ஜ்யேஷ்டா பிஷேகம் | ஆனி | 20.06.97 | 1 நாள் |
| 8. | திருப்பாவாடை | ஆனி | 21.6.97 | 1 நாள் |
| 9. | பதினெட்டாம்பெருக்கு | ஆடி | 03.8.97 | 1 நாள் |
| 10. | ஸ்ரீநம்பெருமாள் -ஸ்ரீஜெயந்தி உறியடி புறப்பாடு | ஆவணி | 26.8.97 - 27.8.97 | 2 நாள்கள் |
| 11. | ஸ்ரீநம்பெருமாள் பவித்ரோத்சவம் | ஆவணி புரட்டாசி | 13.9.97 - 21.9.97 | 9 நாள்கள் |
| 12. | நம்பெருமாள் விஜயதசமி புறப்பாடு | புரட்டாசி | 11.10.97 | 1 நாள் |
| 13. | துலாமாதம்-விஷு - புண்யகாலம் | புரட்டாசி | 17.10.97 | 1 நாள் |
| 14. | ஸ்ரீநம்பெருமாள் ஊஞ்சல் (டோலோத்சவம்) | ஐப்பசி | 19.10.97 27.10.97 | 9 நாள்கள் |
| 15. | ஸ்ரீநம்பெருமாள் தீபாவளி திருவிழா | ஐப்பசி | 30.10.97 | 1 நாள் |
| 16. | ஸ்ரீநம்பெருமாள் கைசிக ஏகாதசி | கார்த்திகை | 10.12.97 | 1 நாள் |
| 17. | ஸ்ரீநம்பெருமாள் திருகார்த்திகை | கார்த்திகை | 14.12.97 | 1 நாள் |
| 18. | வைகுண்டஏகாதசி | மார்கழி | 29.12.97 17.1.98 | 20 நாள்கள் |
| | பகல்பத்து - திருமொழித் திருநாள் | மார்கழி | 29.12.97 7.1.98 | |
| | இராப்பத்து - திருவாய்மொழி திருநாள் | மார்கழி தை | 8.1.98 - 17.1.98 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | தைத்தேர் திருநாள் (பூபதித் திருநாள்) | தை | 1.2.98 - 11.2.98 | 11 நாள்கள் |
| 20. | தெப்பத்திருநாள் - திருப்பள்ளியோடத் திருநாள் | மாசி | 1.3.98 - 9.3.98 | 9 நாள்கள் |
| 21. | ஸ்ரீநம்பெருமாள் ஸம்வத்ஸராதி | பங்குனி | 28.3.98 | 1 நாள் |
| 22. | ஆதிபிரம்மோத்சவம் | பங்குனி | 2.4.98 - 12.4.98 | 11நாள்கள் |

## அரங்கநாயகி திருவிழாக்கள்

| வ. எண் | உற்சவத்தின் பெயர் | மாதம் | நாள்கள் (ஆங்கில தேதி) | மொத்த நாள்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீரங்கநாச்சியார் கோடைத் திருநாள் (பூச்சாற்று உற்சவம்) வெளிக்கோடை. | வைகாசி | 28.5.97 - 1.6.97 | 5 நாள்கள் |
| | உள்கோடை | வைகாசி | 2.6.97 - 6.6.97 | 5 நாள்கள் |
| 2. | ஸ்ரீரங்கநாச்சியார் வசந்த உற்சவம் | வைகாசி | 7.6.97 - 13.6.97 | 7 நாள்கள் |
| 3. | ஸ்ரீ ரங்கநாச்சியார் ஜேஷ்டா பிஷேகம் | ஆனி | 27.6.97 | 1 நாள் |
| 4. | திருப்பாவாடை | ஆனி | 28.6.97 | 1 நாள் |
| 5. | ஸ்ரீரங்கநாச்சியார் நவராத்திரி உற்சவம் | புரட்டாசி | 2.10.97 - 10.10.97 | 9 நாள்கள் |
| 6. | ஸ்ரீ ரங்கநாச்சியார் ஊஞ்சல் (டோலோத்சவம்) | ஐப்பசி | 1.11.97 - 7.11.97 | 7 நாள்கள் |
| 7. | ஸ்ரீரங்கநாச்சியார் திருமொழித் திருநாள் | தை | 19.1.98 - 23.1.98 | 5 நாள்கள் |
| 8. | ஸ்ரீரங்கநாச்சியார் திருவாய்மொழித் திருநாள் | தை | 24.1.98 28.1.98 | 5 நாள்கள் |

பாஞ்சராத்ர ஆகமங்களும் பஞ்சாங்கங்களும் முறையே பொதுவான திருவிழாக்கள், நடத்தப்படும் முறைகள், சடங்குகள் மற்றும் காலத்தையும் நிர்ணயிக்கின்றன. எந்தெந்த ஆகமங்கள் குறிப்பாக திருவரங்கம் கோயில் திருவிழாக்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன என்பது ஆய்வுக்குரியதாகும். பரமேஸ்வர சம்கிதாவை பின்பற்றியே இங்குள்ள திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன என்று கூறப்படுகிறது. திருவரங்கம் கோயிலொழுகு செய்திகள் விழாக்களில் பங்குபெறும் அனைத்து

அலுவலர்களையும் அவர்களின் வேலைப் பிரிவுகளையும் விவரிக்கிறது. ஏராளமான அலுவலர்கள் ஒவ்வொரு விழாவிலும் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

பெரும்பான்மையான விழாக்களில் புறப்பாடு உண்டு. பொதுவாக திருவிழாவின் முக்கிய பகுதியே இறைவனை அல்லது உற்சவ மூர்த்தியை அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் ஏற்றி வீதி வழியே அல்லது கோயில் திருச்சுற்றுக்களில் வெளிக்கொணர்வ தாகும். பல்வேறு வகையான வாகனங்கள் ஒவ்வொருமுறை உற்சவர் புறப்பட்டுச் செல்லும்போதும் கொண்டுவரப்படும். வாகனங்கள் வீதிவழியே வரும்போது ஆங்காங்கு சிறிதுநேரம் தங்குகின்றன. அவை நிற்கும் இடத்திற்குமேல் அழகிய மலர்கள் தொங்கவிடப்பட்டிருக்கும் (canopies). சில இடங்களில் வாகனங்கள் அல்லது இறைவன் வந்து சிறிதுநேரம் ஓய்வு எடுப்பதற்கான உற்சவ மண்டபங்கள் ஆங்காங்கு கட்டப் பட்டிருக்கும். கோயிலுள்ளும் கோயிலின் வெளியிலும் பலவகையான உற்சவ மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆரம்ப காலம் முதல் இக்காலம் வரை பல்வேறு அரசுகளும் பல வகையான மண்டபங்கள் கட்டி வந்துள்ளனர். இவற்றில் விஜய நகர மற்றும் மதுரை நாயக்கர்கள் கட்டிய மண்டபங்கள் மிகுதி யாகும். கோயிலுக்கு வெளியே பல்வேறு இனத்தவர்களும் மண்டபங்களைக் கட்டியுள்ளனர். ஒரு பேரரசன் தனது அரண்மனையிலிருந்து புறப்பட்டு வெளியே செல்லும்போது எத்தகைய உபசரிப்புகளும் மரியாதைகளும் அளிக்கப்படுகிறதோ அதேபோன்று இறைவனுக்கு உபசரிப்புகளும் மரியாதைகளும் உணவும் பிறவும் அவ்வவ்விடங்களில் வழங்கப்படுகின்றன. இது அன்றைய அரசியல் அமைப்புகளின் (monarchy) வெளிப் பாடாகவே காணப்படுகின்றது.[1] இறைவனின் பல்வேறு தொழில்களும் உற்சவங்களின் மூலமாக மக்களுக்கு தெரிவிக்கப் படுகின்றன. உற்சவபுறப்பாட்டு வாகனங்களை திருவரங்கத்தில் பெரும்பான்மையும் வைணவ பிராமணர்களே தூக்கி வருகின்றனர். இதற்காக பரம்பரை பரம்பரையாக கோயிலில் சில பிராமண குடும்பங்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புறப்பாட்டுப் பணிகளையும் இவர்கள் கவனித்துக் கொள்கின்றனர். பிற சமூகத்தினரும் சில வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கோயிலொழுகு செய்திகள்

இவ்வலுவர்களின் நியமனம், சேவை, ஊதியம் ஆகியவற்றை விவரிக்கிறது. இம்மரபானது இன்றும் தொடர்ந்து வருகிறது.

சித்திரை மாதம் முதல் தொடர்ந்து பங்குனிமாதம் முடிய நடைபெறும் உற்சவங்களையும் அவற்றின் வகைகளையும் அவை நடைபெறும் முறைகளையும் அமைப்பையும் இங்கு கீழே விவரிக்கலாம்.

### 1. ஸ்ரீநம்பெருமாள் கோடைத் திருநாள் (பூசாற்று உற்சவம்)

இவ்விழா பங்குனிமாதம் 30-ஆம் தேதி தொடங்கி சித்திரை மாதம் 3-ஆம் தேதிவரை 5 நாட்கள் (வெளிக்கோடை) நடைபெறுகிறது. இவ்விழாவில் மலர்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இறைவனுக்கு மலர்கள் சாத்தப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் உற்சவர் படிமம் மூலஸ்தானத்திலிருந்து மாலை புறப்பட்டு கோயிலின் உள்ளேயுள்ள கோடை நாலுகால் மண்டபத்தினைச் சென்று சேருகிறது. அங்கு இறைவனுக்கு மலர் சாத்தப்படுகிறது. அந்நிகழ்ச்சி முடிந்ததும் இரவு புறப்பட்டு திரும்பவும் மூலஸ்தானத்தைச் சென்று சேருகிறது. இவ்வாறு ஐந்து நாள்களும் ஒரே சமயத்தில் கோடைத்திருநாள் நடைபெறுகிறது.

உட்கோடையானது கோயிலுக்குள்ளே உற்சவர் கொண்டு செல்லப்படுகிறார். ஆரம்பத்தில் மூலஸ்தானத் திலிருந்து உற்சவர் புறப்படுகிறார். வெளிக்கோடை நாலுகால் மண்டபத்திற்கு முதலில் எடுத்துச் செல்லப்படுகிறார். அங்கு சிறிது தங்கிவிட்டு அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு உட்கோடை மண்டபத்தை சென்று சேருகிறார். சிறிது நேரம் அங்கு தங்கிவிட்டு அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியங்களுடன் மூலஸ்தானத்தைச் சென்று சேருகிறார்.

வெளிக்கோடை ஐந்தாம் திருநாள் அன்று ராமநவமி இவ்விழாவுடன் நடத்தப்படுகிறது. அன்று வழக்கமான கோடை புறப்பாடுபோல் அல்லாமல் வேறுவித நிகழ்ச்சிகள் இணைக்கப் படுகின்றன. காலையில் உற்சவர் மூலஸ்தானத்திலிருந்து புறப்படு கிறார். கோயிலுள்ளே இரண்டாம் சுற்றில் காணப்படும் அர்ச்சுனமண்டபத்திற்கு உற்சவர் கொண்டு வரப்படுகிறார்.

அங்கு திருமஞ்சனம் நடத்தப்படுகிறது. இறைவனுக்கு திருமஞ்சனநீர் அளிக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி முடிந்தவுடன் அவர் கோடைத் திருநாளுக்கு புறப்பட்டுச் செல்கிறார். அங்கிருந்து புறப்பட்டு வெளிக்கோடை நாலுகால் மண்டபத்தைச் சென்று சேருகிறார். சிறிதுநேரம் அங்கு ஓய்வு எடுத்துக்கொண்டு இரவு மூலஸ்தானத்திற்கு திரும்புகிறார்.

## 2. நம்பெருமாள் சித்ரா பௌர்ணமி கஜேந்திர மோட்சம்

சித்திரைமாதம் பௌர்ணமியன்று இவ்விழா நடைபெறுகிறது. ஒருநாள் மட்டுமே இவ்விழா கொண்டாடப் படுகிறது. காலையில் பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்படு கிறார். கோயில் வெளியே வீதிகள் வழியாகச் செல்கிறார். வழியில் பல சத்திரங்களில் உள்ளவர்களும் உபயதாரர்களும் மரியாதைகள் செலுத்துகின்றனர். அவ்விடங்களில் சிறிது நின்றுகொண்டு உபயங்கள் கண்டருளி இறுதியாகக் காவிரிக் கரையிலுள்ள அம்மா மண்டபத்தைச் சென்று சேருகிறார். அங்கு அவர் திருமஞ்சனம் அருந்துகிறார். திருமஞ்சனம் பொதுவாகக் காவிரியிலிருந்து தினந்தோறும் கோயிலுக்கு எடுத்து வரப்படும். அன்றைய வழிபாட்டிற்கு இது பயன்படுத்தப்படும். திருமஞ்சனம் இறைவன் கண்டருளிய பின்பு அந்நீர் பிறருக்கும் வழங்கப்படும். பின்பு மாலை அம்மா மண்டபத்திலிருந்து புறப்பட்டு கஜேந்திர மோட்சம் புறப்பாட்டுக்குத் தயாராகிறார். கஜேந்திரனாகிய யானைக்கு மோட்சம் வழங்கிய பின்பு திருவூர் என்ற இடத்திலுள்ள ஆஸ்தான மண்டபத்தைச் சென்று சேருகிறார். இரவு அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தைச் சேருகிறார். கூடவே அரையர்களும் இசைமாரிப் பொழிகின்றனர். மூலஸ்தானத்திற்குச் செல்லும்போது அரையர்கள் இசை பாடுகின்றனர். பொதுவாக அரையர்கள் நாலாயிரதிவ்யப் பிரபந்தப் பாடல்கள் சிலவற்றை பாடுவது வழக்கம்.

## 3. சித்திரைத் தேர்த் திருவிழா - (விருப்பன் திருநாள்)

சித்திரை மாதத்தில் சித்திரைத் தேர்த் திருவிழா பதினொரு நாட்கள் நடைபெறுகின்றன. இது இக்கோயில் திருவிழாக்களில் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். ஆண்டின் தொடக்கத்தில் முதலாவதாக நடைபெறும் பெரிய

திருவிழாவாகும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமான வாகனத்தில் பெருமான் காட்சியளிக்கிறார். விருப்பண்ண உடையாரால் நடத்தி வைக்கப்பட்ட உற்சவம் விருப்பன் திருநாள் என்றழைக்கப்படுகிறது.

**முதல் நாள் :** நம்பெருமாள் கோயில் மூலஸ்தானத்திலிருந்து காலை புறப்படுகிறார். புறப்பட்டு கொடியேற்ற மண்டபத்திற்கு (துவஜாரோஹண மண்டபம்) வந்து சேருகிறார். அது கோயிலுள்ளேயே காணப்படுகிறது. மீன லக்னத்தில் ராசிகள் காணப்படும்போது கொடியேற்றம் நடைபெறுகிறது. பின்பு அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறைக்குச் செல்கிறார். பின்பு மாலையில்தான் நிகழ்ச்சிகள் தொடங்கு கின்றன. மாலையில் முதலில் 'பேரிதாடனம்' அல்லது கிரகங் களுக்கும் சுற்றுப்புற தேவதைகளுக்கும் செய்திகள் சொல்லப்படுகின்றன. அதற்கான பறை அடிக்கப்படுகிறது. இது முடிந்தவுடன் உற்சவர் உபய நாச்சியார்களான ஸ்ரீதேவி பூதேவியுடன் புறப்படுகிறார். சித்திரை வீதிகளை வலம் வந்து மூலஸ்தானத்தையொட்டி அமைந்துள்ள சந்தன மண்டபத்தை அடைகிறார். பின்பு சந்தன மண்டபத்திலிருந்து யாகசாலைக்கு கொண்டு வரப்படுகிறார். யாகசாலையில் திருமஞ்சனம் கண்டருளி அங்கிருந்து புறப்பட்டு கண்ணாடி அறையை மீண்டும் சேருகிறார். கண்ணாடி அறையில் இருக்கும்போது பொதுமக்களுக்குச் சேவை செய்யப்படுகிறது.

**இரண்டாவது நாளில்** நம் பெருமாள் காலை கண்ணாடி அறையிலிருந்து பல்லக்கில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து வழிநடை உபயங்கள் கண்டருளி கொடியாலம் சேஷாத்திரி அய்யங்கார் ஆஸ்தான மண்டபம் சேருகிறார். பின்பு மாலை ஆஸ்தான மண்டபத்திலிருந்து கற்பக விருஷத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம் வந்து கோயிலின் வாகன மண்டபத்தைச் சேருகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறையை மீண்டும் சேருகிறார்.

**மூன்றாம் நாளில்** காலை நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு மீண்டும் வாகன மண்டபத்தைச் சேருகிறார். அங்கிருந்து சிம்ம வாகனத்தில் புறப்படுகிறார்.

சித்திரை வீதிகள் வலம்வந்து வாகன மண்டபத்தை மீண்டும் சேருகிறார். பின்பு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு ஆழ்வான் திருச்சுற்று வழியாக சௌகார் ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலையில் ஆஸ்தான மண்டபத்திலிருந்து யாளி வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து மீண்டும் கோயிலுள்ளே வாகன மண்டபத்தை அடைகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறைக்கு இறுதியாக வந்து சேருகிறார்.

**நான்காம் நாளில்** காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு முதலில் கோயிலுள்ளே வாகன மண்டபத்தை அடைகிறார். வாகன மண்டபத்திலிருந்து இரட்டை பிரபையில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து வாகன மண்டபம் மீண்டும் வருகிறார். பின்பு வாகன மண்டபத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி திருச்சி ஆயிரவைஸ்யாள் ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலை ஆஸ்தான மண்டபத்திலிருந்து கருட வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து மீண்டும் வாகன மண்டபம் சேருகிறார். தொடர்ந்து வாகன மண்டபத்திலிருந்து இரவு புறப்பட்டு கண்ணாடிஅறை சேருகிறார்.

பொதுவாக ஒவ்வொரு தடவையும் புறப்பாடு நிகழும் போது இசை வாத்தியங்கள் மேளதாளங்களுடன் புறப்படுகிறார். யானை முதலில் வழிநடத்திச் செல்லும். வாகனத்தைத் தொடர்ந்து அந்தணர்கள் வேதங்கள் ஓதி வருவர். உபயதாரர் களுக்கு மரியாதைகள் ஆங்காங்கே அளிக்கப்படுகின்றன. உற்சவர் நிற்கும் இடங்களின் மேல் மலர் பந்தல்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும். வீதிகளில் கோலங்கள் இடப் பட்டிருக்கும்; மலர் தூவப்பட்டிருக்கும்.

**ஐந்தாம் நாளில்** காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு வாகன மண்டபத்தை வழக்கம்போல் சென்று அடைகிறார். வாகன மண்டபத்திலிருந்து சேஷ வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம் வந்து மீண்டும் வாகன மண்டபம் சேருகிறார். தொடர்ந்து வாகன மண்டபத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு வீதிகள் வழியாக

வலம் வந்து வழிநடை உபயங்கள் கண்டருளி பட்டுநூல்காரர் ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலை ஆஸ்தான மண்டபத் திலிருந்து ஹனுமந்த வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து வாகன மண்டபத்தை இரவு வந்து சேருகிறார். மீண்டும் வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறைக்குச் செல்கிறார்.

**ஆறாம் திருநாளில்** காலை நம்பெருமாள் கண்ணாடி அறை யிலிருந்து புறப்பட்டு முதலில் வாகன மண்டபம் சேருகிறார். வாகன மண்டபத்திலிருந்து தங்கத்தால் செய்யப்பட்ட ஹம்ச வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து வாகன மண்டபம் மீண்டும் சேருகிறார். தொடர்ந்து வாகன மண்டபத் திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி நாகப்பிள்ளை ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலையில் ஆஸ்தான மண்டபத்திலிருந்து தோளுக்கினியாளில் புறப்பட்டு கோயிலுள்ளே அமையும் யானை வாகன மண்டபம் சேருகிறார். யானை மண்டபத்திலிருந்து யானை வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து மீண்டும் வாகன மண்டபம் சேருகிறார். தொடர்ந்து உள் ஆண்டாள் சன்னதியில் மாலை மாற்றிக்கொண்டு கண்ணாடி அறை சேருகிறார்.

**ஏழாம் நாளில்** காலை கண்ணாடி அறையில் வீற்றிருக்கும் பெருமாளை மக்கள் சேவிக்க அனுமதிக்கப்படுகிறது. பின்பு மாலை நம்பெருமாள் உபய நாச்சியாருடன் திருச்சிவிகையில் புறப்பட்டு நெல்லளவு கண்டருளி சித்திரை வீதிகள் வலம்வந்து ஆழ்வான் திருச்சுற்று வழியாக தாயார் சன்னதி சேருகிறார். (நெல்லளவு கண்டருளுதல் என்பது தினந்தோறும் பெருமாள் கோயிலுக்குத் தேவையான நிவேதனங்கள் செய்வதற்காக எடுக்கப்படும் நெல்லின் அளவை பார்வையிட்ட பின்பே நைவேத்தியங்கள் படைப்பதற்கு அந்நெல் பயன்படுத்தப்படும்). அங்கு திருமஞ்சனம் கண்டருளி அங்கிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார். கண்ணாடி அறையில் பொதுமக்கள் சேவிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

**எட்டாம் திருநாளில்** கண்ணாடி அறையிலிருந்து நம்பெருமாள் காலை வெள்ளியால் செய்யப்பட்ட குதிரை வாகனத்தில்

புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து ரெங்கவிலாச மண்டபம் சேருகிறார். மாலை ரெங்கவிலாச மண்டபத்திலிருந்து தங்கக் குதிரை வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து வையாளி கண்டருளி இரவு கண்ணாடி அறை சேருகிறார். வையாளி என்பது குதிரை வாகனத்தில் பெருமாள் வரும்போது அக்குதிரை அங்கும் இங்குமாக ஓட்டம் ஓடும் நிகழ்ச்சியாகும். எப்போதெல்லாம் குதிரை வாகனத்தில் பெருமாள் வருகிறாரோ அப்போதெல்லா— வையாளி நிகழ்ச்சி நடைபெறும்.

**ஒன்பதாம் நாளில்** திருத்தேர் புறப்படுகிறது. நம்பெருமாள் அதிகாலை கண்ணாடி அறையிலிருந்து திருத்தேருக்குப் புறப்பட்டு சித்திரைத் தேர் மண்டபம் சேருகிறார். மீன லக்னப்படி திருத்தேரில் அதிகாலை எழுந்தருளுகிறார். காலையில் பொதுமக்கள் திருத்தேர் வடம் பிடிக்கின்றனர். தேர் சித்திரை வீதிகள் வலம்வந்து நிலை சேருகிறது. மாலை தேரிலிருந்து பெருமாள் புறப்பட்டு கோயிலுள்ள ரேவதி மண்டபம் (அர்ச்சுன மண்டபம் முன்பு) சேருகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளி இரவில் கண்ணாடி அறை சேருகிறார். சில வேளை மாலை நேரத்தில் திருவீதி எழுந்தருளுகிறார். அப்போது இராமானுச நூற்றந்தாதியை செவிசாய்த்த வண்ணமே எம்பெருமானார் பிரசித்திப்பெற்ற உடையவர் சன்னதியை அடைந்து அங்கே இளநீர் அமுது செய்துகொண்டு அவரை அனுக்ரகம் செய்தபின் உள்ளே எழுந்தருளுகிறார்.

**பத்தாம் திருநாளில்** காலை கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு கர்ப்பகிரகத்தின் அருகாமையிலுள்ள சந்தன மண்டபம் சேருகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளி மாலை சந்தன மண்டபத்திலிருந்து புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து மூலஸ்தானம் மீண்டும் சேருகிறார்.

**பதினொன்றாம் நாளில்** மாலை மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கருடமண்டபம் அடைகிறார். அங்கிருந்து இரவு புறப்பட்டு முதலில் வாகன மண்டபம் சேருகிறார். வாகன மண்டபத்திலிருந்து ஆளும் பல்லக்கில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து வாகன மண்டபம் சேருகிறார். தொடர்ந்து வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சேருகிறார்.

### 4. ஸ்ரீநம்பெருமாள் வசந்த உற்சவம்

*முதல் நாளில்* மாலை நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வசந்த மண்டபம் சேருகிறார். இரவில் அவருக்கு அலங்காரம் அமுது படைத்து பின்பு சூர்ணாபிஷேகம் கண்டருளுகிறார். இரவு வசந்த மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை சேருகிறார்.

**இரண்டாம் திருநாள்முதல் ஆறாம் திருநாள்வரை மற்றும் எட்டாம் திருநாள்**

நம்பெருமாள் மாலை மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வசந்த மண்டபம் சேருகிறார். அங்கு அவரை அலங்காரம் பண்ணிய பின்பு அமுது செய்விக்கின்றனர். தொடர்ந்து சூர்ணாபிஷேகம் கண்டருளி இரவு வசந்த மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் அடைகிறார்.

**ஏழாம் திருநாள்**

நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் மாலை மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு நெல்லளவு கண்டருளி வசந்த மண்டபம் சேருகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் செய்விக்கப்பட்டு அமுது படைக்கப்படுகிறது. தொடர்ந்து இரவு சூர்ணாபிஷேகம் கண்டருளுகிறார். இரவு மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை மீண்டும் அடைகிறார்.

**ஒன்பதாம் நாளில்**

மாலை நம்பெருமாள் தங்கக் குதிரை வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் தீர்த்தவாரி கண்டருளுகிறார். பின்பு இரவு வசந்த மண்டபம் சேருகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளி பின்பு அங்கிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை அடைகிறார். தீர்த்தவாரி சந்திர புஷ்கரணியில் நடைபெறும்போது வழக்கமாக பொது மக்களும் அந்நீரில் குளித்து எழுந்து புண்ணியம் தேடுகின்றனர்.

### 5. நம்பெருமாள் ஜயேஷ்டாபிஷேகம்

இவ்விழா ஒருநாள் மட்டுமே நடைபெறுகிறது. இவ்விழாவில் காலையில் கருட மண்டபத்திலிருந்து தங்கக்குடம்

எடுத்து அதைக்கொண்டு திருக்காவேரியிலிருந்து திருமஞ்சனத்தை யானையின்மீது ஏற்றி எடுத்து வருவார்கள். மக்கள் ஊர்வலமாக காவேரிக்குச் சென்று ஊர்வலமாக திரும்பி தங்கக்குடத்தில் திருமஞ்சனத்தை கோயிலுக்கு எடுத்துவருவார்கள். திருமஞ்சனத்தை பெரிய சன்னதியில் சேர்ப்பர். பின்பு திருமஞ்சனத்தை தொண்டைமான் மேட்டுக்கு எடுத்துச்சென்று அங்கு பெருமாள் படிமங்களை சுத்தம் செய்து திரும்ப ஒப்புவிக்கப்படுகிறது. இரவு பெருமாளுக்கு மங்களஆரத்தி நடைபெறுகிறது.

வழக்கமாக திருமஞ்சனத்தை காவிரியிலிருந்து தங்கக் குடத்தில் யானையின் மீது வைத்து மேளதாளங்களுடன் எடுத்து வருவர். இந்நாளில் பெருமாள் கலசங்களிலோ பெருமாள் எழுந்தருளியிருக்கும் அறையிலோ மராமத்து வேலைகள் செய்வார்கள். பின்பு திருமஞ்சனம் கண்டருளப் பண்ணுவார்கள். திருமஞ்சனத்தின்போது பெருமாளது திருக்கவசத்தினை யெல்லாம் களைத்துவிட்டு ஏகாந்தத் திருமஞ்சனம் நடக்கும். இந்நாளில் திருமஞ்சனம் பெரிய திருமஞ்சனம் என்றழைப்பர். மற்ற கைங்கர்யக்காரர்கள் தலையில் வெள்ளிக்குடத்தில் காவேரி நீரும் உள் சுற்றுக்கோயில் கைங்கர்யக்காரர்கள் முதலானவர்கள் தாமிரக் குடத்தில் காவேரி நீரும் ஊர்வலமாக அம்மா மண்டபத்திலிருந்து புறப்பட்டு திருமஞ்சனத்திற்கு எடுத்துவருவது வழக்கம். இந்நாளில் பெரிய பெருமாளுக்கு தைலக்காப்பு சேர்ப்பது வழக்கம்.

### 6. திருப்பாவாடை

இவ்விழாவும் ஒருநாள் மட்டுமே நடைபெறுகிறது. காலையில் தளிகை எடுத்தல் நிகழ்ச்சியும் தொடர்ந்து தளிகை அமுதும் இறைவனுக்கு படைக்கப்படுகிறது. மங்களஆரத்தி தொடர்ந்து நடைபெறும். இறுதியில் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. தளிகை அமுதில் பிலாச்சுளை, தேங்காய், வாழைப்பழம், மாங்காய், நெல் இவைகளை ஏராளமாகக் கலந்திருப்பார்கள். உப்பு சேர்த்திருப்பார்கள். பெருமாள் அமுது செய்தபின் எல்லோருக்கும் விநியோகம் செய்வது வழக்கம்.

### 7. பதினெட்டாம் பெருக்கு

*இவ்விழா ஆடிமாதம் ஒருநாள் நடத்தப்படுகிறது. காலையில் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து தங்கப் பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி காவேரி கரையிலிருக்கும் அம்மா மண்டபம் ஆஸ்தானம் சேருகிறது. தொடர்ந்து திருமஞ்சனம் கண்டருளி பின்பு பெருமாளுக்கு மாலையில் அலங்காரம் அமுது செய்விக்கப்படுகிறது. பின்பு பெருமாள் காவேரித் தாயாருக்கு மாலை சமர்ப்பித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை அம்மா மண்டபத்திலிருந்து புறப்பட்டு வெளி ஆண்டாள் சன்னதியில் மாலை மாற்றிக்கொண்டு மீண்டும் மூலஸ்தானம் சேருகிறார்.*

*இந்நாளில் திருக்காவேரி பெருக்கெடுத்து நிறைந்து நீர்வளங்கொண்டு நுங்கு நுரையுடன் இருகரையும் முட்ட ஓடிவருகின்ற நாளாகும். இதனைக் கொண்டாடவே பெருமாள் காவேரிக்கு எழுந்தருளுவது வழக்கம். பெருமாள் இன்று தங்கப் பல்லக்கில் அம்மா மண்டபம் எனப்படும் தென்திருக் காவேரியின் படித்துறையிலுள்ள மண்டபத்திற்கு எழுந்தருளு வார். அங்கு திருவாராதனங்கள் முதலியன நடந்து மாலையில் காவேரித் தாயாருக்கு சீர் வகையறாக்களை யானையின் மேலேற்றி வந்து திருமாலை, தாலிப்பொட்டு முதலியவை காவேரித் தாயாருக்கு சமர்ப்பிப்பது வழக்கம். இவ்விழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. பல ஊர்களிலிருந்தும் மக்கள் காவேரித் தாயாருக்கு பெருமாள் 'மாலை சமர்ப்பித்தல்' நிகழ்ச்சியை காண வருகின்றனர். பெண்கள் தங்கள் தாலிக்கு புதுமஞ்சள் தாலிக்கயிற்றை இவ்விழாவன்று காவேரிக்கரையில் மாற்றிக் கொள்கின்றனர். அந்தணர்கள் சடங்குகள் செய்து பெண்கள் தங்கள் தாலிக் கயிற்றை மாற்றிக்கொள்ள உதவுகின்றனர். காவேரியில் புதுவெள்ளம் இன்று பெருக்கெடுத்து ஓடுவதுபோல் மக்களுக்கும் செல்வம் இன்றுமுதல் பெருகும் என்று கருதி மக்கள் தங்களைப் புதுப்பித்துக் கொண்டு புதிய தொழில்களில் ஈடுபடவும் இன்று நல்ல நாளாகக் கருதப்படுகிறது.*

### 8. கிருஷ்ண ஜெயந்தி

*கிருஷ்ண ஜெயந்தி மிக விமரிசையாக பல்நிறப் பொடிகள் கலந்த நீர் விளையாட்டுடன் வட இந்தியாவில் கொண்டாடப்*

படுகிறது. பல கோயில்களில் இது பெரிய உற்சவமாக பலநாட்கள் நடைபெறும். ஆனால் திருவரங்கத்தில் இது சிறிய இரண்டுநாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

முதல்நாள் காலையில் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு ஸ்ரீபண்டாரம் ஆஸ்தான மண்டபம் சேருகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளி பின்பு அவருக்கு அலங்காரம் அமுது செய்விக்கப்படுகிறது. மாலை மீண்டும் அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சேருகிறார்.

இரண்டாவதுநாள் உறியடி உற்சவமாகக் கொண்டாடப் படுகிறது. காலையில் ஸ்ரீகிருஷ்ணர் புறப்பாடு நடைபெறுகிறது. சித்திரை வீதிகளில் அவர் வலம் வரும்போது மக்களுக்கு எண்ணெய் அளிக்கப்படுகிறது. பல நிறங்களுடைய நீர் விளையாட்டு வடநாட்டில் நடைபெறுவதுபோல் அல்லாமல் இங்கு வீதிகளில் மக்களுக்கு எண்ணெய் வழங்கப்படுகிறது. இதை எண்ணெய் விளையாட்டு என்பர். இதனை கிருஷ்ணர் கண்டருளிய பின்பு அவர் தனது சன்னதியை மீண்டும் அடைகிறார். மாலை நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் திருச்சிவிகையில் புறப்பட்டு வருகிறார். அவருடன் ஸ்ரீகிருஷ்ணரும் புறப்பட்டு வருகிறார். யாதவ உறியடி ஆஸ்தான மண்டபம் வந்து சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம் வந்து தெற்கு வாசலில் ஒரு மண்டபத்தில் பானைகளில் வெண்ணெய், தயிர் நிரப்பி தொங்கவிட்டிருப்பர். அதனை கோல்கொண்டு அர்ச்சகர்கள் அடித்து வெண்ணெயை வெளியே தள்ளுவர். இந்நிகழ்ச்சி கிருஷ்ணரின் கோகுல விளையாட்டுக்களை நினைவு கூரும் வகையில் நடத்தப்படுகிறது. திரளான மக்கள் இதனை கண்டு களிக்கின்றனர். பானையை கோல்கொண்டு அடித்து நொறுக்குவதால் இது உறியடி என்று பொருள் பெறுகிறது. பின்பு இக்காட்சிகளை கண்டருளி பெருமாளும் கிருஷ்ணரும் மூலஸ்தானம் அடைகின்றனர். யாதவ குலத்தினருடைய யாதவ மண்டபத்தில் முதல் மரியாதை இன்று வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சிகளில் அக்குலத்தினர் இன்று முக்கியத்துவம் பெறுகின்றனர், முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

## 9. ஸ்ரீநம்பெருமாள் பவித்ரோத்ஸவம்

*வழிபாட்டில் தாங்கள் செய்தத் தவறுகளை திருத்திக் கொள்ளவும், பாவங்களை நீக்கவும் பவித்ரோத்சவம் நடைபெறுகிறது. கோயிலில் எவ்விழாவையும் காணவில்லை யென்றாலும் இவ்விழாவினைக் கண்டுகளித்தால் நற்பயன்கள் கிடைக்குமென நம்புகின்றனர். அத்திருவிழாக்களில் பெற முடியாமல் போனதை இத்திருவிழாவில் பெறமுடியும். இறைவனுக்கு நூலால் மாலை செய்து சாத்தப்படுகிறது. மக்களுக்கு முடிவில் அளிக்கப்படுகிறது.*

*பவித்ர உற்சவம் ஒன்பது நாள்கள் விமரிசையாக திருவரங்கத்தில் பெரிய உற்சவமாக நடத்தப்படுகிறது.*

### முதல்நாள்

*காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு யாகசாலைக்கு வருகிறார். அங்கு திருவாராதனம் நடைபெறுகிறது. மாலை இங்கு அவர் திருமஞ்சனம் கண்டருளுகிறார். அவருக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. பின்பு மூலஸ்தானத்தைச் சென்று சேருகிறார்.*

### இரண்டாம் நாளில்

*காலையில் யாகசாலையில் திருவாராதனம் ஆரம்ப மாகிறது. மூலஸ்தானத்திலும் திருவாராதனம் நடைபெறுகிறது. தொடர்ந்து பொதுஜன சேவை நடைபெறுகிறது. இரவு நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு திருப்பவித் ரோத்சவ மண்டபம் வந்து அடைகிறார். இங்கு அவருக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. பெருமாள் அலங்காரப் பிரியர் என்பதால் அவருக்கு அடிக்கடி பல உற்சவங்களில் அலங்காரம் செய்வது வழக்கமாக உள்ளது. அலங்கார வகை கண்டருளிய பின்பு உற்சவர் அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் அடைகிறார்.*

### மூன்றாம் நாள் முதல் ஆறாம் நாள் வரை மற்றும் எட்டாம் திருநாள்

*மாலையில் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார். திருப்பவித்ரோத்சவ மண்டபத்தை*

அடைகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. அலங்காரம் முடிந்தவுடன் அவர் மூலஸ்தானத்திற்கு மீண்டும் வந்து சேருகிறார்.

**ஏழாம் திருநாளில்**

இரவு நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு நெல்லளவு கண்டருளி தாயார் சன்னதியில் திருவந்திக்காப்பு கண்டருளி இரவு மூலஸ்தானம் அடைகிறார். திருவந்திக்காப்பு நடைபெறும் நிகழ்ச்சியை மக்கள் விரும்பி பார்வையிடுகின்றனர். நற்பயன் இதனால் விளைகிறது என்று கருதப்படுகிறது. ஒரு செப்புப் பாத்திரத்தில் எண்ணெய் ஒளியேற்றி பெருமாளுக்கு ஆராதனை செய்வதே திருவந்திக் காப்பாகும். பல விழா நிகழ்ச்சிகளில் திருவந்திக்காப்பு காட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

**ஒன்பதாம் திருநாளில்**

காலையில் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு சந்திரபுஷ்கரணி தீர்த்தத்தை அடைகிறார். அங்கு தீர்த்தவாரி கண்டருளுகிறார். அதாவது உற்சவர் அங்கு குளிப்பாட்டப்படுகிறார். பட்டர்கள் சில சடங்குகளையும் மந்திரங்களையும் ஓதி அவரை குளிப்பாட்டுகின்றனர். அவர் குளித்து முடிந்தவுடன் பக்தர்கள் அந்நீரில் குளிப்பதை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றனர். விமோசனம் இதனால் கிடைக்குமென்று நம்புகின்றனர். தீர்த்தவாரி நிகழ்ச்சி பல விழாக்களில் நடைபெறுவதுண்டு.

தீர்த்தவாரியும் திருமஞ்சனமும் திருவந்திக்காப்பும் அடிக்கடி பல திருவிழாக்களில் நடைபெறுவதுண்டு. திருமஞ்சனம் பெருமாளுக்கு செய்த பின்பு பொதுமக்களுக்கு அந்நீர் வழங்கப்படுகிறது. திருமஞ்சனத்தை பெருமாள் வழிநடைப் பயணம் செய்யும்போதும் ஆங்காங்கு ஓய்வெடுக்கும்போதும் அர்ச்சகர் அவருக்கு அடிக்கடி வழங்குவார். மந்திரங்கள் வாய்க்குள் சொல்லி நிரை பெருமாள்மீது தெளிப்பார். இதை அர்ச்சகர் அடிக்கடி பல விழாக்களில் செய்கிறார். ஆங்காங்கு பெருமாள் தங்கும் இடங்களில் அவருக்கு நீர் அருந்தவும்

கொடுப்பார். பின்பு அந்நீர் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. இது அனைத்து புறப்பாடுகளிலும் வாடிக்கையான நிகழ்ச்சியாகும். கூடவே அரையர்களும் சிங்கி அடித்து திவ்யபிரபந்தம் பாடுவதும் பல நிகழ்ச்சிகளிலும் விழாக்களிலும் காணலாம். இந்நாளில் தீர்த்தவாரி கண்டருளியபின்பு பெருமாள் திருப்பவித்ரோத்சவ மண்டபத்தை வந்து அடைகிறார். அங்கு திருமஞ்சனம் உடனே கண்டருளுகிறார். திருமஞ்சனம் வழங்கும் நிகழ்ச்சி சிலவேளை வெகுநேரம்வரை நடைபெறலாம். அது முடிந்த பின்பு மண்டபத்தில் பொதுஜன சேவை நடைபெறும். பொதுமக்கள் அங்கு அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு திருமஞ்சனம் வழங்கப்படும். பின்பு இரவு மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சென்று சேருகிறார். இந்நாளில் வாதுல தேசிகருக்கு திருப்பவித்ர பிரும்மரத மரியாதை அளிக்கப்படுகிறது. பவித்ரம் பிற உபய தாரர்களுக்கும் அந்தணர்களுக்கும் மக்களுக்கும் இன்று அளிக்கப்படுகிறது. இன்று பெரிய பெருமாளுக்கும் பவித்ரங்களை சாத்தியிருப்பார்கள். ஸ்ரீரங்கநாதனுடைய பவித்ர மாலைகளை அனைத்து மேளதாள வாத்யங்கள் முழங்க சந்திர புஷ்கரணியின் கரையிலே எழுந்தருளியிருக்கும் கோதண்டப் பெருமாளுக்கு சாத்துவதும் இன்று விசேடமான நிகழ்ச்சியாகும்.

## 10. நம்பெருமாள் விஜயதசமி புறப்பாடு

நவராத்திரி உற்சவம் அரங்கநாயகிக்கு தனியாக சிறப்பாக பத்துநாட்கள் நடைபெறுகிறது. அதில் விஜயதசமி அன்று காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து பல்லக்கில் புறப்படுகிறார். வழிநடை உபயங்கள் கண்டருளி அழகிய சிங்கர் கோயிலில் அமைந்துள்ள ஆஸ்தான மண்டபம் சேருகிறார். அன்று மாலை மேற்படி மண்டபத்திலிருந்து குதிரை வாகனத்தில் புறப்படுகிறார். வேட்டையாடுதல் என்ற நிகழ்ச்சி இங்கு நடைபெறுகிறது. அர்ச்சகர் ஒருவர் அம்பை எடுத்து அருகிலுள்ள வன்னி மரத்திலும் பல திசைகளிலும் வீசுகிறார். தீயசக்திகள் அழிந்து ஒழிந்ததை இது குறிக்கிறது. அம்பு போடும் நிகழ்ச்சியைக் காண பெருந்திரளான மக்கள் அழகிய சிங்கர் கோயிலில் கூடுகின்றனர். அம்புபோடும் நிகழ்ச்சி முடிந்தவுடன் சாத்தார வீதி வழியாக பெருமாள் வலம் வருகிறார். வலம் வந்து கோயிலில் சந்தனுமண்டபத்தை அடைகிறார். இரவில் நம்பெருமாள் உபய

நாச்சியார்களுடன் அமுதுபாறையில் திருமஞ்சனம் கண்டருளு கிறார். இவ்விழா ஒருநாள் மட்டுமே நடைபெறுகிறது.

### 11. துலாமாதம் விஷு புண்ய காலம்

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்படுகிறார். சந்தனு மண்டபத்தை அடைந்து திருமஞ்சனம் கண்டருளுகிறார். பிறகு சந்தனு மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை அடைகிறார்.

இம்மாதத்தில் சன்னதியிலிருந்து தங்கக்குடம் எடுக்கப் பட்டு திருக்காவேரியிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வரப்படுகிறது.

### 12. ஸ்ரீநம்பெருமாள் ஊஞ்சல் (டோலோத்சவம்)

ஊஞ்சல் உற்சவம் ஒன்பது நாட்கள் விமரிசையாக இக்கோயிலில் நடைபெறுகிறது. இக்காட்சியைக் காண்பவர்கள் பெரும்பேறு பெற்றதாகக் கருதுகிறார்கள். நற்பயன்கள் இதனால் கிடைக்குமென நம்பப்படுகிறது.

#### முதல்நாள்

மாலை நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் மூலஸ்தானத்திலிருந்து புறப்படுகிறார். புறப்பட்டு ஊஞ்சல் மண்டபத்தை அடைகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து ஊஞ்சல் ஆரம்பமா கிறது. அரையர்கள் ஊஞ்சல் நடந்துகொண்டிருக்கும்போது சிங்கியடித்து பிரபந்தத்தின் தாலாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டே இருக்கின்றனர். ஊஞ்சல் முடிந்ததும் இரவு ஊஞ்சல் மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை அடைகிறார்.

#### இரண்டாம் நாள் முதல் ஆறாம் திருநாள்வரை மற்றும் எட்டாம் திருநாள்

மாலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு ஊஞ்சல் மண்டபம் வந்தடைகிறார். அவருக்கு அலங்காரம் அமுது செய்து ஊஞ்சல் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அரையர்கள்

பிரபந்தத் தாலாட்டுப் பாடல்கள் சிங்கியடித்துப் பாடுகின்றனர். ஊஞ்சல் முடிந்ததும் இரவு அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு திரும்பவும் மூலஸ்தானத்தை அடைகிறார்.

### ஏழாம் திருநாளில்

மாலை நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் மூலஸ்தானத்திலிருந்து புறப்படுகிறார். திருக்கொட்டாரத்தில் நெல்லளவை பெருமாள் நேரிலிருந்து காண்பது விசேடமாகும். நெல்லளவு கண்டருளி தாயார் சன்னதியில் திருவந்திக்காப்பு கண்டருளுகிறார். பின்பு இரவு ஊஞ்சல் மண்டபம் சேருகிறார். அவருக்கு அலங்காரம் அமுது செய்து ஊஞ்சல் தொடங்கப் படுகிறது. அரையர்கள் பிரபந்தத் தாலாட்டுப் பாடல்கள் பாடுகின்றனர். ஊஞ்சல் முடிந்தவுடன் மேற்படி மண்டபத் திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சேருகிறார்.

### ஒன்பதாம் திருநாளில்

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்படு கிறார். சந்திர புஷ்கரணியில் தீர்த்தவாரி கண்டருளுகிறார். பின்பு ஊஞ்சல் மண்டபம் வந்தடைகிறார். திருமஞ்சனம் முதலில் நடைபெறுகிறது. அதன்பின்பு அலங்காரமும் அமுதும் செய்விக்கப்படுகிறது. அவை முடிந்தவுடன் ஊஞ்சல் ஆரம்ப மாகிறது. அரையர்கள் சிங்கியடித்து பிரபந்தத் தாலாட்டுப் பாடல்கள் பாடுகின்றனர். ஊஞ்சல் முடிந்தவுடன் மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் வந்தடைகிறார்.

## 13. ஸ்ரீநம்பெருமாள் தீபாவளித் திருநாள்

தீபாவளித் திருநாள் காலை நம்பெருமாள் மூலஸ்தானத் திலிருந்து புறப்பட்டு சந்தனு மண்டபம் சேருகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளி பின்பு மாலை அவருக்கு 'ஜாலி அலங்காரம்' என்ற விசேட அலங்காரம் பண்ணி சந்தனு மண்டபத்திலிருந்து புறப்பாடு நடைபெறுகிறது. அன்றிரவு அங்கே எழுந்தருளியுள்ள ஆழ்வார்களுக்கும் ஆச்சாரியர் களுக்கும் அருளிப்பாடு சாதித்து உற்சவர் மூலஸ்தானத்திற்கு சேர்க்கப்படுகிறார். பொதுவாக, தீபாவளித் திருநாளில் பெருமாளுக்கு மஞ்சன மாட்டுதலும், கோயில் கைங்கர்யக்காரர்

களுக்கு எண்ணெய், சீயக்காய் வினியோகம் செய்வதும் முக்கிய அம்சமாக நடைபெறுகிறது. ஆச்சார்யர்களும், ஆழ்வார்களும் அன்று கிளி மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணியிருப்பார்கள். இவ்விழாவில் முழு ரூபாய்களை ஆயிரங்கொண்டு வந்து இரண்டு கைலிகளில் அவைகளைக் கட்டிப் பெருமாள் திருவடிகளில் மேளதாளங்கள் முழங்கச் சமர்ப்பிப்பதும் இன்று விசேடமாகும்.

## 14. ஸ்ரீநம்பெருமாள் கைசிக ஏகாதசி

கார்த்திகை மாதத்தில் ஒருநாள் காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்படுகிறார். புறப்பட்டு சந்தனு மண்டபம் வந்தடைகிறார். அங்கு திருமஞ்சனம் அவருக்கு அளிக்கப்படுகிறது. மாலை உற்சவருக்கு அமுதும் செய்விக்கப் படுகிறது. பின்பு அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை அடைகிறார்.

இரவு இரண்டாவது புறப்பாடும் நடைபெறும். நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு அர்ச்சுன மண்டபம் சேருகிறார். அவருக்கு 365 வஸ்திரம் / வளையம் முதலியன அளிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து கற்பூர ஆரத்தி அரையர் சேவையுடன் நடைபெறும். இறுதியில் பட்டர் சுவாமிகள் 'கைசிக புராணம்' வாசிப்பார். அது முடிந்தவுடன் அம்மண்டபத்திலிருந்து புறப்படுகிறார். தொடர்ந்து கற்பூர படியேற்ற சேவை நடைபெறுகிறது. படியேற்றத்தின்போது பச்சை கற்பூரங்களை பெருமாள் மீது தூவுவார்கள். பின்பு பெருமாள் மேற்புறமுள்ள யாளி படிக்கட்டிற்கு எழுந்தருளும் போது படியேற்றம் நடக்கும். இந்த படியேற்றம் காண்பதற்காக விஜயரங்க நாயக்கன் தம்முடைய குடும்பத்துடன் வந்து காண முடியாமல் போனமையால் அதை மறு ஆண்டிலாவது காண வேண்டும் என்று அங்கேயே தங்கிவிட்டார் என்று கூறப்படுகிறது. இறைவன் 'ஓய்வுக்குப்பின் விழித்தெழல்' என்பது கைசிக ஏகாதசி நாளாக இருக்க வாய்ப்புண்டு.

## 15. ஸ்ரீநம்பெருமாள் திருக்கார்த்திகை

திருக்கார்த்திகை அன்று காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு சந்தனு மண்டபத்திற்கு

முதலில் வருகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளுகிறார். அதைத் தொடர்ந்து அவருக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. அமுது படைக்கப்படுகிறது. இவை முடிந்த பின்பு மாலை அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை சேருகிறார். இதனைத் தொடர்ந்து ஸ்ரீ உத்தமநபி அய்யங்கார் ஸ்வாமிகள் இடைவிளக்கு எடுக்கிறார். அவருக்கு பிரம்மரத மரியாதையும் வழங்கப்படுகிறது.

இரண்டாம் புறப்பாடு இரவு மூலஸ்தானத்திலிருந்து தொடங்குகிறது. பெருமாள் புறப்பட்டு ரெங்கவிலாச மண்டபத்தினருகே வந்து சேருகிறார். அங்கு ஓலையால் அமைக்கப்பட்ட கூடாரத்தில் தீமூட்டல் நிகழ்ச்சி நடைபெறுவதைக் காண்கிறார். சொக்கப்பனை கண்டபின்பு பெருமாள் தாயார் சன்னதிக்குக் கொண்டுவரப்படுகிறார். அங்கு திருவந்திக்காப்பு கண்டருளி அதன்பின்பு சந்தனு மண்டபம் சேருகிறார். சந்தனு மண்டபத்தில் ஸ்ரீமுகப்பட்டயம் படிக்கப் படுகிறது. தொடர்ந்து பெருமாள் திருக்கைத் தல சேவை நடைபெறுகிறது. பின்பு சந்தனு மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் வந்தடைகிறார். ஸ்ரீவாதல தேசிகருக்கு பிரம்மரத மரியாதை அளிக்கப்படுகிறது. ஒளிவிளக்குகள் கோயிலை அலங்கரிக்கின்றன.

## 16. வைகுண்ட ஏகாதசி மகோத்சவம்

வைகுண்ட ஏகாதசி தொடக்கநாளுக்கு முந்தியநாள் இரவு கர்ப்பகிரகத்தில் திருநெடுந்தாண்டகம் வாசித்தல் ஆரம்ப மாகிறது. சந்தனு மண்டபத்தில் திருநெடுந்தாண்டக அபிநயமும் வியாக்கியானமும் அரையர்களால் செய்யப் படுகின்றன. இதனைத் தொடர்ந்து திருப்பணியார அமுது பெருமாளுக்குப் படைக்கப்படுகிறது. கோஷ்டிகள் உணவைக் கொண்டுவந்து அளிக்கின்றனர். திருவாராதனம் பெருமாளுக்கு செய்பிக்கப்படுகிறது. பெருமாளுக்கு சிறப்பு அலங்காரங்கள் திருக்கொட்டாரத்திலிருந்து செய்விக்கப்படுகிறது. தொடர்ந்து தீர்த்த கோஷ்டிகள் நீரை கொண்டு வருகின்றனர்.

வைகுண்ட ஏகாதசி முதல்நாளிலிருந்து பத்துநாள்வரை 'பகல்பத்து திருமொழித் திருநாள்' என்றழைக்கப்படுகிறது.

**முதல் திருநாளில்**

காலையில் தனுர் லக்னத்தில் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு பகல்பத்து அர்ச்சுன மண்டபத்தைச் சேருகிறார். தொடர்ந்து அரையர் சேவை பொது ஜன சேவையுடன் நடைபெறுகிறது. பெருமாளுக்கு தொடர்ந்து அலங்காரம் செய்து அமுது அளிக்கப்படுகிறது. உணவு கொண்டு வரும் திருப்பாவாடை கோஷ்டி உணவைக் கூடைகளில் கொண்டு வருகிறது. இவ்வுணவு வகைகள் வெளியே கோயிலில் விற்பனைக்கு அளிக்கப்படுகிறது. அடுத்து பெருமாளுக்கு வெள்ளிச் சம்பா அமுது படைக்கப்படுகிறது. பொதுஜன சேவையுடன் உபயதாரர்கள் மரியாதை தொடர்ந்து நடைபெறுகிறது. பின்பு பெருமாள் அர்ச்சுன மண்டபத்திலிருந்து ட்டு மூலஸ்தானம் சென்று சேருகிறார். வழக்கமாக ர்ச்சுன மண்டபத்தில் ஆழ்வார்களையும் பெருமாளுக்கு எதிரே வரிசையாக எழுந்தருளப் பண்ணியிருப்பார்கள். அரையர்கள் அபிநயத்துடன் பிரபந்தப் பாடல்கள் இசைப்பது வழக்கம்.

**இரண்... ...ம் மூன்றாம் நாள், ஐந்தாம்நாள், ஆறாம்நாள்**

இந்நாட்களில் நம்பெருமாள் காலையில் மூலஸ்தானத்திலிருந்து புறப்படுகிறார். புறப்பட்டு பகல் பத்து அர்ச்சுன ண்டபம் வந்தடைகிறார். தொடர்ந்து பொதுஜன வையுடன் அரையர் சேவை நடைபெறுகிறது. அரையர்கள் திருமொழியிலிருந்து பாடல்களைப் பாடி அபிநயத்துடன் நடித்துக் காட்டுவர். தொடர்ந்து பெருமாளுக்கு அலங்காரம் செய்விக்கப்பட்டு அமுது படைக்கப்படுகிறது. திருப்பாவாடை ாஷ்டி உணவு படைக்க, கூடைகளில் உணவை கொண்டு வருகிறார்கள். வெள்ளிச் சம்பா அமுது பெருமாளுக்கு அளிக்கப்படுகிறது. உபயதாரர்களுக்கு மரியாதை தொடர்ந்து நடைபெறுகிறது. பொதுஜனசேவையும் தொடர்ந்து நடைபெறுகிறது. பின்பு மாலை அர்ச்சுன மண்டபத்திலிருந்து புறப்பட்டு இரவு மூலஸ்தானம் வந்தடைகிறார்.

**பத்தாம் திருநாளில்**

மோகினி அலங்காரம் பெருமாளுக்கு செய்யப்படுகிறது. விஷ்ணு வசீகர சக்தியாகவும் அல்லது ஜீவசக்தியாகவும்

கருதப்படுகிறது. ஜீவசக்தி பிரம்மசக்தியுடன் இணைந்த பின்பே படைப்பு நிகழும். பெண்ணைப் போன்ற வசீகர சக்தியுடைய வராகப் பெருமாள் காணப்படுவதால் அதைக் காட்டும் விதத்தில் மோகினி அலங்காரம் செய்விக்கப்படுகிறது.

காலையில் பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து நாச்சியார் திருக்கோலத்துடன் புறப்படுகிறார். புறப்பட்டு பகல்பத்து அர்ச்சுன மண்டபம் வந்து சேருகிறார். பொதுஜன சேவையுடன் அரையர் சேவை நடைபெறுகிறது. தொடர்ந்து அலங்காரம் அமுது செய்விக்கப்படுகிறது. அவை முடிந்தவுடன் அரையர் இரண்டாவது சேவை நடைபெறுகிறது. இராவண வதம் நிகழ்ச்சிகள் அரையர்களால் நடித்துக் காட்டப்படுகின்றன. பொதுஜன சேவையுடன் தொடர்ந்து நடைபெறுகிறது. வெள்ளிச்சம்பா அமுது பெருமாளுக்கு அளிக்கப்படுகிறது. உபயதாரர்களுக்கு மரியாதை அளிக்கப்படுகிறது. தொடர்ந்து மாலையில் பொதுஜன சேவையும் நடைபெறுகிறது. மாலையில் பகல்பத்து அர்ச்சுன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கோயில் ஆரியபடாள் வாசல் வந்து சேருகிறார் பெருமாள். வாசலிலிருந்து திருக்கொட்டார பிரட்சணம் வழியாக வலம் வந்து கருடமண்டபம் வந்து சேருகிறார். ஆழ்வாராதிகளுக்கு இப்போது மரியாதை செலுத்தப்படுகிறது. ஆழ்வாராதிகளுக்கு கைலி வஸ்திரங்கள் அளிக்கப்படுகின்றன. பின்பு பெருமாள் கருட மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை வந்தடைகிறார்.

### முதல்நாள் இராப்பத்து திருவாய்மொழித் திருநாள்

முதல்நாள் காலை பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து தனுர் லக்னத்தில் புறப்படுகிறார். தனுர் லக்னத்தில் பரமபதவாசல் திறக்கப்படுகிறது. அதுவழியாக அவர் திருக்கொட்டகை பிரவேசம் செய்கிறார். சாதரா மரியாதை பெருமாளுக்கு அளிக்கப்படுகிறது. பின்பு அவர் துறைப்பிரகார மண்டபம் வந்தடைகிறார். துறைப்பிரகார மண்டப நதிகளில் குளித்துவிட்டு பின்பு பரமபதவாசல் வழியாக அவர் செல்கிறார். அவருடன் ஏராளமான பக்தர்களும் பிரவேசிக்கின்றனர். வைகுண்டத்தை அடைந்ததாக அனைவரும் பாவித்துக் கொள்கின்றனர். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மக்கள்

இவ்விழாவிற்கு வந்து பரமபதவாசல் வழியே சென்று விமோசனம் அடைகின்றனர்.

பின்பு திருமாமணி மண்டபம் ஆஸ்தான மண்டபம் வந்தடைகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் அமுது செய்விக்கப்படுகிறது. இரவு பொதுஜன சேவையுடன் அரையர் சேவையும் தொடர்ந்து நடைபெறுகிறது. திருப்பாவாடை கோஷ்டி வெள்ளிச் சம்பா அமுது செய்ய உணவைக் கொண்டு வருகிறார்கள். தொடர்ந்து பொதுஜன சேவையுடன் உபயதாரர்கள் மரியாதையும் நடைபெறுகிறது. பின்பு இரவு திருமாமணி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியங் களுடன் மூலஸ்தானம் சென்று சேருகிறார். அங்கு பெருமாளுக்கு ரத்னஅங்கியும் அணிவிக்கப்படுகிறது. பெரிய பெருமாளுக்கு முத்து அங்கியும் அணிவிக்கப்படுகிறது.

## இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறாம் திருநாள்கள்

பகல் பன்னிரண்டு மணியளவில் பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்படுகிறார். திருமாமணி மண்டபம் ஆஸ்தான மண்டபம் வந்து சேருகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் செய்யப்பட்டு அமுது படைக்கப்படுகிறது. பொதுஜன சேவையுடன் அரையர் சேவையும் நடைபெறுகிறது. வெள்ளிச் சம்பா அமுது பெருமாளுக்குப் படைக்கப்படுகிறது. உபயதாரர் மரியாதை நடைபெறுகிறது. பின்பு திருமாமணி மண்டபத் திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியங்களுடன் மூலஸ்தானம் வந்து சேருகிறார்.

## ஏழாம் திருநாள் (சங்கராந்தி)

காலையில் பெருமாள் உபயநாச்சியார்களுடன் புறப்பட்டு சங்கராந்தி மண்டபம் வந்தடைகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் செய்யப்பட்டு அமுது அளிக்கப்படுகிறது. திருப்பாவை சாற்றுமுறை நடைபெறுகிறது. தீர்த்தகோஷ்டி நீரை கொண்டு வருகிறார்கள். பின்பு சங்கராந்தி மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை வந்தடைகிறார்.

மாலையில் திருக்கைத்தல சேவை நடைபெறுகிறது. நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு திருமாமணி

மண்டபம் ஆஸ்தான மண்டபம் வந்து சேருகிறார். நம்மாழ்வார் மோகனாலங்காரத்திற்காக திருக்கைத்தல சேவை நடைபெறுகிறது. தொடர்ந்து அலங்காரம் செய்யப்பட்டு அமுது அளிக்கப்படுகிறது. பொதுஜன சேவையுடன் அரையர் சேவை நடைபெறுகிறது. திருப்பாவாடை கோஷ்டி வெள்ளிச் சம்பா அமுது செய்ய உணவைக் கொண்டு வருகிறது. பொதுஜன சேவையுடன் உபயதாரர் மரியாதையும் நடைபெறுகிறது. பின்பு திருமாமணி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியங்களுடன் மூலஸ்தானத்தை வந்தடைகிறார். அரையர் சேவையில் இரணியவதம் நடைபெறுகிறது.

இன்று திருக்கைத்தல சேவையில் பெருமாளை நம்மாழ்வாருக்கு எதிரே அர்ச்சகர்கள் தங்கள் கைத்தலத்தில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டுவர பெருமாள் சேவை சாதிப்பார். நம்மாழ்வாருக்கு நாச்சியார் திருக்கோலம் சாத்தப்படும்.

### எட்டாம் திருநாள் (கனு)

காலையில் பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கனு மண்டபம் சேருகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. தொடர்ந்து அமுது படைக்கப்படுகிறது. பின்பு கனு மண்டபத்திலிருந்து குதிரை வாகனத்தில் புறப்பட்டு பரிவேட்டை கண்டருளுகிறார். வேட்டையாடுதல் நிகழ்ச்சிகளில் ராயகோபுரம் வரை பெருமாள் வேட்டைக்குச் செல்வார். பின்பு அங்கிருந்து கண்ணாடி அறை வந்து சேருகிறார்.

மாலையில் நம்பெருமாள் சந்தனு மண்டபத்திலிருந்து குதிரை வாகனத்தில் புறப்பட்டு அருகிலுள்ள மண்டபத்திற்கு வருகிறார். இம்மண்டபம் நான்காவது திருச்சுற்றின் கிழக்கில் உள்ளது. இவ்விடம் விசாலமானதாகும். இங்கு, பெருமாள் வையாளி (குதிரையோட்டம்) வகையறாக்கள் கண்டருளுகிறார். அங்கு திருமங்கை மன்னர் வேடுபறி நிகழ்ச்சி நடைபெறுகிறது. திருமங்கை மன்னன் திருடனாக வந்து பெருமாளின் உடைமை களைத் திருட வருவதுபோல் நாடகம் நடத்தப்படுகிறது. இதற்காக அன்று கள்ளர் ஜாதி மக்கள் பல கிராமங்களிலிருந்து ஆட்டம் பாட்டத்துடன் தப்பாட்டம் அடித்து கோயிலுக்குள்

பிரவேசிக்கிறார்கள். பெருமாள் திருடனாகிய திருமங்கை மன்னனுக்கு இறுதியில் அபயம் அளித்து அருளுகிறார். இந்நிகழ்ச்சியைக் காண பெருந்திரளான மக்கள் வருகின்றனர். குதிரை வாகனத்தில் பெருமாளின் வையாளி ஓட்டமும் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் பெருமாள் இரவு எட்டுமணிக்கு திருமாமணி ஆஸ்தான மண்டபம் வந்தடைகிறார். அங்கு அவருக்கு அலங்காரம் செய்து பின்பு அமுது படைக்கப் படுகிறது. தொடர்ந்து பொதுஜன சேவையுடன் அரையர் சேவையும் நடைபெறுகிறது. திருப்பாவாடை கோஷ்டி வெள்ளிச் சம்பா அமுதுசெய்து உணவைக் கொண்டு வருகிறது. பொதுஜன சேவையுடன் உபயதாரர் மரியாதையும் நடைபெறுகிறது. பின்பு திருமாமணி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியங்களுடன் விடியற்காலை மூலஸ்தானம் வந்தடைகிறார்.

**பத்தாம் திருநாள்**

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு சந்திர புஷ்கரணியில் தீர்த்தவாரி கண்டருளுகிறார். பின்பு திருமாமணி மண்டபம் வந்தடைகிறார். ஸ்ரீபட்டர் சுவாமிகளுக்கு இங்கு பிரம்மரத மரியாதை வழங்கப்படுகிறது. மாலை பொதுஜன சேவையுடன் திருமஞ்சனம் நடத்தப்படுகிறது. பின்பு பெருமாளுக்கு அலங்காரம் செய்யப்படுகிறது. அதைத் தொடர்ந்து அவருக்கு அமுது படைக்கப்படுகிறது.

அன்று இரவு அரையர் சேவை நடைபெறுகிறது. திருப்பாவாடை கோஷ்டி வெள்ளிச் சம்பா உணவு கொண்டு வந்து பெருமாளுக்கு அமுது படைக்கிறது. பொதுஜன சேவை தொடர்ந்து நடைபெறுகிறது. அடுத்து முக்கியமான நிகழ்ச்சியாக நம்மாழ்வாருக்கு மோட்சம் அளிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அன்று பெருமாள் திருவடியில் நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணி அவ்வாழ்வாரின் மேல் துளசி தனத்தைச் சமர்ப்பிப்பார்கள். பெருமாள் எல்லா ஆழ்வார்களுக்கும் கைலி வஸ்திரம் அனுக்ரஹித்து உள்ளே எழுந்தருளுவார். இந்நிகழ்ச்சி தொடர்ந்து அடுத்தநாள் காலைவரை நடைபெறுகிறது. திருத்துழால்

விநியோகம் இன்று செய்யப்படுகிறது. தொடர்ந்து தீர்த்தகோஷ்டி தீர்த்தம் கொண்டுவந்து பெருமாளுக்கு அளிக்கிறது. உபயதாரர்களுக்கு மரியாதையும் பொதுஜன சேவையும் தொடர்ந்து நடைபெறுகிறது. பின்பு திருமாமணி மண்டபத்திலிருந்து புறப்பட்டு காலை மூலஸ்தானம் வந்து சேருகிறார். ஸ்ரீஅரையர் சுவாமிகளின் பிரம்மரத மரியாதை நடைபெறுகிறது.

**பதினொன்றாம் நாள்**

இயற்பா சாற்றுமுறை நடைபெறுகிறது. சந்தனு மண்டபத்தில் இரவு இயற்பா பிரபந்தம் படிக்கப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசி திருநாளில் அரையர் ஒவ்வொருநாளும் படிக்க வேண்டிய பாசுரங்கள் விவரம் பின்வருமாறு[3]

திருநெடுந்தாண்டகம் - 'மின்னுவாய்' பாசுரம் அபிநயம், வியாக்யானம், தம்பிரான்படி வியாக்யானம்

**திருமொழித் திருநாள் - பகல்பத்து**

முதல் நாள் - 'திருப்பல்லாண்டு' பாசுரம் அபிநயம், வியாக்யானம் - பெரியாழ்வார் திருமொழி - 190 பாசுரங்கள்.

இரண்டாம்நாள் - 1) ஆற்றிலிருந்து, 2) தன்னோராயிரம் - பாசுரங்கள் அபிநயம், வியாக்யானம் - பெரியாழ்வார் திருமொழி 240 பாசுரங்கள்.

மூன்றாம் திருநாள் : 'சென்னியோங்கு' பாசுரம் அபிநயம் வியாக்யானம் - 7ஆம் பாசுரம் 'திருப்பொலிந்த சேவடி' வரை அபிநயம் - அரையர் ஸ்ரீசடகோபம் சாதித்தல் - திருப்பாவை - மார்கழித் திங்கள் பாசுரம், அபிநயம் வியாக்யானம் - நாச்சியார் திருமொழி - 120 பாசுரங்கள்.

நான்காம் திருநாள் 1) கண்ணென்றும் கருந்தெய்வம் 2) இருளிய - பாசுரம் அபிநயம். வியாக்யானம் - பெருமாள் திருமொழி திருச்சந்த விருத்தம், பாசுரங்கள் 2 ஆம் அரையர் சேவை கம்சவதம்.

| | |
|---|---|
| ஐந்தாம் நாள் | திருமாலை முதல் பாசுரம். அபிநயம். வியாக்யானம் - 6 ஆம் பாசுரம். அரங்கநாதனுக்கு ஆட்செய்தல் வரை அபிநயம் - அரையர் திருவாராதனம் - திருமாலை, திருப்பள்ளி எழுச்சி பாசுரங்கள் - 'அமலனாதிபிரான்' பாசுரம் அபிநயம், வியாக்யானம், பாசுரங்கள். |
| ஆறாம் திருநாள் | 'கண்ணுள் சிறுத்தாம்பு' - பாசுரம், பெரிய திருமொழி - 'வாடினேன் வாழ' - பாசுரம் - அபிநயம், வியாக்யானம் - பெரியதிருமொழி 250 பாசுரங்கள். |
| ஏழாம் திருநாள் | 'தூவிரிய' - பாசுரம் அபிநயம், வியாக்யானம் - பெரிய திருமொழி 210 பாசுரங்கள் - 2ஆம் அரையர் சேவை - 'வாமனாவதாரம்' |
| எட்டாம் திருநாள் | 'பண்டை நாள் மறை' பாசுரம், அபிநயம், வியாக்யானம் - பெரிய திருமொழி 200 பாசுரங்கள் - 2 ஆம் அரையர் சேவை - முத்துக்குறி - 'மின்னுருவாய்' பாசுரம் அபிநயம் வியாக்யானம் முத்துக்குறி வியாக்யானம், அபிநயம் - அரையர் தீர்த்தம் - ஸ்ரீசடகோபம் சாதித்தல். |

### நாச்சியார் திருக்கோலம்

| | |
|---|---|
| பத்தாம் திருநாள் | 'இரக்கமின்றி' - பாசுரம் அபிநயம், வியாக்யானம் -பெரிய திருமொழி - 170 பாசுரங்கள் - திருக்குறுந்தாண்டகம்- 20, திருநெடுந்தாண்டகம் - 30 பாசுரங்கள் - 2ஆம் அரையர்சேவை 'இராவண வதம்' - திருமொழி சாற்று மறை - அரையர்தீர்த்தம் - ஸ்ரீசடகோபம் சாதித்தல். |

## திருவாய்மொழித் திருநாள் - இராப்பத்து

| | |
|---|---|
| முதல் திருநாள் | 'வைகுண்ட ஏகாதசி' 'உயர்வற' பாசுரம் அபிநயம் வியாக்யானம் - முதல் பத்து 100 பாசுரங்கள். |

| | |
|---|---|
| இரண்டாம் திருநாள் | 'கிளரொளியினை' - பாசுரம் அபிநயம் வியாக்யானம் - 2-ஆம் பத்து 100 பாசுரங்கள் |
| மூன்றாம் திருநாள் | 'ஒளிவில் காலம்' - பாசுரம் அபிநயம் வியாக்யானம் - 3-ஆம் பத்து 100 பாசுரங்கள் |
| நான்காம் திருநாள் | 'ஒன்றுந் தேவும்' - பாசுரம் அபிநயம் வியாக்யானம் - 4-ஆம் பத்து 100 பாசுரங்கள் |
| ஐந்தாம் திருநாள் | 'ஆராவமுதே' - பாசுரம் அபிநயம் வியாக்யானம் - 5-ஆம் பத்து 100 பாசுரங்கள் |
| ஆறாம் திருநாள் | 'உலகம் உண்டு பெருவாயா - பாசுரம் அபிநயம் வியாக்யானம் - 6 ஆம் பத்து 100 பாசுரங்கள் |
| ஏழாம் திருநாள் | 'நம்பெருமாள் திருக்கைத்தல சேவை', 'கங்குலும் பகலும்' - பாசுரம் அபிநயம், வியாக்யானம் - 7-ஆம் பத்து 100 பாசுரங்கள். |
| எட்டாம் திருநாள் | 'திருமங்கைமன்னர் வேடுபறி' - 'நெடுமாற்கடினம்' பாசுரம் அபிநயம், வியாக்யானம் - 8 -ஆம் பத்து 100 பாசுரங்கள் |
| ஒன்பதாம் திருநாள் | 'மாலை நண்ணி' - பாசுரம் அபிநயம் வியாக்யானம் - 9 -ஆம் பத்து 100 பாசுரங்கள் |
| பத்தாம் திருநாள் | 'தாள தாமரை' பாசுரம் அபிநயம், வியாக்யானம் - 10-ஆம் பத்து 100 பாசுரங்கள் - நம்மாழ்வார் மோட்சம் - திருவாய்மொழி சாற்றுமுறை. |

## 17. தைத்தேர் திருநாள் (பூபதித் திருநாள்)

தைமாதம் நடைபெறும் தைத்தேர் திருவிழா மிகவும் விமரிசையாக பதினொரு நாள்கள் நடைபெறுகின்றன. சித்திரைத் தேர் திருவிழாவைத் தொடர்ந்து நடைபெறும் இரண்டாவது பெரிய தேர்த் திருவிழாவாகும்.

### முதல் நாள்

அதிகாலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கொடியேற்ற மண்டபத்திற்குச் சேருகிறார். கொடிப்படம் புறப்பட்ட தனுர் லக்னத்தில் துவஜா ரோஹனம்

அல்லது கொடியேற்றம் அதிகாலை நடைபெறுகிறது. பின்பு உற்சவர் கொடியேற்ற மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார். மாலையில் முதலில் 'பேரிதாடனம்', அதாவது கிரகங்களுக்கும் சுற்றுப்புற தேவதைகளுக்கும் செய்தி சொல்லி கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு பேரிகை கொட்டப்படுகிறது. அதைத் தொடர்ந்து நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் திருச் சிவிகையில் புறப்படுகிறார். உள்வீதி வலம் வந்து சந்தனு மண்டபத்தை அடைகிறார். பின்பு மேற்படி மண்டபத்திலிருந்து இரவில் புறப்பட்டு யாகசாலையில் திருமஞ்சனம் கண்டருளி கண்ணாடி அறை சேருகிறார்.

**இரண்டாம் நாளில்**

காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து ஒற்றைப் பிரபையில் புறப்பட்டு உள்திருவீதி வலம் வந்து ஆழ்வான் திருச்சுற்று வழியாகத் தாயார் சன்னதி சேருகிறார். பின்பு மாலை மேற்படி தாயார் சன்னதி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் சேருகிறார். வாகன மண்டபத்திலிருந்து ஹம்ச வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம் வந்து வாகன மண்டபத்தில் இரவில் வந்து சேருகிறார். தொடர்ந்து வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார்.

**மூன்றாம் நாளில்**

காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் சேருகிறார். வாகன மண்டபத்திலிருந்து சிம்ம வாகனத்தில் புறப்படுகிறார். உள்திருவீதி வலம் வந்து வாகன மண்டபம் திரும்புகிறார். தொடர்ந்து வாகன மண்டபத்திலிருந்து தோளுக்கினியாளில் புறப்பட்டு ஆழ்வான் திருச்சுற்று வழியாகக் கருத்தர் மண்டபம் சேருகிறார். மாலையில் மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் வருகிறார். வாகன மண்டபத்திலிருந்து யாளி வாகனத்தில் புறப்பட்டு உள்வீதி வலம் வந்து வாகன மண்டபம் சேருகிறார். தொடர்ந்து இரவில் வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார்.

**நான்காம் நாளில்**

காலை நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு முதலில் வாகன மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து இரட்டை பிரபையில் புறப்பட்டு உள்திருவீதி

வலம்வந்து வாகன மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி வீரேஸ்வரம் ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து கருட வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம் வந்து வாகன மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார்.

### ஐந்தாம் நாளில்

காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத் திலிருந்து சேக்ஷ வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து வாகன மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு ராமராவ் மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து ஹனுமந்த வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம் வந்து இரவில் வாகன மண்டபம் சேருகிறார். இரவில் மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார்.

### ஆறாம் திருநாளில்

காலை நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து கற்பக விருட்சத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம் வந்து வாகனமண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு சுக்ரவார தோப்பு ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு யானை வாகன மண்டபம் சேருகிறார். இரவில் யானை வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து யானை வாகன மண்டபம் சேருகிறார். பின்பு உள்ஆண்டாள் சன்னதியில் மாலை மாற்றிக்கொண்டு கண்ணாடி அறை சேருகிறார்.

### ஏழாம் திருநாளில்

மாலையில் நம்பெருமாள் திருச்சிவிகையில் உபயநாச்சி யார்களுடன் புறப்பட்டு நெல்லளவு கண்டருளி உள்திருவீதி வலம்வந்து இரவு ஆழ்வான் திருச்சுற்று வழியாகத் தாயார்

சன்னதி சேருகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளி கண்ணாடி அறை சேருகிறார்.

**எட்டாம் திருநாளில்**

காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து பல்லக்கில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து ரெங்கவிலாச மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து மாலை குதிரை வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து வையாளி கண்டருளி இரவு கண்ணாடி அறை சேருகிறார். இரவில் சின்ன பெருமாள் சயனம் மேற்கொள்கிறார்.

**ஒன்பதாம் திருநாளில்**

திருத்தேர் புறப்படுகிறது. காலையில் நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் புறப்பட்டு தைத்தேர் மண்டபத்திற்கு வருகிறார். மகர லக்னத்தில் திருத்தேர் புறப்படுகிறது. திருத்தேர் மக்களால் வடம் பிடிக்கப்பட்டு இழுக்கப்படுகிறது. பெருந்திரளான மக்கள் அதில் ஈடுபடு கின்றனர். திருத்தேர் நிலை சேர்ந்தவுடன் நம்பெருமாள் தாயார் சன்னதியில் எழுந்தருளுகிறார். அங்கே கதிரலங்காரம் நடப்பது குறிப்பிட வேண்டிய அம்சமாகும். சித்திரையில் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களிலிருந்து அறுவடை செய்து வந்த நெற்கதிர்களை யானையின்மீது வெள்ளப்பிள்ளை என்பவர் கொண்டு வருவார். பிறகு திருவீதி வந்து பெருமாளுக்கு எதிரே கொண்டுவந்து சமர்ப்பிப்பார்.

**பத்தாம் திருநாளில்**

நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு சந்தனு மண்டபத்தை அடைகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளிய பின்பு அங்கிருந்து மாலை புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து இரவில் மூலஸ்தானம் சேருகிறார். பத்தாம் திருநாள் (சப்தவாரானம்) அன்று உடையவர் சன்னதிக்கு பெருமாள் எழுந்தருளுவார். அங்கு இளநீர் அமுது செய்வார்.

**பதினொன்றாம் திருநாளில்**

மாலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு ரங்கவிலாச மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து

இரவு புறப்பட்டு வாகன மண்டபம் சேருகிறார். வாகன மண்டபத்திலிருந்து ஆளும் பல்லக்கில் (பூ பல்லக்கு) புறப்பட்டு உள்திருவீதிகள் வலம்வந்து வாகன மண்டபம் சேருகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை அடைகிறார்.

## 18. திருப்பள்ளியோடத் திருநாள் (தெப்பத் திருநாள்)

இத்திருநாள் ஒன்பது நாட்கள் நடைபெறுகிறது.

### முதல் நாள்

இத்திருநாள் காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு ரெங்கவிலாச மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் சேருகிறார். அங்கிருந்து ஹம்ச வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து இரவில் வாகன மண்டபம் வந்து சேருகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானத்தை அடைகிறார்.

### இரண்டாம் நாள்

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு உள்திருவீதி வழியாக வலம்வந்து ரெங்கவிலாச ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து ஹனுமந்த வாகனத்தில் புறப்பட்டு உள்திரு வீதி வலம்வந்து இரவு வாகன மண்டபம் அடைகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சேருகிறார்.

### மூன்றாம் திருநாளில்

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து வழிநடை உபயங்கள் கண்டருளி ராமராவ் மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து கற்பக விருக்ஷத்தில் மாலை புறப்பட்டு உள்திருவீதி வலம் வந்து இரவு வாகன மண்டபம் வந்து சேருகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சேருகிறார்.

**நான்காம் திருநாளில்**

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து வழிநடை உபயங்கள் கண்டருளி காசுக்கடை செட்டியார் ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து வெள்ளி கருட வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து இரவு வாகன மண்டபம் சேருகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சேருகிறார்.

**ஐந்தாம் திருநாளில்**

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி ரெங்கவிலாசம் ஆஸ்தான மண்டபம் வந்தடைகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து இரட்டை பிரபையில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து இரவு வாகன மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு இரவு மூலஸ்தானம் சேருகிறார்.

**ஆறாம் திருநாள்**

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து பல்லக்கில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து வாணிப மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து தோளுக் கினியாளில் புறப்பட்டு யானை வாகன மண்டபம் சேருகிறார். இரவு மேற்படி மண்டபத்திலிருந்து யானை வாகனத்தில் புறப்பட்டு உள்திருவீதி வலம்வந்து யானை வாகன மண்டபம் சேருகிறார். தொடர்ந்து உள்ஆண்டாள் சன்னதியில் மாலை மாற்றிக்கொண்டு இரவு மூலஸ்தானம் சேருகிறார்.

**ஏழாம் திருநாளில்**

காலை நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் சந்தனு மண்டபத்திலிருந்து புறப்பட்டு நெல்லளவு கண்டருளி உள்திருவீதி வலம்வந்து மூலஸ்தானம் சேருகிறார்.

**எட்டாம் திருநாளில்**

மாலை நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து உபய நாச்சியார்களுடன் புறப்பட்டு தெப்பக்குளம் ஆஸ்தான

மண்டபத்தை அடைகிறார். இரவு ஆஸ்தான மண்டபத்திலிருந்து புறப்பட்டு தெப்பம் கண்டருளுகிறார். இரவு தெப்பக் குளத்தை வலம்வந்து மைய மண்டபத்தைச் சேருகிறார். தொடர்ந்து இரவு மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு இரவு மூலஸ்தானத்தை சேருகிறார். தெப்பத் திருவிழாவில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு தரிசனம் பெறுகின்றனர்.

### ஒன்பதாம் திருநாளில்

காலை நம்பெருமாள் மூலஸ்தானத்தில் பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி தெப்பக்குள ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலையில் திருமஞ்சனம் கண்டருளி மேற்படி மண்டபத்திலிருநது ஒற்றைப் பிரபையில் புறப்பட்டு இரவு சித்திரை வீதிகள் வலம்வந்து மூலஸ்தானம் சேருகிறார்.

ஒன்பதாவது திருநாள் 'பந்தக்காட்சி' விசேஷ அம்சமாகும். இன்று சூரிய பிரபையில் பெருமாள் திருவீதி வரும்போது ஏராளமான தீவட்டிகளை பெருமாள் அருகில் ஏந்தி வருவார்கள்.

### 19. நம்பெருமாள் 'ஸம்சத்ஸராதி' (தெலுங்கு வருடப்பிறப்பு)

நம்பெருமாள் காலையில் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு சந்தனு மண்டபம் சேருகிறார். அங்கு திருமஞ்சனம் கணடருளி அலங்காரம் செய்து அமுது அளிக்கப்பட்டு பின்பு புதுப்பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து மாலை ஜாலி அலங்காரம் செய்யப்படுகிறது. இரவு சந்தனு மண்டபத்திலிருந்து புறப்பட்டு ஆழ்வார்களால் மரியாதை செய்யப்பட்டு மூலஸ்தானம் சேருகிறார்.

### 20. துதி பிரம்மோத்ஸவம்

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு நடைபெறும் மகோத்சவம் மிகவும் பெருந்திரளான மக்கள் கூட்டத்தை சந்திக்கிறது. ஆனால் அதிலும் சிறியதான ஆதி பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்பாகவே பதினொரு நாள்கள் நடத்தப்படுகின்றன.

**முதல் நாளில்**

அதிகாலையில் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கொடியேற்ற மண்டபம் சேருகிறார். கொடிப்படம் உடனே புறப்படுகிறது. மீன லக்னத்தில் கொடியேற்றம் நடைபெறுகிறது. மேற்படி மண்டபத்திலிருந்து உற்சவம் புறப்பட்டு கண்ணாடி அறை அடைகிறார். மாலை முதல் நிகழ்ச்சியாக பேரிதாடனம் ஒலிக்கப்பட்டு கிரகங்களுக்கு செய்தி அனுப்பப்படுகிறது. சுற்றுப்புற தேவதைகளுக்குச் செய்தி தெரிவிக்கப்படுகிறது. பின்பு நம்பெருமாள் உபயநாச்சியார் களுடன் திருச்சிவிகையில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து இரவு சந்தனு மண்டபத்தை அடைகிறார். தொடர்ந்து யாகசாலைக்கு வந்து சேருகிறார். யாகசாலையில் திருமஞ்சனம் கண்டருளி பின்பு அங்கிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார்.

**இரண்டாம் திருநாளில்**

காலை நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு கருட மண்டபம் சேருகிறார். மாலை கருட மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார். அரவணை அமுது பெருமாளுக்குப் படைக்கப்படுகிறது.

**மூன்றாம் திருநாளில்**

இரவு நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து பல்லக்கில் புறப்பட்டு மேலூர் வழிநடை உபயங்கள் கண்டருளி ஜீயபுரம் ஆஸ்தான மண்டபம் வந்து சேருகிறார். பின்பு ஜீயபுரம் ஆஸ்தான மண்டபத்திலிருந்து புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி இரவு கண்ணாடி அறை சேருகிறார்.

**நான்காம் திருநாளில்**

காலை நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து நொச்சியம் ரெட்டியார் மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து கருட வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து இரவு வாகன மண்டபம் சேருகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார்.

**ஐந்தாம் திருநாளில்**

*காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் சேருகிறார். வாகன மண்டபத்திலிருந்து சேஷ வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம் வந்து வாகன மண்டபம் சேருகிறார். தொடர்ந்து வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு சேஷராயர் மண்டபம் சேருகிறார். மேற்படி மண்டபத்திலிருந்து மாலை கற்பக விருட்சத்தில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து இரவு வாகன மண்டபம் அடைகிறார். இரவு வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை சேருகிறார்.*

**ஆறாம் திருநாளில்**

*அதிகாலை நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து தங்கப் பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி உறையூர் அருள்மிகு கமலவல்லிநாச்சியார் திருக்கோயில் மஹாஜன உபயமண்டபம் சேருகிறார். உறையூர் நாச்சியாரை சுயம்வரமாகத் திருமணம் செய்துகொண்டு ஒரே ஆசனத்தில் பெருமாள் எழுந்தருளிச் சேவை சாதிப்பது விசேடமாகும். மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு நாச்சியார் முன்மண்டபம் சேருகிறார். மேற்படி முன்மண்டபத்திலிருந்து புறப்பட்டு 'சேத்தி' மண்டபம் சேருகிறார். அடுத்தநாள் அதிகாலை சேத்தி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வெளி ஆண்டாள் சன்னதியில் மாலை மாற்றிக்கொண்டு காலை கண்ணாடி அறை வந்தடைகிறார்.*

**ஏழாம் திருநாளில்**

*காலை கண்ணாடி அறையில் பொதுஜன சேவை நடைபெறுகிறது. மாலை நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் சந்தனு மண்டபத்திலிருந்து திருச்சிவிகையில் புறப்பட்டு அன்றிரவு திருக்கொட்டாரத்தில் நெல்லளவு கண்டருளி சித்திரை வீதிகள் வலம்வந்து ஆழ்வான் திருச்சுற்று வழியாகத் தாயார் சன்னதி சேருகிறார். இரவு தாயார் சன்னதியில் திருமஞ்சனம் கண்டருளி அங்கிருந்து புறப்பட்டு கண்ணாடி அறை வந்து சேருகிறார்.*

**எட்டாம் திருநாளில்**

காலையில் நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து புறப்பட்டு வழிநடை உபயங்கள் கண்டருளி எல்லைக்கரை ஆஸ்தான மண்டபம் சேருகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து குதிரை வாகனத்தில் புறப்பட்டு சித்திரை வீதி வலம்வந்து கோரதம் அருகே வையாளி கண்டருளி இரவு கண்ணாடி அறை சேருகிறார். இரவு சின்னபெருமாள் சயனம் கொள்கிறார்.

**ஒன்பதாம் திருநாளில்**

காலை நம்பெருமாள் கண்ணாடி அறையிலிருந்து தங்கப் பல்லக்கில் புறப்பட்டு சித்திரை வீதிகள் உத்திரை வீதிகள் வலம் வந்து ஆழ்வான் திருச்சுற்று வழியே தாயார் சன்னதி சேருகிறார். தாயார் சன்னதியில் கலகோத்சவம் நடைபெறுகிறது. பங்குனி உத்திர நாளாகும். பங்குனி உத்திரம் ஸ்ரீரங்க நாயகித் தாயாரின் திருநட்சத்திரமாகும். பெருமாள் தன் பிரதான தேவியாரான ஸ்ரீரங்கநாச்சியாரைக் காண புறப்பட்டு வருகிறார். இரண்டு நாளைக்கு முன்பு உறையூர் சென்று அங்குள்ள சோழகுல வல்லியோடு இருந்த விவரத்தினை அறிந்து பிரளயகலகம் செய்து பெருமாளை பார்க்க வரக்கூடாது என்று தடை செய்வார். உள்ளே வர மூன்றுமுறை அனுமதி மறுக்கப் படுகிறது. இதற்கு சமாதானம் செய்ய நம்மாழ்வார் வருவார். தன் தவற்றை பெருமாள் ஒப்புக்கொள்ள நாச்சியார் பெருமாளை ஏற்றுக்கொள்கிறார். இந்நிகழ்ச்சியை சில குருக்கள் தாயார் சார்பாகவும் சில குருக்கள் பெருமாள் சார்பாகவும் நின்று அபிநயத்துடன் நடத்திக் காட்டுவர். பின்பு தாயார் சமாதானம் கண்டருளி தாயார் முன்மண்டபத்திற்கு வந்து சேருகிறார். அங்கு முதல் ஏகாந்தத்துடன் பெருமாள் காணப்படுகிறார். அவருக்கு தளிகை அமுது படைக்கப்படுகிறது. அது முடிந்தவுடன் புறப்பட்டு பங்குனி உத்திர மண்டபம் வந்து சேருகிறார். இரவுவரை பொதுஜன சேவை நடைபெறுகிறது. இரவில் சின்னப் பெருமாள் தீர்த்தவாரி கண்டருளி தாயார் சன்னதி வந்து சேருகிறார். தொடர்ந்து இரண்டாவது ஏகாந்தம் நடைபெறுகிறது. திருமஞ்சனம் கண்டருளி பின்பு அடுத்தநாள் அதிகாலை மூன்றாம் ஏகாந்தம் முடிந்த பின்பு காலையில் தாயார் மூலஸ்தானம் சென்று சேருகிறார். இந்த ஒன்பதாம் நாள்

பங்குனி உத்திரத் திருவிழாவைக் காண திரளான மக்கள் கூடி கலகோத்சவத்தைக் கண்டு களிக்கின்றனர்

**பத்தாம் திருநாளில்**

காலை பெருமாள் தாயார் சன்னதியிலிருந்து கோரதம் காணப் புறப்படுகிறார். ரதம் யாத்திரைக்குத் தயாராகிறது. தொடர்ந்து தேர்வடம் பிடித்தல் நிகழ்ச்சியில் மக்கள் கலந்து கொள்கின்றனர். சில நேரத்தில் தேர்நிலைக்கு வருகிறது. தேர் மண்டபத்திலிருந்து பின்பு பெருமாள் புறப்பட்டு மூலஸ்தானம் வந்து அடைகிறார்.

பத்தாம் திருநாளில் மாலை பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு சந்தனு மண்டபம் வந்தடைகிறார். அங்கு திருமஞ்சனம் கண்டருளுகிறார். பின்பு மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு திருவீதி வலம்வந்து மூலஸ்தானம் சேருகிறார்.

**பதினொன்றாம் நாளில்**

பகலில் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு மாலை கருடமண்டபம் வந்தடைகிறார். மாலை மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வாகன மண்டபம் வந்து சேருகிறார். அங்கிருந்து ஆளும் பல்லக்கில் புறப்பட்டு சித்திரை வீதிகள் வலம்வந்து இரவு வாகன மண்டபம் வந்து சேருகிறார். இரவில் வாகன மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் சென்று சேருகிறார்.

## ஸ்ரீ தாயார் சன்னதி திருவிழாக்கள்

**1. ஸ்ரீ ரங்கநாச்சியார் கோடைத் திருநாள் (பூசாற்று உற்சவம்)**

**வெளிக்கோடை (5 நாள்கள்)**

ஒவ்வொரு நாளும் மாலை ஸ்ரீரங்கநாச்சியார் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கோடை நாலுகால் மண்டபம் வந்து சேருகிறார். இரவு புஷ்பம் சாத்துப்படி கண்டருளி மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு இரவு மூலஸ்தானம் வந்தடைகிறார்.

**உட்கோடை (5 நாள்கள்)**

ஒவ்வொருநாளும் ஸ்ரீரங்கநாச்சியார் மாலை மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கோடை நாலுகால் மண்டபம் வந்தடைகிறார். இரவு புஷ்பம் சாத்துப்படி கண்டருளி மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணைவாத்தியங்களுடன் மூலஸ்தானம் வந்து சேருகிறார்.

**2. ரங்கநாச்சியார் வசந்த உற்சவம் (7 நாள்கள்)**

ஒவ்வொருநாளும் ஸ்ரீரங்கநாச்சியார் மாலை மூலஸ்தானத்திலிந்து புறப்பட்டு வசந்த மண்டபம் சேருகிறார். அங்கு நாச்சியாருக்கு அலங்காரம் செய்யப்படுகிறது. இரவு மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் அடைகிறார்.

**3. ஸ்ரீரங்கநாச்சியார் ஜேஷ்டாபிஷேகம்**

காலையில் கருடமண்டபத்திலிருந்து தங்கக்குடம் எடுத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்பு திருக்காவேரியிலிருந்து திருமஞ்சனம் எடுத்துவர புறப்படுகின்றனர். யானையின் மீது தங்கக்குடத்தில் திருமஞ்சனத்தைக் கொண்டுவந்து தாயார் சன்னதியில் சேர்க்கின்றனர். இதைத்தொடர்ந்து அங்கில் தாயார் சன்னதி வசந்த மண்டபம் வந்து சேருகிறது. மாலையில் அங்கில் சுத்தம் செய்யப்பட்டு திரும்ப ஒப்புவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து இரவு மங்களஆரத்தி செய்யப்படுகிறது.

**4. திருப்பாவாடை (ஒருநாள்)**

இன்று காலை தளிகை எடுத்தல் முதல் நிகழ்ச்சியாகும். தளிகை அமுதினை தாயாருக்கு அளித்த பின்பு மங்கள ஆரத்தி செய்து முடிப்பர். இவ்வுணவினை பொதுமக்களுக்கும் அளிப்பர்.

**5. ஸ்ரீரங்கநாச்சியார் நவராத்திரி உற்சவம்**

**முதல் நாள்**

மாலை ஸ்ரீரங்கநாச்சியார் மூலஸ்தானத்தில் திருமஞ்சனம் கண்டருளுகிறார். பின்பு மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு இரவு கொலுமண்டபம் வந்தடைகிறார். கொலு நிகழ்ச்சிகள்

ஆரம்பமாகின்றன. கொலுமுடிந்தவுடன் அங்கிருந்து புறப்பட்டு இரவு மூலஸ்தானம் வந்தடைகிறார்.

**இரண்டாம் நாள்முதல் ஆறாம் நாள் வரை. எட்டாம் திருநாள்**

ஒவ்வொருநாளும் மாலை ஸ்ரீரங்கநாச்சியார் முலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கொலுமண்டபம் சேருகிறார். கொலு ஆரம்பித்து முடிவடைகிறது. பின்பு இரவு மூலஸ்தானம் வந்தடைகிறார்.

**ஏழாம் திருநாளில்**

மாலை ஸ்ரீரங்கநாச்சியார் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு இரவு கொலுமண்டபம் அடைகிறார். கொலு ஆரம்பிக்கப்பட்டு முடிவடைகிறது. முடிந்தவுடன் மூலஸ்தானம் வந்தடைகிறாள். ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிசேவை நடைபெறுகிறது.

**ஒன்பதாம் திருநாளில்**

சரஸ்வதி பூசை நடைபெறுகிறது. ஸ்ரீரங்கநாச்சியார் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு மாலை கொலுமண்டபம் வருகிறார். அங்கு இரவுவரை திருமஞ்சனம் கண்டருளி பின்பு கொலு மண்டபத்திலிருந்து புறப்பட்டு இரவு மூலஸ்தானம் சேருகிறார்.

**6. ஸ்ரீரங்கநாச்சியார் ஊஞ்சல் (டோலோத்சவம்) (7 நாள்கள்)**

ஒவ்வொருநாளும் ஸ்ரீரங்கநாச்சியார் மாலை மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு ஊஞ்சல் மண்டபம் வந்தடைகிறார். ஊஞ்சல் ஆரம்பமாகி அரையர் சேவையுடன் முடிகிறது. பின்பு மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு இரவு மூலஸ்தானம் அடைகிறார்.

**7. ஸ்ரீரங்கநாச்சியார் திருமொழித் திருநாள் ( 5 நாள்கள்)**

ஒவ்வொருநாளும் மூலஸ்தானத்தில் திருமொழி பிரபந்தம் அரையர்களால் பாடப்படுகிறது.

## 8. ஸ்ரீரங்கநாச்சியார் திருவாய்மொழித் திருநாள் (5 நாள்கள்)

### முதல் மூன்று நாள்கள்

*மாலையில் ஸ்ரீரங்கநாச்சியார் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு திருவாய்மொழி மண்டபம் சேருகிறார். அவருக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. அங்கிருந்து புறப்பட்டு வீணை வாத்தியங்களுடன் மூலஸ்தானம் வந்தடைகிறார்.*

### நான்காம் திருநாளில்

*மாலை ஸ்ரீரங்கநாச்சியார் மூலஸ்தானத்திலிந்து புறப்பட்டு திருவாய்மொழி மண்டபம் சேருகிறார். அங்கு ஹிரண்யவதம் அரையரால் நிகழ்த்தப்படுகிறது. அதைத் தொடர்ந்து அரையர் தீர்த்தம் வழங்கப்பட்டு ஸ்ரீசடகோபம் சாதித்தலும் நிகழ்கிறது. பின்பு இரவு மேற்படி மண்டபத்திலிருந்து புறப்பட்டு வீணை வாத்தியங்களுடன் மூலஸ்தானம் சேருகிறார்.*

### ஐந்தாம் திருநாளில்

*மாலை ஸ்ரீரங்கநாச்சியார் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு திருவாய்மொழி மண்டபம் அடைகிறார். அலங்காரம் செய்தபின்பு நாச்சியாருக்கு அமுது அளிக்கப் படுகிறது. இரவு சாற்றுமுறை நடைபெற்று முடிந்தவுடன் மேற்படி மண்டபத்திலிந்து புறப்பட்டு மூலஸ்தானம் அடைகிறார்.*

### ஆறாம் நாளில்

*இயற்பா சாற்றுமுறை மாலைமுதல் இரவு வரை நடைபெறுகிறது.*

### அடிக்குறிப்புகள்

1. *ராஜநாயகம்.கே, (1996) அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் உற்சவ கால அட்டவணை நிகழ்ச்சி நிரல்களை அடியொற்றி இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.*
2. Battacharya, N.N., 1982, p.188
3. *ராஜநாயகம், கே.,* op.cit., p.26

# 5. திருவிழாக்களின் பொருளும் செய்தியும்

பாஞ்சராத்ர ஆகமங்கள் வைணவக் கோயில்களில் உற்சவங்கள் நடத்தப்பட வேண்டிய முறைகளை விவரிக்கின்றன. இறைவனின் பல்வேறு செயல்களையும் அவர் துயிலிலிருந்து எழுந்து தொடர்ந்து செய்த செயல்களையும் குறியீடாகக் காட்டும் விதத்தில் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. மக்களுக்கு இறைவனின் செயல்களை நினைவுபடுத்துவதும், தங்களை திருத்திக் கொள்வதற்கும் ஆன்மீகப் பண்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கும் திருவிழாக்கள் உறுதுணையாக நிற்கின்றன. மக்களின் மனதில் நம்பிக்கையும் தெளிவும் மன அமைதியும் நேர்மையும் அறமும் சத்தியமும் குடிகொள்ள திருவிழாக்கள் உதவுகின்றன. தங்களை வருடந்தோறும் புதுப்பித்துக்கொள்ளவும் உற்சவங்கள் உதவுகின்றன.

பருவகாலங்கள் முறையாகச் சுழன்று வருகின்றன. அவ்வாறு சுழன்று வருவதும் ஒழுங்காக வருவதும் இறைவனின் செயற்பாட்டினாலாகும் (the eternal return)[1] இதனால் மக்கள் பெறுகின்ற பயன்களின் விளைவாக இறைவனுக்கு நன்றி செலுத்துவதும் மக்களின் கடமையாகும். எல்லாம் அவன் செயலால் நடைபெறுகிறது என்பதை நினைவூட்டுவதற்கும், மக்கள் புரிந்து கொள்வதற்கும் விழாக்கள் நடத்தப்படுகின்றன.

திருவிழாச் சுழற்சி (cycle of festivals) முறையாக பின்பற்றப்படவில்லையென்றாலும் பெரும்பான்மையான விழாக்கள் வைணவக் கோயிலான திருவரங்கத்தில் நடைபெறு கின்றன. வரிசைக் கிரமமாக நடைபெறும் விழாக்களிலிருந்து நாம் சில செய்திகளை அறிந்துகொள்ள முடியும்.

சதுர்மாத முடிவில் நான்குமாத ஓய்வுக்குப் பின்பு இறைவன் விழித்தெழுகிறார் எனறு கருதப்படுகிறது. உலகத்தை காக்கவே அவர் புறப்படுகிறார். அவரில்லாமல் இவ்வுலகம் இயங்காது. கார்த்திகை மாத பௌர்ணமியன்று இறைவனின் படிமம் நன்கு குளிப்பாட்டப்பட்டு, நல்லாடைகள் அணிந்தும், அலங்காரம் செய்தும் வீதிவழியே உலாவுக்கு கொண்டுவரப்படு கிறார். இறைவனின் செயல்கள் ஆரம்பிக்கின்றன. காத்தல், படைத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் போன்ற தொழில்கள் நடைபெறுகின்றன. இறைவனை இவ்வாறு தூக்கத்திலிருந்து விழித்தெழச் செய்வதற்கு நடத்தப்படும் விழா 'போதனோத்சவம்' என்றும் அழைக்கப்படும். இது திருவரங்கத்தில் 'கைசிக ஏகாதசி' விழாவாகக் கொண்டாடப்படுகிறது எனலாம். இறைவனுக்குப் புதிய ஆடைகள், அணிகலன்கள் அணியப்படுகின்றன. இறைவன் இவ்வுலகைக் காக்கப் புறப்பட்டுவிட்டார். எல்லோரும் அவரவர் செயல்களை அவரருள் பெற்றுத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. மக்களுக்கும் இதனால் மனமகிழ்ச்சியும் நம்பிக்கையும் தங்கள் செயல்களைச் செய்வதற்கு ஏற்படுகின்றது. நேர்மையுடனும் சத்தியத்துடனும் செயல்பட ஊக்கும் அளிக்கப்படுகிறது.

தொடர்ந்து தீபவிழா ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்படு கிறது. சதுர்மாதத்திற்குப் பின்பு கோயில் பணிகள் துரிதமாக நடைபெற ஆரம்பிக்கின்றன. இறைவன் விழித்து எழுந்தபின்பு ஒளி எங்கும் பெறும் விதத்தில் தீபோத்சவ / கிருத்திகோத்சவ / தீபாரோபனா / கார்த்திகை தீபோத்சவ விழா சிறப்பாக கோயில்களில் கொண்டாடப்படுகிறது. திருவரங்கத்திலும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இது கார்த்திகை மாதத்தில் நடைபெறுகிறது. ஒரு தற்காலிகமான உயரமான குடிசை திருவரங்கம் கோயிலில் வாகன மண்டபம் அருகே நிறுத்தப்பட்டு 'சொக்கப்பனை' கொழுத்தப்படுகிறது. மக்கள் இதனைக் காண திரளாக வருகின்றனர். மாபலியை அழித்ததை நினைவுகூரும் வகையில் இது நடத்தப்படுவதாகக் கூறுவர். இருப்பினும் எங்கும் ஒளிவெள்ளம் பெருகவும் இறைவன் ஒளி வடிவாய் இருக்கிறார் என்பதை உணர்த்தவும் இது குறியீடாக நிற்கிறது; நல்லொளி பிறக்கவும் காரணமாக இருக்கிறது.

அடுத்து இறைவனை திருப்திப்படுத்தவும் மக்கள் தாங்கள் நிர்வாணம் அடைந்ததாகவும், இறைவனோடு ஒன்று சேர்ந்ததாகவும் உணர்ந்து கொள்ளும் விதத்தில் வைகுண்ட ஏகாதசி அன்று 'பரமபதவாசல்' திறக்கிறது. மகோத்சவத்தில் இப்பரமபதவாசல் திறக்கிறது. இறைவனோடு இரண்டற கலக்கின்ற இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ள மக்கள் வெள்ளம் கோயிலில் கரைபுரண்டோடுகிறது. இது ஒரு சடங்காக இருப்பினும் மக்களின் உணர்வில் ஆத்ம திருப்தியும், புத்துணர்ச்சியும், தூய்மையும் கிடைப்பதாகக் கருதப்படுகிறது. வருடந்தோறும் இந்நிகழ்ச்சியில் பங்குகொள்வதால் ஒருவன் தன்னை, தன் ஆத்மாவை சுத்தம் செய்துகொள்ள வழி பிறக்கிறது.

பாஞ்சராத்ர ஆகமங்களில் கூறப்பட்ட 'வேட்டையாடுதல்' நிகழ்ச்சியானது தனியாக அதற்கென்று ஒருவிழா திருவரங்கத்தில் நடத்தப்படவில்லையென்றாலும் நவராத்திரி விழாவில் சிங்கபெருமாள் கோயிலில் இந்நிகழ்ச்சி விஜயதசமி அன்று நடத்தப்படுகிறது. பெருமாள் குதிரை வாகனத்தில் அம்பு வில்லுடன் புறப்பட்டு வருகிறார். பட்டர் அம்புகளை பலதிசைகளிலும் காட்டில் வீசுகிறார். தீயசக்திகள் அழிந்து ஒழிவதற்காக இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்குகிறார்கள். இக்காட்சிகளைக் கண்டவர்கள் தங்களிடமிருந்து தீயசக்திகள் ஒழிந்ததாகவும் அல்லது தங்களுக்குத் துன்பம் செய்கின்றவர்கள் ஒழிந்ததாகவும் பாவித்துக்கொள்கின்றனர். தீயசக்திகள் ஒழியவேண்டும் என்பது தான் மக்களின் பொதுவான சிந்தனையாகும். இது எப்போதும் நல்மனிதரிடத்தில் குடிகொண்டிருக்கும் எண்ணமாகும். மேலும் வேட்டையாடுதல் நிகழ்ச்சி வைகுண்ட ஏகாதசி மகோத்சவத்தில் திருவரங்கத்தில் ஒருநாள் 'கனு' பண்டிகையன்று கொண்டாடப்படுகிறது. இன்று இறைவன் குதிரை வாகனத்தில் வேட்டைக்குச் செல்வார்.

அடுத்து ஊஞ்சல் திருவிழா பற்றி பல பாஞ்சராத்ர ஆகமங்கள் விளக்குகின்றன. பெருமாளுக்குத் தனியாகவும் தாயாருக்குத் தனியாகவும் ஊஞ்சல்விழா திருவரங்கத்தில் நிகழ்த்தப்படுகிறது. இதுவும் தீயசக்திகள் அழிந்து ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நடத்தப்படுகிறது. இதனைக்

கண்ணுற்றவர்கள் அடைகின்ற பயன் பெரிதாகும் என பாஞ்சராத்ர ஆகமங்கள் கூறுகின்றன.

வசந்தகாலம் வந்தவுடன் எங்கும் மரங்களில், செடிகளில், கொடிகளில் பூக்கள் மலர்ந்து காட்சியளிக்கும். இயற்கையின் புதுவரவை எல்லோரும் விரும்புகின்றனர். எங்கும் பூக்கள் சிரித்துக் குலுங்கும்போது மக்களும் சிரித்துக் குலுங்கவேண்டும். மகிழ்ச்சி வெள்ளம் எங்கும் பெருக்கெடுத்து ஓடவேண்டும். பருவத்தில் மலர்ந்த இம்மலர்களை இறைவனுக்கும் அளித்து அவரை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று மனம் விரும்புகிறது. வசந்த காலத்தில் மக்கள் வசந்தத்துடன் வாழ்வதுபோல் இறைவனும் கோயிலிலுள்ள ஒரு வசந்த மண்டபம் அமைந்துள்ள தோட்டத்திற்கு திருவரங்கத்தில் எடுத்துச் செல்லப்படுகிறார். இறைவனுக்கு மலர் அலங்காரம் செய்து வசந்த மண்டபத்தில் மகிழ்ச்சியுண்டாக்குகின்றனர். இதனால் இந்நிகழ்ச்சியைப் பார்க்கின்றவர்கள் தங்கள் வாழ்விலும் வசந்தம் கிடைப்பதாகக் கருதுகின்றனர்.

வசந்தகாலம் முடிந்து கோடைக்காலம் பிறக்கிறது. பூக்களாக இருந்தவை காய்களாகவும் கனிகளாகவும் மாறிவிட்டன; பயிர்கள் விளைந்துவிட்டன. மக்கள் இதனால் பயன் அடைகின்றனர். தங்களுக்கு கிடைத்த பலன்களை மனதில் கொண்டு இறைவனுக்கு நன்றி செலுத்த கனிகளையும் நல்லுணவையும் அறுவடையில் கிடைத்த நற்பயிரில் சமைத்த உணவினையும் அளிக்கின்றனர். திருவரங்கத்தில் கோடை உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. கோடை உற்சவ மண்டபத்திற்குச் சென்று இறைவன் தங்குகிறார். பழங்கள் அவருக்கு அளிக்கப்படுகின்றன. திருவரங்கத்தில் இத்திரு விழாவை அடுத்து நடைபெறும் ஒருநாள் உற்சவமான 'திருப்பாவாடை' என்பதும் இதற்காகவே நடத்தப்படுகிறது. உணவு இறைவனுக்கு அளிக்கப்பட்டு பொதுமக்களுக்கும் ஏழை எளியவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் அளிக்கப்படுகிறது. தாயாருக்கும் தனியாக 'திருப்பாவாடை' நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இறைவனுக்கும் இறைவிக்கும் நடைபெறும் திருமணம் 'கலியாண உற்சவம்' என்று அழைக்கப்படும். அது

திருவரங்கத்தில் திருக்கல்யாண உற்சவம் என்று தனிவிழாவாக நடைபெறாவிட்டாலும் ஆதிபிரம்மோத்சவத்தில் உறையூர் நாச்சியாருடன் ஒருநாள் நடத்தப்படுகிறது. சக்தி வடிவான இறைவியும் விஷ்ணு சக்தியும் இணைந்திருந்தாலே படைப்பும் நன்மைகளும் விளையும். பிரிந்திருந்தால் ஒன்றும் நிகழாது. திருவரங்கத்தில் 'கலகோத்சவம்' என்பது பங்குனி உத்திரத்தில் ஆதிபிரம்மோத்சவத் திருவிழாவில் பெருமாள் உறையூர் நாச்சியாரை சுயம்வரம் செய்து திரும்பும்போது தாயார் சன்னதியில் நடைபெறுகிறது. கலகம் தவிர்க்கப்படவேண்டும்; ஆண்சக்தியும், பெண்சக்தியும் இணைந்திருந்தாலே எப்போதும் நன்மை விளையும் என்பதை எடுத்துக்காட்டவே இக்கலகோத் சவம் அல்லது ஊடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மேலும் பெருமாள் மோகினி அலங்காரம் செய்து கொள்வதும் திருவரங்கத்தில் திருவிழா நிகழ்ச்சிகளில் காணப்படுகிறது. பெண்ணைப் போன்று வசீகர சக்தியுடையவர் விஷ்ணு. பிரம்ம சக்தியுடன் இணைந்து படைப்புத் தொழில் செய்ய விஷ்ணுசக்தி அவசியம். விஷ்ணு சக்தியானது வியாபக சக்தி எனப்படும். அது பிற சக்திகளை வசீகரித்து அதனோடு இணைந்து தனு, கரண, புவன, போகங்களை நல்குகிறது என்பதை உணர்த்துவதற்காகவே விஷ்ணு மோகினி அலங்காரத்தில் வருகிறார்.[2]

குண்டலினி சக்தி, ஜீவ சக்தி, பிராண சக்தி ஆகியவை உடம்புகளுக்கு ஆதாரமாயிருக்கின்றன. இவற்றில் ஜீவ சக்தி, உயிர்ச் சக்தி அல்லது விஷ்ணு சக்தி எனப்படும். குண்டலினி சக்தியானது சப்த பூதங்களையும் படைத்தபோது அவற்றின் அணுக்கள் தனித்தனியே தாண்டவமாகக் கொண்டிருக்கும். அச்சலனம் ஒரு நொடிப்பொழுது நின்றால் அண்டமெல்லாம் மாயமாய் மறைந்துவிடும். இதனை ஞானிகள், எடுத்தகால் ஊன்றாத, இமைப்போதும் நில்லாத இறைவன் தாண்டவமாக கோயில்கள் மூலம் கற்பித்தனர்.

இங்ஙனம் ஒன்றையொன்று தீண்டாது தலைவிரித்தாடும் அணுக்களிடையே, இறைவனுடைய இரண்டாவது மூர்த்தத்தி லிருந்து ஜீவசக்தியானது வெளிப்பட்டு சப்த உலகங்களிலும் பரவி வியாபிக்கும். அதன் பயனாக அங்கங்குள்ள அணுக்களிடையே ஒரு கவர்ச்சியையும் வசீகர சக்தியையும் உண்டு பண்ணும்.

ஆதலால், அதுவரை தனித்தனியே இயங்கிவந்த சப்தபூதங்களுக்குள் பலவிதமான சேர்க்கைகளும் கலப்புகளும் ஏற்பட்டு, அண்டம் எங்கும் தனுகரண புவனங்கள் உண்டாகின்றன. இந்த வியாபக சக்தியும் அதன் வசீகரத் தன்மையும் இல்லாமல் ஒன்றும் உருப்பெறுவதில்லை. அங்ஙனம் உருப்பெற்ற பின்பும் அதன் இடைவிடாத வேலையின்றி அவையொன்றும் நிலைத்து நிற்பதில்லை. ஆதலால் இது ஜீவசக்தியென்றும், காத்தல் சக்தியென்றும் அழைக்கப்படும். 'விஷ்' என்ற சொல் வியாபகத் தன்மையைக் குறிப்பதால் அத்தன்மையுடைய இது விஷ்ணு சக்தியாகும்.

பிரளயத்தின் பின்னர் அத்தன்மையுடைய இது விஷ்ணு சக்தியாகும். தனுகரண புவன போகங்களைப் படைக்கும் பொருட்டுத் திருப்பாற்கடல் கடையப்பட்டது. ஆனால் மகா விஷ்ணுவானவர் மாயையாகிய அத்திருப்பாற்கடலில் உள்ளும் புறமும் வியாபித்திருக்காமல் அதன் மேலாக மாத்திரம் பள்ளி கொண்டிருந்தபடியால் விஷ்ணுவின் கவர்ச்சி சக்தியினின்று அங்கும் ஒன்றும் உருவாகவில்லை. அதன்மேல் அவர் ஆமையுருவெடுத்து அடிவரை புகுந்து வியாபித்த பின்னரே உருவங்கள் தோன்றலாயின. அதுமாதிரியே மோகினி அவதாரமும் அதன் மயக்கு முறைகளும் விஷ்ணுவுக்கே உரியனவாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. திருப்பாற்கடலினின்றும் அமிர்தம் உண்டானபோது அசுரரை மயக்க மோகினியாக வந்தவர் விஷ்ணுவே. கங்காளநாதர் தாருகாவனத்திற்குப் புறப்பட்டபோது அங்குள்ள முனிவரை மயக்க வந்த மோகினியும் இவரே. பஸ்மாசுரன் வரங்கொடுத்த சிவபெருமான் தலையிலேயே கை வைக்கவந்தபோது அவ்வசுரனை மயக்க மோகினியாக வந்தவர் விஷ்ணுவே. மற்றும் பல மோகினி வடிவங்களும் விஷ்ணுவுடையவையே. அவ்வுரிமை அவருக்கே உடையது. இவையெல்லாம் கூடார்த்தம் உடையன. இவை முன்பு மாத்திரமல்ல இன்றும் எங்கும் என்றும் இயற்கையில் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வுண்மைகளையும் நியதிகளையும் புராணங்கள் வாயிலாக ஞானிகள் விளக்கியுள்ளனர்.

குண்டலினி பெண் தன்மையுடையது. அம்மை எனப் பெயர் பெறுவது. ஜீவசக்தி ஆண் தன்மையுடையது. அப்பன் எனப் பெயர் பெறுவது. இவ்விரண்டிற்கும் இடைவிடாது நடந்து

கொண்டிருக்கும் திருமணத்தாலேயே உலகத்தில் தனு கரண புவன போகங்களெல்லாம் தோன்றுவதும் நிலைத்திருப்பதுமாம். அதனை அறிகுறியாக விளக்கும் பொருட்டே கோயில்களில் பள்ளியறை கட்டுவதும் விழாக்கொண்டாடி திருக்கல்யாணம் நடத்துவதும் நிகழ்த்தப்படுகின்றன. கோயில்களில் இது நாள்தோறும் நினைவூட்டப்படுகிறது. விழாக்காலங்களில் மிகவும் முக்கிய நிகழ்ச்சியாக நடைபெறுகிறது.

கோடை மற்றும் இலையுதிர் காலத்தில் நடத்தப்படும் விழா தெப்ப உற்சவமாகும். மனிதனைப்போன்றே இறைவனும் படகுப்பயணம் மேற்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார் என்று கூறுகின்றனர். சிலர் இறைவனை பூமியிலுள்ள மனிதர்கள் வழிபட வாய்ப்புகள் அதிகம் உள்ளதுபோல் நீரில் வாழும் பிராணிகளுக்கும் அவரை வழிபட ஒரு வாய்ப்பு அளிக்கப் படுவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு தூங்கியெழுந்த இறைவன் தனது அன்றாட வேலைகளை பருவ காலங்களில் கழிப்பதும் வேட்டையாடு வதும், படகில் செல்வதும், பருவகாலங்களை அனுபவிப்பதும், மனைவியோடு ஊடல் புரிவதும் ஆகிய செயல்களைச் செய்து இறுதியில் ஓய்வெடுக்கச் செல்லும் நிகழ்ச்சியாக, விழாவாக 'சயனோத்சவம்' நடத்தப்படுகிறது. ஆடை அணிகலன்கள் களையப்பட்டு ஓய்வு எடுப்பதற்காகச் செல்கிறார். திருவரங்கத்தில் 'ஜேஷ்டாபிஷேகம்' என்று ஒருவிழா ஒருநாளில் கொண்டாடப்படுகிறது.

திருவரங்கத்தில் முன்னுக்குப்பின் முரணாக இவ்விழாக் களில் சில நடத்தப்படுகின்றது. ஆனால் இவ்விழாக்களை வரிசைக் கிரமமாக இறைவனுடைய செயல்கள் (The eternal re-turn) முறையாக நடைபெறும் வகையில் சில கோயில்களில் பின்பற்ற வாய்ப்புண்டு. அவை மேலும் ஆய்வுக்குரியவை.

மேற்கண்ட திருவிழாக்களில் பல புராணங்களின் கதை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுவதையும் அவரது திருமணம், ஊடல் விளையாட்டுக்கள், யாத்திரைகள், பருவகாலத்தை அனுபவித்தல், வேட்டையாடுதல், படகில் செல்லுதல் போன்ற பல நிகழ்ச்சிகளையும் கண்டோம். இவ்வாறான திருவிழா

முறைமையை சிலர் 'இறைவன் திரும்புதல்' (The eternal return) என்று கூறுகிறார்கள். இவ்விழாக்கள் பொதுவாக வரலாற்றை அடியொற்றியதல்ல. இவை இறைவனுடைய செயல்களைக் குறியீடாகக் காட்டுகின்றன. பக்தர்களும் மக்களும் கோயிலை உலகத்தின் மையமாக, இறைவன் இருக்கும் இடமாகக் கருதுகின்றனர். அவன் செயல்களை விழாக்கள் மூலமாகத் தெரிந்து கொள்கின்றனர். இச்செய்திகளை விழாக்கள் மூலமாகச் சமயிகள் மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றனர். ஆண்டுதோறும் அவை மக்களுக்கு நினைவூட்டப்படுகின்றன. இறைவனின் இயக்கம் எப்போதும் ஒன்றுபோலவே ஒரே சீராகவே இருக்கின்றது. இயற்கையின் அனைத்து நிகழ்வுகளிலும் அது பின்னிப் பிணைந்துள்ளது. மேற்கத்திய கிறித்தவ, இஸ்லாமிய விழாக்கள் அச்சமயங்களில் சமயத் தலைவர்களின் செயல்களை நினைவு கூர்வதற்காகவும் வரலாற்றை நினைவுகூரும் வகையிலும் நடைபெறுகின்றன. ஆனால், பெரும்பான்மையான இந்து திருவிழாக்கள் தத்துவ மற்றும் புராணங்களை விளக்கவே நடைபெறுகின்றன. ஆழ்வார்கள், ஆச்சாரியர்களுக்கு நடைபெறும் விழாக்களே வரலாற்றையும் ஞானிகளையும் நினைவுகூரும் விதத்தில் நடைபெறுகின்றன.

எந்த ஆலயம் எந்த ஆகமத்தையொட்டி அமைக்கப்படு கிறதோ அந்த ரீதியாகவே நித்திய, நைமித்திக பூசைகளும் திருவிழாக்களும் நடத்த வேண்டுமென்பதே ஆலயவிதி. ஆகமங்கள் பலவாயிருப்பதால் திருவிழாக்கள் முதலியனவும் பலதிறமாக அமைந்துள்ளன. ஊர்கள்தோறும், கோயில்கள் தோறும், திருவிழ்ாக்களில் வேறுபாடு காண்பதற்கு இதுவே காரணமாகும்.

திருவிழா நடத்தவேண்டிய நாட்களைப் பற்றியும் ஆகமங்கள் வெவ்வேறுவிதமாகக் கூறுகின்றன என்பதைக் கண்டோம். ஒருநாள் முதல் இருபத்தொரு நாள்கள் வரை திருவிழாக்கள் நடைபெறுகின்றன. கொடியேறி கொடியிறக்கும் வரை பத்துநாட்கள் விழா நடத்தப்படுவனவும் உள்ளன. கொடியேற்றுவதற்கு முன்தினம் விநாயகர்விழா நடத்துவதுண்டு. திருவிழாக்களில் முக்கியமாக நடத்த வேண்டிய கிரியைகள் பதினெட்டாகும்.[3] அவை விருஷயாகம், துவஜாரோகணம், பிரஹ்த்தாளம், அங்குரம், யாகசாலை, அஸ்தரயாகம்,

பலிதானம், யானக்ரமம், பரிவேஷம் நீராஜனம், கௌளதுகம், தீர்த்த சங்கரணம், சூர்ணோத்ஸவம் என்பனவாம். இவற்றோடு ராரோஹணம், மிருகயாத்திரை, பூர்ணாகுதி, மௌணோத்சவம் முதலியவற்றைச் சேர்த்துக் கூறுவர். இவற்றில் சில முக்கியமான சடங்குகள் இன்றியமையாதனவாகக் கூறப்படுகின்றன. அவை மண் எடுத்தல், முளையிடுதல், திருவிழா நாட்களில் காலை மாலை பலவித வாகனங்களில் மூர்த்தியை எழுந்தருளச் செய்தல், யாகஞ்செய்தல், திருக்கலியாணஞ் செய்தல், தீர்த்தங் கொடுத்தல், கொடியிறக்கம், திருவூடல் முதலியனவாகும்.

எல்லா உலகங்கட்கும் நிமித்த காணமாகிய இறைவன் ஐந்து தொழில்களை இனிது நடத்தி வருகிறார். அவை சிருஷ்டி (உண்டாக்குதல்), ஸ்திதி (காப்பாற்றுதல்), சம்ஹாரம் (அழித்தல்), திரோபம் (மறைத்தல்), அனுக்ரகம் (அருளல்) என்பனவாம். இந்த ஐந்துதொழில்களையும் பத்துநாள் திருவிழாக்களில் அமைத்துள்ளனர்.

மண் எடுத்தல், முளையிடுதல், கொடியேற்றம் முதலியவைகள் சிருஷ்டி அல்லது படைத்தல் தொழிலை உணர்த்துகின்றன. வாகன உத்ஸவங்கள், யாகம், பலியிடுதல் முதலியன ஸ்திதி அல்லது காத்தல் தொழிலைக் குறிக்கும். தேர்த் திருவிழா, பரிவேட்டை, சாந்தணிதல் முதலியன ஸம்ஹாரம் அல்லது அழித்தல் தொழிலை உணர்த்துகின்றன. சத்தமிடாமல் மௌனமாக நடத்தும் திருவிழா திரோபவத்தை (மறைத்தலை) குறிக்கும். உறியடி, திருவூடல் முதலியன அனுக்கிரகத்தை (அருளல்) குறிக்கும். பத்துநாள் திருவிழாக்களில் முதல் ஐந்துநாள் விருத்திக் கிரமம் ஐந்துதொழில்கள் நடைபெறுகின்றன என்றும் கூறப்படுகிறது. இதற்குத் தக்கபடி வாகனங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பல கோயில்களில் பல ஆகமங்களை ஒட்டி வாகனங்களை பலவிதமாக எழுந்தருளப் பண்ணிவருவதால் இன்ன திருவிழாவில் இன்ன வாகனத்தை எழுந்தருளப் பண்ண வேண்டுமென்று வரையறை செய்துகூற வழியில்லாமல் இருக்கிறது.

முதல் திருவிழா அன்று எல்லாக் கோயில்களிலும் கொடியேறுகிறது. அந்தந்த ஆலயத்தில் உள்ள மூர்த்தியின் வாகனத்தின் உருவத்தை ஒரு கொடியில் எழுதி அதற்குப்

பூசைகள் செய்து கொடிமரத்தின் உச்சியில் ஏற்றுவதாகும். இவ்வுருவம் ஆத்மாவின் உருவமாகவும் தர்மத்தின் உருவமாகவும் மதிக்கப்படுகிறது. ஆத்மாக்களையும் தர்மத்தையும் கீழ்நிலையிலிருந்து உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் இறைவனின் கருணை இத்திருவிழாவில் விளக்கப்படுகின்றன. பொதுவகையில் உயர் வர்க்கங்களுக்கு அருள்புரியும் இறைவன், சிறப்பு வகையில் அருள்புரிய இப்பத்து நாட்களும் ஆயத்தமாகக் காத்திருக்கிறார் என்பதை இக்கொடி உணர்த்துகிறது. கொடியேற்றம் முதல் தீர்த்தவாரிவரை யாகசாலையில் யாகம் நடைபெறும். இது ஸ்திதி என்ற காப்பாற்றுதலைக் குறிக்கிறது.

வாகனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறியீட்டுத் தன்மை உடையன. உதாரணமாக விருஷ வாகனத்தில் இறைவன் வரும்போது இதை விருத்திக் கிரம சிருஷ்டிக் கோலம் என்பர். மரத்தின் கிளைகளும், இலைகளும் தத்துவங்களாகவும் உயிர் வர்க்கங்களாகவும் உள்ளன. இவற்றின் அடியில் இறைவன் இருந்து சிருஷ்டிக்கெல்லாம் வேர்போல் தாம் இருந்தருளுவதை இது உணர்த்துகின்றது.

சூரியப்பிரபை, சந்திரப்பிரபை ஆகியவை விருத்திக் கிரமஸ்திதிக் கோலம். சூரியனால் உலகத்திற்கு வெப்பம், மழை அதன்மூலமாக தனதான்ய விருத்திகள் உண்டாகிறது. அத்தகைய சூரியனைக் கொண்டு உலகத்தைக் காப்பாற்றுங்கருணையை இது குறிக்கிறது. சந்திரன் தனது தன்னொளியால் உயிர்களுக்கு இன்பத்தை அளிக்கிறான். அதைப்போல் சந்திர பிரபையைக் கொண்டு உலக வெப்பத்தால் தவிக்கும் உயிர்களுக்கு இறைவன் சாந்தி உண்டு பண்ணுகிறான் என்பதை இது விளக்குகிறது.

கருட வாகனம் விருத்திக் கிரம சங்காரக் கோலமாகும். சேஷ வாகனம் மறைத்தல் தொழிலாகிய திரோபவத்தைக் குறிக்கின்றது எனலாம். சேஷ வாகனம் படத்தையும் நஞ்சையும், மாணிக்கத்தையும் மறைத்து வைத்திருந்து வேண்டும்பொழுது வெளிவரும் 'குண்டலினி சக்தி சுழுமுனைநாடி' முதலிய வற்றோடு சேஷத்தை ஒப்பிடலாம். கருடவாகனம் சேவை மிகவும் முக்கியமானது. அடியார்களுக்கு ஆண்டவன்

அருள்புரிய கருட வாகனத்தில் எழுந்தருளுவதை புராணாதி களால் நன்கறியலாம். அருள்பெற்ற ஆன்மா கருடனாகும்.

யானை வாகனத்தின்மீது இறைவன் ஏறி எழுந்தருளுகிறார். இது லயக்கிரம சிருஷ்டிக் கோலமாகும். லயக்கிரமம் என்பதற்கு ஒடுங்கும்முறை என்பது பொருள்; உலகப்பொருள்கள் அனைத்தும் இறைவனிடம் ஒடுங்கி ஒரே பிண்டமான யானையின் உடம்புபோல் பருமனாய்க் கிடந்து ஒடுங்குதலாகும். அதிலிருந்து திரும்பவும் தோன்றுவது லயத்தின் பின் சிருஷ்டி தொடங்குவதைக் குறிக்கும். யானையின் நான்கு பாதங்கள் பிண்டாகார ஹ்பவஜடத்வம், சுவாச சூஷ்மம், வாஜி ஜீவத்வம், பிராணாயாமம் இவைகளைக் குறிக்கின்றது. இவை யானையைப் போல ஆத்ம ஞானத்தில் தோன்றி துதிக்கையை ஒத்த சுஷு்ம்னையில் நிலைநிற்கும். யானையின் மேல் வைக்கும் அம்பாரி முதலியன வெளித்தோற்ற அண்டாகாரமாகும். உற்பவ, சூஷ்ம, ஜீவ, மாயா ஞானங்கள் ஆத்ம ஞானத்திலும், அவை ஈசுவர சைதன்யத்தும், ஈசுவர சைதன்யம் பிரம சைதன்யத்திலும் லயிக்கிறது என்பதைக் குறிக்கிறது.

குதிரை வாகனம் ஸம்ஹார கோலமாகும். தர்ம, அதர்ம, காம, மோட்சங்களாகிய (அறம், பொருள், இன்பம், வீடு) நான்கு கால்களையும் கிரியை, ஞானம் எனும் இரண்டு காதுகளையும், பரஞானம் அபரஞானம் எனும் இரண்டு கண்களையும், விதியாகிய முகத்தையும், நிஷேதமாகிய வாலையும், ஆகமங்கள் என்கிற ஆபரணங்களையும், மந்திரங்கள் எனும் பாதஸரத்தையும், கடிவாளம் எனும் பிரணவத்தையும், அண்ட கோடிகளாகிய முதுகையும், உபநிடதங்களில் சேணத்தையும் கொண்ட வேதக் குதிரையில் இறைவன் சவாரி செய்கிறான் என்பதையும் உணர்த்துகிறது.

தேர்த்திருவிழாவில் தேரின் அமைப்பு அண்ட பிண்டத்திற்குச் சமமாகும், விசுவவிராட் சொரூபமே எட்டு அடுக்குகளாகும். உச்சியிலிருக்கும் கும்பம் சோடசாந்தம், அதற்கடுத்த கீழடுக்கு துவாத சாந்தம்; அதற்கடுத்து மஸ்தக ஆதிஸ்தானம்; அதற்கடுத்து மஸ்தக மத்தியஸ்தானம்; அதற்கடுத்து புருவமத்தியஸ்தானம்; நடுவில் தாங்கும் குத்துக்கால்கள் தத்துவக் கால்கள்; முன்மூன்று துறைகள் மூன்று கண்கள். பின்னை,

சிகையும் இடவலக்காதுகளாகும்; இறைவன் எழுந்தருளி யிருக்கும் கேடயபீடம் முப்பாற்; குதிரைகள் சூரிய சந்திர கலைகள்; சாரதி, அக்கினிக்கலை இவை நாசியாகும். அடுத்த அடுக்கு கண்டஸ்தானம்; அதை அடுத்த அடுக்கு இருதயஸ்தானம்; அதை அடுத்த அடுக்கு நாம; அதற்கு அடுத்த அடுக்கு குண்டலினி ஸ்தானம்; பத்துச் சக்கரங்களும் தசவாயுக்கள். இறைவன் இதற்குக் கர்த்தா தான் ஒருவனே என்றுணர்த்தி இவ்வாறமைந்த பிண்டத்துவ சரீரமாகிய இரதத்தில் தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்திஅசைவற்ற மனத்தை உந்தி, குண்டலினியிலிருந்து நாபிக்கும் அதிலிருந்து கண்டத்திற்கும், அதிலிருந்து வாய்க்கும் ஏற்ற லயப்படுத்தி, முறையே இரதக் குதிரையாம் நாசிக்கும் அங்கிருந்து கண் வழியாகவும், நடுவழியாகவும் மேல்நோக்கி ஆறாம் அடுக்காகிய புருவமத்திக்கும் ஏற்றி லயப்பட்டு சும்மா இருந்தபடி இருக்கும் நித்திய சுகியாய் இருந்திடல் வேண்டும் என்ற லயக்கிரமத்தைக் காட்டுகிறது.

தீர்த்தவாரி அன்று காலையில் பெருமாள் திருவீதியில் உலா வருவார். இறைவனின் தொழில்கள் தீர்த்தவாரியன்று ஒரே காலத்தில் ஒரே நாளில் தொகுத்துக் காட்டப்படுகின்றது. பொங்கித் ததும்பிப் பூகணமாய் ஏக உருவாய்க் கிடக்கும் இறையின்ப வாரியில் ஆன்மாக்கள் முற்றும் ஆழ்ந்து ஆனந்திப்பதைத் தீர்த்தவாரி குறிக்கின்றது.

நமது ஆலயத் திருவிழாக்கள் யோக நெறியையும் ஸ்தூல உலகிலுள்ள உபயதீஷா முறைகளையும் சூக்கும உலகில் நடைபெறும் உண்மைத் தீஷா மார்க்கத்தையும் விளக்குகின்றன. அதனால் அங்கு கொடியேற்றப்படும்போதும், மற்ற கொண்டாட்டங்களில் கொடியேற்றுவதுபோல் அல்லாமல் பட்டமானது இடகலைப்போலக் கொடி மரத்தை வளைந்து வளைந்து சுற்றி மேலேறுவது கவனிக்கத்தக்கது. குண்டலினி குடிலை என்ற சொற்கள் வளைந்தது என்று பொருள்படுவன.

மனிதன் பல உடம்புகளை உடையவன். இவ்வுடம்புகளிலுள்ள ஆதாரங்களை ஒன்றோடொன்று இணைப்பதற்குச் செய்யும் யோகப் பயிற்சிமுறை சித்திநெறி எனப்படும். இம்முறையில் முத்தியடைந்தவர் வித்தகச் சித்தர்கள் எனப்படுவர். இவர்கள் குருநாதர்களாக வந்து பக்குவமுடை

யோருக்குப் பயிற்சி அளித்து யோக நெறியில் பழக்கி அவரைப் பூரண மனிதனாக்குவர்.

ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பல பொருள்களுள் ஒன்று இந்தச் சித்தி நெறியாலாகும் ஆன்ம முன்னேற்றமும் முத்தி நிலையுமாகும். அன்றாட ஆலய வழிபாடும் அது அறிகுறியாக உணர்த்தும் ஒழுக்கத்தோடொட்டிய உலக வாழ்க்கையும், மனிதனை முத்தி நிலையிற் சேர்க்கும் சுற்றுப் பாதையாகும். அது பொதுமுறை. ஆலயங்களின் சிறப்பு நிகழ்ச்சிகளாகிய கொடியேற்றத் திருவிழாக்களோ அவனை முத்தியிற் சேர்ப்பிக்கும் செங்குத்தான குறுக்குப் பாதைகள். அங்கு ஆச்சாரியார் கொடியேற்றுவது குருநாதர் பக்குவான்மாக்களிடம் குண்டலினியை எழுப்புவதைக் குறிக்கும்.

“முதல் திருநாளன்று அன்ன உடம்பும் பிராண உடம்பும் அவற்றின் ஆதாரங்களும் பூரண நிலையடையும்.

இரண்டாந் திருநாளன்று இச்சையுடம்பும்,

மூன்றாம் நாள் அவருடைய உருவ மன, அருவ மன உடம்புகளும் பண்பட்டு,

நான்காம் திருநாளில் அவனுடைய விஞ்ஞான உடம்பும்,

ஐந்தாம் திருநாளில் அவனுடைய ஆனந்தமய கோசமும் பூரணப் பிரக்ஞையுறும். அப்போது அவன் அன்பு, அறிவு, ஆற்றல் மூன்றிலும் மக்களும் தேவரும் மெச்சும் நிலை எய்துவான். இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பான். பிறப்பிறப்பைக் கடந்தவனாவான், பேரின்பப் பிழம்பாயமர்ந் திருப்பான், ஜீவன்முத்தர் எனப் பெயர் பெறுவான். அதனை விளக்குவதே கருடசேவை, ரிஷப வாகன காட்சி ஆகியவையாகும்.[4]

இந்த ஜீவன்முத்தருள் ஒருசிலர், தாம் பிறவிப் பிணியை கடந்தவராயினும் உலக நன்மையின் பொருட்டு மாறி மாறி உலகிற் பிறந்து இறைவனுடைய விகாசமுறைத் திட்டத்தை யுகங்கள்தோறும் இங்கு நடத்திக் கொண்டிருப்பர். அவரே அதிகார முத்தரென்று அழைக்கப்படுவர். அவருடைய திருக்கூட்டமே பழவடியார் கூட்டமென்றும் ஆறாந் திருநாளன்று அதிகார முத்தருக்குரிய சில பேறுகளைப் பெறுவர். ஏழாம்

திருநாளன்று அவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் அதிகாரியாகின்றனர். அதனைக் குறிப்பதே அன்று இறைவன் பிரம்ம விஷ்ணு ருத்திராம்சங்களென்ற மூன்று மூர்த்தங்களாகப் புறப்பாடு செய்தல் ஆகும். ஏழுக்கு மேலுள்ள நிலைகள் சூரிய மண்டலத்திற்கப்பாற்பட்ட அண்டத்துக்குரிய நிலைகள். அண்டத்தின் உறுப்புக்களையும் .உலகங்களையும் புவனங்களையும் உருப்படுத்திக் காட்டுவதே ரதம் அல்லது தேரோட்டம்.

நம் ஆலயங்களில் நித்திய, நைமித்திக என்ற இருவகை வழிபாடுகள் நடைபெறுகின்றன. அவற்றுள் நித்தியம் பக்தி ஞானவகையைச் சேர்ந்ததாகும். குண்டலினியை கிளப்பிக் கொடியேற்றி நடைபெறும் நைமித்திகங்களாகிய திருவிழாக்கள் யாவும் கர்மயோக நெறிகளாகும். சாதாரண காலங்களில் அடியார்கள் ஆலயஞ்சென்று இறைவனை வழிபட வேண்டி யிருக்க, கர்மநெறி காட்டும் உற்சவ மூர்த்திகளானவர் திருவிழாக் காலங்களில் காலை மாலை தவறாமல் தெருத்தெருவாய் அலைந்து நம்வீடு தேடி வந்து கதவைத் தட்டி அருள்புரிவது கவனிக்கத்தக்கது. நாம் அடியாராயினும் அல்லாராயினும், கற்றாராயினும், மற்றாராயினும், பக்தராயினும், பாவிகளாயினும் பொருட்படுத்தாமல், அனைவர் வீட்டு வாசலிலும் வந்து நின்று மேளத்தை ஒலித்துத் தரிசனங் கொடுக்கக் காத்து நிற்பது கர்ம நெறியின் மிக முக்கியமான அம்சமாகும்.[5] அவ்வாறு விருப்பு வெறுப்பின்றி உயிரினங்கள் யாவற்றிற்குமே அன்புத்தொண்டு செய்து நிற்பதே கர்மநெறியின் உயிர்நாடி.

இவ்வாறான செய்திகளை ஆலயத் திருவிழாக்கள் மூலம் அறியமுடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. Daniel Smith, H., op.cit.,p.27
2. சொக்கலிங்கம், அ. 1952, பக். 105 - 112.
3. ஆறுமுக நாவலர், கே., 1991, பக்.140-167.
4. சொக்கலிங்கம், அ. 1952, பக்.154.
5. மேலது, பக்.155

## 6. திருவிழாக்களும் சமுதாயமும்

திருவிழாக்கள் கோயில்களில் ஆண்டுதோறும் வரிசைக் கிரமப்படி நடத்தப்படுகின்றன. மக்களின் ஆன்மீகப் பண்பாட்டை வளர்க்கவே இவை நடத்தப்படுகின்றன. சமுதாயத்தின் அனைத்து மக்கள் பிரிவினரும் கோயிலில் இவ்விழாக்களில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். திருவிழாக்கள் என்ற ஒருவகை தொடர்புச் சாதனம் கோயில் சமயிகளுக்கும் மக்களுக்குமிடையே ஒரு உறவை ஏற்படுத்து கிறது. கோயில் சமயிகள் மக்கள் மத்தியில் ஒரு பாதிப்பை அல்லது விளைவை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடுதான் விழாக்களை நடத்துகின்றனர்.

தத்துவ சமயச் சிந்தனைகள் திருவிழாக்களின் பொருளாக அமைந்துள்ளன. அவற்றை உணர்ந்து கொள்ளும் விதத்தில் திருவிழாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாதாரண மக்கள் திருவிழாக்களின் உண்மையான பொருளை அறிந்து கொள்ளாமல்தான் இருக்கிறார்கள். அவை அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சியாகவே அமைந்துள்ளன. ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றவர்கள் திருவிழாக்களின் பொருளை உணர்ந்து தங்களை நெறிப்படுத்திக் கொள்கின்றனர். திருவிழா நிகழ்ச்சிகள் இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஏதோ ஒரு பொருட்காட்சியாகவே இருக்கின்றன. உண்மையில் திருவிழாக்கள் அவர்களுக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றன. சமூகத்தில் அனைவரும் கோயிலில் கூடுகின்றனர். கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்வதற்கு கோயில் திருவிழாக்கள் ஒரு களமாக அமைகின்றது. கருத்து முரண்பாடுகளை கொண்ட பல்வேறு சமூகப் பிரிவினரும் இறைவன் முன்னிலையில் அனைத்து வேறுபாடுகளையும் மறந்து ஒன்றுபடுகின்றனர். இன, பிரதேச உணர்வுகளைக் கடந்து ஒருமைப்பாடு நிகழ்கின்றது. எந்த ஒரு

சமூகத்தினருக்கும் சார்பாக இறைவன் இல்லை. அவன் எல்லா வற்றையும் கடந்து எல்லோருக்கும் அருள் புரியவே திருவிழாவில் வெளியே உலா வருகிறார். ஆதலால் திருவிழாக்கள் சமூக ஒருமைப்பாட்டையும், நமது ஆன்மீகப் பண்பாட்டையும் வளர்க்க உதவுகின்றன. மகோத்சவங்கள் தேசிய அளவில் பெரிதாக நடைபெறும் நிகழ்ச்சிகளாக இருக்கின்றன.

ஒருநாள் முதல் இருபத்தொரு நாட்கள் வரை நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் மக்கள் பங்குபெறும் முறைகளிலிருந்து சில உண்மைகளை அறிந்துகொள்ள முடிகின்றது. ஒரு சமூகத்தில் காணப்படும் பல்வேறு முரண்பாட்டுக் கூறுகள் கோயில் திருவிழாக்களில் பிரதிபலிக் கின்றன. சமயக் கட்டுப்பாடுகள் இன்றளவும் கோயிலின் நடை முறையில் வெளிப்படத்தான் செய்கின்றன. ஜாதிப்பிரிவுகளை மையமாகக் கொண்ட சமூகத்தில் கோயில் திருவிழா நிகழ்ச்சி களில் சிலருக்கு சில திருவிழாக்களில் முக்கியத்துவம் அளிக்கப் படுவதைப் பார்க்கலாம். பல கோயில்களில் தேர்த் திருவிழா நடைபெறும்போது சில ஜாதியினருக்கு முன்னுரிமை முதலில் நிற்பதற்கு அளிக்கப்படுகிறது. அதுபோன்று திருவரங்கத்தில் கிருஷ்ண ஜெயந்தியின்போது கிருஷ்ணர் யாதவகுல மண்டபத்திற்கு கண்டிப்பாக வந்து தங்கி அக்குலத்தவருக்கு அன்று முதல் மரியாதை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது காலம் காலமாக நடைபெறுகின்றது. அதுபோன்று திருமங்கை மன்னன் வேடுபறி நிகழ்ச்சியில் கள்ளர் குலத்தினருக்கு பெரும் மரியாதை அன்று அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு திருவிழாவிலும் வாகனங்கள் ஒவ்வொரு ஜாதிப் பிரிவினரின் மண்டபங்களில் தங்கிச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாகனங்கள் வெளியே செல்லும்போது சில வேளைகளில் சில திருவிழாக்களில் கோயிலின் உள்ளே திருச்சுற்றில் மட்டுமே உலா வரும். அப்போது அந்தணர்கள் மட்டுமே அதிகப்பங்கு எடுத்துக் கொள்கின்றனர். பெரும்பான்மையான திருவிழாக்களில் அந்தணர் குடும்பங்களே அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறது. பொதுவாக உள்ளேயோ வெளியேயோ வாகனங்களைத் தூக்கிச் செல்வது என்பது அந்தணர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. காலம் காலமாக இந்த உரிமையை அவர்களே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில உலாக்களில் சில குறிப்பிட்ட பகுதிக்கு அப்பாற் அந்தணர் அல்லாதவர் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மக்கள் கூட்டத்தினர் சில குறிப்பிட்ட விழாக் களையே விரும்பி பார்க்க வருகின்றனர். அனைத்து திருவிழாக் களின் தன்மையை, இயல்பை அவர்கள் இதுவரை சரிவர உணர்ந்து கொள்ளவில்லை. தேர்த்திருவிழா, வைகுண்ட ஏகாதசி, உறியடி உற்சவம், வேடுபறி, தெப்பத் திருவிழா, ஆடிப்பெருக்கு, ஊஞ்சல் போன்ற சில குறிப்பிட்ட நாள்களிலேயே மக்கள் பங்கெடுக்கின்றனர். திருவிழாக்களின் உண்மை இயல்புகளையோ உண்மைப்பொருளையோ அவர்கள் உணர்ந்ததாக இல்லை. திருவிழாக்களில் மக்கள் பங்குகொள்ளும் தன்மையைப் பொறுத்து சமூகப் பிரிவுகளின் இயல்பை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஒரு திருவிழாச் சடங்கானது பங்குபெறுபவர்கள், காலம், இடம் ஆகியவற்றைஉடட்படுத்துகிறது.[1] ஒரு திருவிழாச் சடங்கில் யாரெல்லாம் பங்கு எடுத்துக் கொள்கின்றனர்? குருக்கள் அல்லது பட்டர்கள் மட்டுமே பங்கெடுத்து கொள்கின்றார்களா, அல்லது பிற மக்கள் தொகுதியோ அல்லது உபயதாரர் குழுவோ பங்கெடுத்துக் கொள்கிறதா என்பதும் அவர்களிடையே காணப்படும் உறவுகளின் அடிப்படையிலும் நாம் ஒரு சடங்கு நிகழ்ச்சியை ஆராயலாம். சில சடங்குகளில் பிராமணர்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்கின்றனர். கூடுதலாக சில உபயதாரர்கள் மட்டுமே அதில் பங்கெடுத்துக் கொள்வதைப் பார்க்கலாம். கோயிலின் உள்ளே நடைபெறும் பெரும்பான்மையான திருவிழாச் சடங்குகளில் இறைவனுக்கு அளிக்கப்படும் பொருள்கள் மீண்டும் சில குறிப்பிட்ட வைணவ பிராமண வகுப்பினருக்கும் சில உபயதாரர்களுக்கும் மட்டுமே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. பிற ஜாதியினரோ மக்களோ அனுமதிக்கப்படவில்லை. அதுபோல கிருஷ்ண ஜெயந்தி கோனார்களுக்கும் திருமங்கை மன்னன் வேடுபறி நிகழ்ச்சிகளில் கள்ளர் ஜாதியினருக்கும் முதல் மரியாதை வழங்கப்படுகிறது. சில திருவிழாக்களில் வாகனங்கள் சில ஜாதியினரின் மண்டபங்களுக்கு மட்டுமே எடுத்துச் செல்லப்படுகின்றன. இது பரம்பரை பரம்பரையாக நிகழ்கிறது.

அதேபோன்று சில திருவிழா சடங்குகள் குறிப்பிட்ட இடத்திற்குள்ளேயே கோயிலில் நடைபெறுகிறது. உலா வருவதும் குறிப்பிட்ட இடத்திற்குள்ளேயே கோயிலுக்குள் நடைபெறுகிறது. வெளியே கொண்டு வருவதில்லை. சில குறிப்பிட்ட மண்டபம் அல்லது வாசலுக்கு உள்ளே அந்தணர் அல்லாதார் அனுமதிக்கப்படுவதில்லை.

சில திருவிழாக்கள் நடைபெறும்போது ஊர் மக்கள் அன்று எவ்வாறான ஒழுக்க விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் நடத்தையை கட்டுப்படுத்து கிறது. சில விரதங்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்; நோன்புகளை கடைப்பிடிக்க வேண்டும். உணவு அருந்துவதிலும், உடலை தூய்மையாக வைத்துக் கொள்வதிலும் சில தடைகள் (Taboos) உள்ளன. பொதுவாக சில அறக்கோட்பாடுகளை இயற்கையாகவே திருவிழாக்கள் உடையனவாக இருக்கின்றன.

பெரிய திருவிழாக்கள் ஒரு கூட்டுறவு மனப்பான்மை (Co-operative) யுடன் செயற்படுகிறது. பல்வேறு சமூகப் பிரிவினரும் ஒற்றுமையுடன் பங்கு கொள்கின்றனர். சில திருவிழாக்களில் சில வைணவ பிராமணர்களே பங்கு கொள்கின்றனர். சில விழாக்களில் சில ஜாதியினரே அதிக முக்கியத்துவம் வகிக்கின்றனர் என்பதை திருவரங்கத் திருவிழாக்கள் மூலம் அறிய முடிகின்றது. கூட்டுறவு மனப்பான்மையில் நடைபெறும் பெரிய திருவிழாக்களே பெரும்பான்மையும் சமூக ஒற்றுமைக்கு வழி வகுக்கின்றன. ஒரு திருவிழாவின்போது ஒவ்வொரு சமூகப் பிரிவினரும் தங்களுடைய முக்கிய பங்கு என்ன? தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்கின்றனர். பல்வேறு குலத்தினர் பல சத்திரங்களை கோயிலைச் சுற்றி கட்டியுள்ளனர். அவ்வக்கால திருவிழாக்களில் அவர்களின் பணி நடைபெறுகின்றது.

எவ்வாறாயினும் ஆன்மீகப் பண்பாட்டை காலந்தோறும் கோயில் திருவிழாக்கள் காத்து வருவதோடு மக்களுக்குச் சில கருத்துக்களை காலந்தோறும் சொல்லி வருகின்றன. அக்கருத்துக்கள் பரம்பரை பரம்பரையாக சமூகத்தில் பரவிக்கொண்டு புதிய தலைமுறையினருக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தியும் வருகின்றன. ஆன்மீக பலத்தையும், எத்தகைய சமூக வேறுபாடும் கருதாது கர்மநெறியை மக்கள் கடைப்பிடித்து ஒழுகவும் திருவிழாக்கள் திரும்பத் திரும்ப மக்களுக்குப் போதிக்கின்றன. திருவிழாக்களின் கூடார்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் அதை ஒரு கேளிக்கையாக எடுத்துக் கொள்கிறார்கள். புரிந்தவர்கள் சிறந்த ஆன்மீகவாதிகளாக கர்ம நெறியாளர்களாக உருவாகின்றனர். இறை நம்பிக்கை இல்லாத வர்கள் திருவிழாக்களை ஒரு மூடநம்பிக்கையாகவும் கருதுகின்றனர்.

## முடிவுரை

திருவரங்கம் ரங்கநாதர் கோயில் திருவிழாக்கள் பாஞ்சராத்ர ஆகமங்களையும் குறிப்பாக பரமேஸ்வர சம்கிதையையும் அடியொற்றி அமைந்தவை. இராமானுசர் இக்கோயிலின் நித்ய, நைமித்திக, காமிய உற்சவங்களின் நடைமுறைகளையும் அவற்றில் ஈடுபட வேண்டிய அலுவலர்கள் பணியாளர்கள் வேலைப் பிரிவுகளையும் முன்பே வரையறுத்துள்ளார் என்பதை கோயிலொழுகுச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவை இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

இக்கோயிலின் பொருளாதார நிலையும் வசதியும் திருவிழாக்கள் ஒழுங்காக ஆண்டுதோறும் நடைபெற வசதியாக உள்ளது. ஏராளமான உபயதாரர்களையும் அறக்கட்டளை களையும் உடையது இக்கோயில். ஆதலால் திருவிழாக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. நல்ல நிர்வாகமும் பொது மக்களின் ஆதரவும் உற்சவங்கள் சரியான முறைமையில் நடைபெற உதவியாகவுள்ளன.

பாஞ்சராத்ர ஆகமங்கள் உற்சவ சுழற்சியினை (Cycle of festivals) ஓர் ஆண்டுக்கு வரிசைப்படுத்தி கூறியபோதிலும் இக்கோயிலில் பருவகாலத்தினை அடியொற்றியே எல்லா உற்சவங்களும் கிரமமாக நடைபெறுகின்றன. சித்திரை மாதம் கோடை உற்சவம் தொடங்கி பங்குனி மாதத்தில் ஆதி பிரம்மோத்சவம் வரை கிரமமாக நடைபெறுகின்றன. அவ்வக்கால பொதுவான சில விழாக்களான (Sectarian festivals) தீபாவளி, பொங்கல், கார்த்திகை போன்ற நாள்களிலும் வருடப் பிறப்பு நாள்களிலும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. இறைவன்

ஓய்வெடுப்பதிலிருந்து விழித்தெழுந்து உலகை இயக்கும் தொழில் களைப் புரிந்தும் தீய சக்திகளை அழித்தும் தனது பணியைத் தொடர்கிறார். இச்செயல்களை உள்ளடக்கியே விழாக்கள் எடுக்கப்படுகின்றன. வாகனங்களும் சடங்குகளும் அவரது ஒவ்வொரு செயல்களையும் குறியீடாக உணர்த்துகின்றன. தனிப்பட்ட எந்தவொரு குழுவிற்காகவும் மட்டுமல்லாமல் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நன்மையளிக்கும் விதத்தில் இறைவன் புறப்பட்டு அருள்புரிவது என்பது கர்மநெறியின் சிறப்பை மக்களுக்கு உணர்த்துவதற்காகவும் மக்கள் சமூக வேறுபாடுகள் கருதாது, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு கருதாது உழைக்க வேண்டும் என்ற செய்தியை கூறுவதற்காகவுமேயாகும்.

கொடியேற்ற நிகழ்ச்சி முதல் ஒரு விழா முடிவது வரையிலும் இறைவனின் தொழில்கள் எடுத்துக் காட்டப் படுகின்றன. இச்செய்திகள் மக்கள் மனதில் ஆண்டுதோறும் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகின்றன. புதிய தலைமுறை யினருக்கும் இதனால் மீண்டும் அச்செய்தி வலியுறுத்தப்படுகிறது. ஆன்மீக நெறியில் மக்கள் செல்வதற்கும் வழிவகுக்கிறது. இவ்வாறான செய்திகள் திருவிழா போன்ற சாதனங்கள் மூலம் கோயில் சமயிகள் மக்களுக்கு எடுத்துரைக்கின்றனர். இதன் விளைவாக சமூகத்தில் ஒருமைப்பாடும், மகிழ்ச்சியும், ஆன்மீக சிந்தனைகளில் ஈடுபாடும், அறங்களும் தழைக்க ஏதுவாகின்றது.

பொதுமக்கள் பங்குகொள்கின்ற பெரும்பான்மையான விழாக்கள் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துகின்றன; கருத்து பரிமாற்றத்திற்கு இடமளிக்கின்றன. மக்களின் பங்கு இல்லாத விழாக்களும் சில உள்ளன. இருப்பினும் அவை கோயிலின் உள்ளேயே நடத்தப்படுவனவாக இருக்கின்றன. பாரம்பரியமாக அந்தணர்கள் சடங்கு நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் பெற்றிருப்பினும் அச்சடங்குகளை கற்றறிந்தவர்கள் என்ற முறையில் பாரம்பரியமாக அது அவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளன. முக்கிய விழாக்களில் குறிப்பிட்ட ஜாதியினர் முதல் மரியாதை பெறுகின்ற நிகழ்ச்சிகளும் உண்டு. பொதுவாக விழாக்கள் சமூகத்தின் நன்மைக்கே பயன்படுவன. தூய்மையும், அன்பும், அறமும், நற்பண்புகளும் விழாக்களில் போதிக்கப்படுகின்றன.

திருவிழா என்ற சாதனம் சில குறிப்பிட்ட குணங்களை யுடையது. ஒரு வைணவக் கோயில் திருவிழா எவ்வாறு நடைபெறும் என்பதையும் அதன் குணங்களையும் தெரிய முடிகிறது. இறைவன் புறப்படும்போது அளிக்கப்படும் முதல் மரியாதை, முன்னே செல்வோர், தடைகள் நீங்க சாட்டை யடிப்பதும், மணி அடிப்பதும், வாத்தியங்கள் பறை ஒலிப்பதும், யானை முன் செல்வதும், அந்தணர்கள் வேதம் ஓதி பின் செல்வதும் ஒரு சீரான முறைவைப்பாகும் அல்லது அமைப்பாகும். வாகனங்கள் செல்லும் ஒவ்வொரு இடமும் தூய்மைப்படுத்தப்பட்டு, கோலங்கள் இடப்பட்டு, இறைவன் நிற்கும் இடங்களின் மேல் மாலை தோரணங்கள் தொட்டில்கள் கட்டப்பட்டு காணப்படும். அவ்வவ்விடங்களில் நிற்கும்போது அல்லது ஓய்வு எடுக்கும்போது மஞ்சனம் அளிப்பதும் உணவு அளிப்பதும் காற்று வீசுவதும் அந்தணர் கடமைகள். இவை முறையாக ஒவ்வொரு ஓய்விலும் நடைபெறுகிறது. தொடர்ந்து அரையர் சேவை நிகழும் இடங்களும் முறைமைப்படுத்தப் பட்டுள்ளன.

இறைவன் படைத்தல் தொழிலைச் செய்யப் புறப்படும் போது ஒரு வாகனமும், அழித்தல் தொழிலைச் செய்யும்போது ஒரு வாகனமும், காத்தல் தொழிலைச் செய்யும்போது ஒரு வாகனமும், அருளல் தொழிலைச் செய்யும்போது ஒரு வாகனமும் முறைமைப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு வாகனங் களும் அவற்றின் இயல்புகளும் முறைமைப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு உற்சவமும் நடைபெறுவதற்கான மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நட்சத்திரம், நாள், காலம் ஆகியவை ஒழுங்காக திருவிழாக்களில் பின்பற்றப்படுகின்றன. திருமஞ்சனம் அளிப்பது, திருவந்திக் காப்பு காட்டுவது, தீர்த்தவாரி அமைப்பது போன்ற நிகழ்ச்சிகள் திருவிழாக்களின் சில உட்கூறுகளாக அமைகின்றன. புராண நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும், ஆழ்வார்கள் ஆச்சாரியர் களுக்கும் இறைவனுக்குமுள்ள உறவை எடுத்துக்காட்டுவதும் வழக்கமான நிகழ்ச்சிகளாகும்.

வேடுபறி, வையாளி, தேரோட்டம், தெப்ப உற்சவம், சொக்கப்பனை, ஊஞ்சல், திருக்கலியாணம், கலகோத்சவம,

உபயநாச்சியார்களுடன் புறப்பாடு போன்றவை மக்களால் மிகவும் விரும்பி மகிழ்ச்சியுடன் பங்கேற்கும் பெரிய நிகழ்ச்சிகளாகும். ஒவ்வொரு வாகனத்திலும் இறைவன் பவனி வரும்போது அவை மக்களுக்குப் பெரிய காட்சி விருந்தாக அமைகின்றன. இத்தகைய சாதனங்கள் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை விளைவிக்கும் என்று சமயிகள் கருதி இவ்வாகனங் களைப் பயன்படுத்தியுள்ளனர். தத்துவ, சமயச் சிந்தனைகள் பல உற்சவங்களில் இழையோடியுள்ளன. சாதாரண மக்கள் அவற்றைப் புரிந்து கொள்ள காலம் தேவைப்படும். பக்குவப் பட்ட ஆன்மாக்கள் அவற்றைப் புரிந்து கொள்வர்.

விழாக்கள் நடத்தப்படும் முறைகளிலும் போக்குகளிலும் கோயிலுக்கு கோயில் வேறுபாடுகள் காணப்படுவதுண்டு. ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு ஆகமங்களைப் பின்பற்று கின்றன. பொதுவான விழாக் குணங்களில் ஒற்றுமை காணப் படினும் தனிப்பட்ட முறையில் சில வேறுபாடுகள் காணப்பட வாய்ப்புண்டு. அவை மேலும் ஆய்வுக்குரியவையாகும். நிகழ்ச்சி முறைமைகளின் மாற்றத்திற்கான காரணங்கள் மேலும் ஆய்வுக் குரியனவாகும். ஒரு விழா அனைத்து வைணவக் கோயில்களிலும் எவ்வாறு நடைபெறுகின்றன. அவற்றிடையே காணப்படும் வேறுபாடுகளும் வேறுபாட்டிற்கான காரணங்களும் ஆய்வுக் குரியதாகும். சமூகத்திற்கும் திருவிழாக்களுக்குமுள்ள உறவுகள் இடத்திற்கிடம் வேறுபட வாய்ப்புண்டு. அவையும் மேலும் ஆய்வுக்குரியவையே. விழாக்கள் கோயில்களில் ஒழுங்காக நடைபெறுவதற்கு சமூக, பொருளாதார காரணங்களும் உண்டு. அவற்றை ஆராய்வதும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு கோயிலும் தனித்தன்மைகளும் பொதுத்தன்மைகளும் இணைந்தே காணப்படுவனவாகும். அவற்றை எடுத்துக்காட்டுவது பிற்கால ஆய்வுகளின் நோக்கமாகக் கொள்ளலாம்.

செய்தித் தொடர்பு நோக்கில் மேலும் விரிவான ஆய்வுகள் கோயில் திருவிழாக்கள் பற்றிய ஆய்வுகளில் மேற்கொள்ளப்பட வாய்ப்புண்டு. பல ஆய்வுப்பணிகள் அவ்வாறான நோக்கில் விரிவாக சில கோயில்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். கோயில் போன்ற சமய நிறுவனங்கள் பாமர மக்களுக்குச் சில செய்திகளைச் சொல்ல

வேண்டும் என்பதற்காகவே நிறுவப்பட்டவை. பரார்த்த பூசைக்காக, உலகத்தின் நன்மைக்காக ஏற்பட்டவை. தீக்கை பெற்ற துறவிகள் ஆன்மார்த்த பூசையையும் வழிபாட்டையும் வீட்டிலேயே அல்லது தனியாகவே செய்து கொள்வர். பொது மக்களின் நலனுக்காகவும் மக்களுக்கு ஆன்மீகச் சிந்தனைகளை எடுத்துரைப்பதற்காகவும் அவர்கள் பின்பற்றுவதற்காகவும் சமயச் சிந்தனைளை பரப்பும் நோக்குடனும் கோயிலும் கோயில் திருவிழாக்களும் விமரிசையாக நடத்தப்படுகின்றன. கோயில் என்ற ஊடகமும் திருவிழா என்ற ஊடகமும் குறியீட்டுப் பாங்கில் செய்திகளை மக்களுக்குச் சொல்லுகின்றன. மக்களிடம் நல் விளைவுகளையும், பாதிப்புகளையும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் செயற்படும் சமய நிறுவனங்கள் கடைப்பிடித்த சாதனங்களையும் தெரிவித்த செய்திகளையும் அவை மக்களிடம் ஏற்படுத்திய விளைவுகளையும் செய்தித் தொடர்பு நோக்கில் ஆராய வாய்ப்புகள் உள்ளன. கோயிலும் திருவிழாக்களும் பாரம்பரிய செய்தித் தொடர்பு வடிவங்களாக உள்ளன; சாதனங்களாக உள்ளன. அவற்றில் பங்குபெறும் கலைஞர்கள், படைப்பாளிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், செய்தியாளர்கள், அலுவலர்கள் ஏராளமாக உள்ளனர். கோயில்கள் உண்மையில் ஒரு பெரிய நாளிதழ் நடத்துகின்ற நிறுவனம், தொலைக்காட்சி நடத்துகின்ற நிறுவனம்போல் செயற்படுவதைக் காணலாம். இதனால் தொடர்ந்து சமயம் பரப்புதலுக்கு எத்தகைய புதுமையாக்கங்களையும் மக்களின் பங்கேற்பையும் வரையறுக்கலாம் என்பதை ஆராயலாம். இதுபோன்ற திருவிழாக்களின் நிகழ்ச்சிகளை அமைப்பதில் மக்களின் பங்கேற்பும் (Participatory approach) அதிகமானால் திருவிழாக்களில் புதிய மாற்றங்களைக் கொண்டு வரலாம். பாதிப்பு ஏற்படுத்துவதில் நல்ல திருப்பு முனைகள் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படலாம். இவை மேலும் ஆய்வுக்குரியனவாகும்.

# துணை நூற்பட்டியல்


| | | |
|---|---|---|
| *1. ஆறுமுக நாவலர், கே.* | *1991* | **இந்துமத இணைப்பு விளக்கம்,** *பழனி முருகன் கோயில், பழனி.* |
| *2. சொக்கலிங்கம், அ.* | *1952* | **ஆலயங்களின் உட்பொருள் விளக்கம்** *(2 தொகுதிகள்) சைவசித்தாந்தக் கழகம், சென்னை.* |
| *3. பதிப்பாசிரியர்* | *1996* | **இக்வாகு குயதனம் என்னும் ஸ்ரீரங்க மஹாத்மியம்.** *லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை.* |
| *4. மாயாண்டி, ஆ*<br>*5. ராஜநாயகம், கே.*<br>*(பதிப்பு) 1996* | *1996* | **திருவரங்கம் திருக்கோயில்,** *ஸ்ரீரங்கம்* **அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,** *ஸ்ரீரங்கம். (உற்சவ கால அட்டவணை) ஸ்ரீ ரங்கம்* |
| 6. Battacharya, N.N. | 1982 | **History of the Tantric Religion,** Manohar, New Delhi. |
| 7. Chambakalakshmi, R. | 1981 | **Vaishnava Iconography in the Tamil Country.** Orient Longman, New Delhi. |
| 8. Daniel Smith, H. | 1982 | "Festivals in Pancharatra Literature", **Religious Festivals in South India and Sri Lanka** Monohar - New Delhi. |
| 9. Guy R. Welbon<br>Glenn E. Yocum (ed) | 1982 | **Religious Festivals in South India and Sri Lanka.** Manohar, New Delhi. |
| 10. James L, Martin | 1982 | "The Cycle of Festivals at Parthasarathy Temple", **Religious festivals in South India and Sri Lanka** Manohar, New Delhi. |
| 11. Jeannine Auboyer | 1969 | **Sri Renganathaswami Temple - A temple of Vishnu in Srirangam,** Srirangam. |

12. Jouvenue Dubriel. G 1987 **Dravidian Architecture**, Asian Educational Service, New Delhi.

13 Kulathuran, G 1989 **Tanjore Nayak Mandapas,** Tamil University, Tanjore

14. Karen L.Merry 1982 'The Hindu Festival Calendar', **Religious Festivals in South India and Sri Lanka,** Manohar, New Delhi.

15. Saletore, R N. 1982 **Vijayanagara Art.** Sundeep prakashan, Delhi

16. Shyam Parmer 1972 **Traditional Media,** Motilal Banarsidas, New Delhi.

17. Srinivasan, K.R 1972 **Temples of South India,** NBT Calcutta

18. Srinivas R. Milkote 1997 **Communication for Development in the Third World** - Theory and Practice, Sage Publication, New Delhi

19 Suganne Hanschell 1982 'The Festival interlude . Some anthropological observations. **Religious Festivals in South India and Sri Lanka,** Manohar, New Delhi



ஸ்ரீ ரங்கம் கோபுரங்கள்



ஸ்ரீ ரங்கம் கோபுரங்கள்



பரமபத வாசல்



பரமபத வாசல் திறப்பு



பெருமாள் - நாசசியாா



பெருமாள் - நாச்சியார் - ஆழ்வார்



ஆழ்வார்கள்



ஆழ்வார்கள்



பெருமாள்



ஆழ்வார்கள்



ஆழ்வார்கள்



பெருமாள் - குதிரை வாகனத்தில்



பெருமாள் - குதிரை வாகனத்தில் 'வேடுபறி நிகழ்ச்சி'



யானை வாகனம்



ஹம்ச வாகனம்



சேஷ வாகனம்



ஹனுமந்த வாகனம்



தெப்ப உற்சவம்



தெப்ப உற்சவம் - பெருமாள்



திருவிழாவில் மக்கள்



தெப்பத்தில் பெருமாள்



தெப்ப உற்சவம் - இரவில்



ரங்கவிலாச மண்டபம்



கருட மண்டபம



நான்கு கால் உற்சவ மண்டபம்



நான்கு கால் உற்சவ மண்டபங்கள்



தேரோட்டம்



நான்கு கால் உற்சவ மண்டபம்



ரங்க விலாச மண்டபம் - முகப்பு



சேஷராயர் மண்டபம்



தேரோட்டம்